# கத்தோலிக்க திருமறை



## தரம் 6

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரிச்சுவடி

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |
| ஆய்த எழுத்து ஃ | | | | | | | | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க திருமறை

## தரம் 6

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு - 2014
இரண்டாம் பதிப்பு - 2015

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
இல.2/60, சுற்றுவட்டவீதி, திவுலபிடிய, சரஸ்வதி பிரசுராலயத்தில்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

உலகில் இலவசக் கல்வி வரப்பிரசாதத்தை வழங்கும் நாடுகள் மத்தியில் இலங்கை முன்னிலையிலுள்ள ஒரு நாடாக இருப்பது பாக்கியமாகும். நீங்களும் அவ்வுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான பாக்கியம் பெற்ற ஒரு மாணவனாயிருக்கிறீர்கள். உங்கள் எதிர்காலம் வெற்றிகரமாக அமைந்து நாட்டிற்கும் உலகிற்கும் பயன்மிக்கோராவதைக் காண்பதன் பொருட்டே அரசு இந்நூலை இலவசமாக வழங்குகின்றது. இதற்காக அரசிற்குப் பெரும் செலவு ஏற்படுகின்றது என்பதை நீங்கள் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். இந்தவகையில் உங்கள் பொறுப்பும் கடமையும் யாதெனில், இந்நூலை மிக நன்றாகப் பயன்படுத்தி சரியான அறிவினைப் பெற்றுக் கொள்வதாகும். அதன் மூலம் நாட்டிற்குச் செயற்திறன் மிக்க பிரசையாவதற்குத் தேவையான பலம் மிக்க அத்திபாரமொன்றை இட்டுக் கொள்வதற்கு உங்களுக்கு முடியுமாக இருக்கும்.

இலங்கையும் உலகின் ஏனைய நாடுகளுடன் சேர்ந்து சகல துறைகளிலும் முன்னிலை வகிக்க வேண்டும். அப்பயணத்தில் அறிவில் இற்றைப்படுத்தப்பட்ட உங்களைப் போன்ற மாணவர் பரம்பரையொன்று உருவாகுவது நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும் பலமாக அமையும்.

**அகில விராஜ் காரியவசம்**
கல்வி அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஒவ்வொரு பாடத்தினூடாகவும் அறிவு மேம்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு பாடத்தினதும் பாடத்திட்டம் எட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சீர்திருத்தப்படுவது உங்களுக்கு அப்புதிய அறிவை வழங்குவதற்காகவே. திருத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப பாடநூல்களை ஆக்கும் பொறுப்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைச் சாரும். புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப புதிதாக ஆக்கப்பட்ட பாட நூல்கள் 6 ஆம் தரம் மற்றும் 10 ஆம் தரங்களுக்கு 2015 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக 2016 ஆம் ஆண்டில் 1ஆம் தரம், 7 ஆம் தரம் மற்றும் 11 ஆம் தரங்களுக்கு புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

உங்களின் எதிர்காலத்தின் நன்மைக்குத் தேவையான அறிவைத் தரும் இலக்குடன் இப்பாடநூல்கள் உங்களுக்கு வழங்கப்படுகிறன. இவற்றை நன்றாகப் பயன்படுத்திப் பாடங்களைக் கற்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இலவசமாக பாடநூல்கள் வழங்குவதன் நோக்கம் நிறைவேறுவது உங்களின் உழைப்பினால் மட்டும் என்பதை நினைவுகூர விரும்புகிறேன்.

இப்பாடநூலை ஆக்குவதில் பங்களிபுச் செய்த எழுத்தாளர் குழுவிற்கும் பதிப்பாசிரியர் குழுவிற்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**திஸ்ஸ ஹேவாவிதான**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல
2015.07.27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்காணிப்பும் மேற்பார்வையும் (2015)**

திரு. திஸ்ஸ ஹேவாவித்தான : கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**வழிகாட்டல்**

திருமதி. கே.வீ. நந்தனி ஸ்ரீயாலதா : ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**ஆலோசனை**

மேதகு கலாநிதி மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை
மேதகு கலாநிதி ஒக்ஸ்வெல்ட் கோமிஸ் ஆண்டகை (ஓய்வு பெற்றவர்)
அருட்பணி தயா ஷெல்ட்டன் வெலிகட ஆராச்சி

**இணைப்பாளர்**

திருமதி. அ. குலரத்தினம் : உதவி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**பதிப்பாசிரியர் குழு**

அருட்பணி.எஸ்.அ. ஏ. பர்ணாந்து : விரிவுரையாளர், சமய விழுமியப் பிரிவு
தேசிய கல்வி நிறுவனம், மகரகம.

அருட்பணி.பியால் ஜானக பர்ணாந்து : தேசிய இயக்குனர், தேசிய கத்தோலிக்க திருவிவிலிய மறைக்கல்வி மத்திய நிலையம், கொழும்பு - 08.

அருட்பணி.டீ.எம்.டீ.ஏ.யூட் சீ. தசநாயக்க : வெளிவாரி விரிவுரையாளர், வடமேற்கு தேசிய கல்வியியல் கல்லூரி, பிங்கிரிய.

அருட்பணி. கால்டன் டீ சில்வா : விரிவுரையாளர், சமய விழுமியப் பிரிவு
தேசிய கல்வி நிறுவகம் மகரகம.

அருட்பணி. எம். ஜே. எல். பர்ணாந்து : உதவிக் கல்விப் பயணிப்பாளர்,
சமய விழுமிய பிரிவு, கல்வி அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர் குழு

அருட்சகோதரி. ரஞ்சி போல்துரை : பொறுப்பாளர் தமிழ்ப்பிரிவு, தேசிய கத்தோலிக்க மறைக்கல்வி மத்திய நிலையம், கொழும்பு - 08

திருமதி.தி.ஜெ.போ. அன்ரனி : அதிபர் (ஓய்வு நிலை)

செல்வி . பீ. ஏ. அசுந்தா பர்டில் சாந்தினி பெரேரா : அதிபர். மேமா/ பிலி/ புனித ஜோசப் மகளிர் வித்தியாலயம், நுகேகொட

செல்வி.துஷ்யந்தி தயாகுமாரி டீ. சில்வா : ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி பணிமனை, மினுவாங்கொட.

திரு. டப்ளியூ.எம்.பீ ரஞ்சன் பர்ணாந்து : அதிபர், மாதம்பே புனித செபஸ்தியன் மகா வித்தியாலயம், மாதம்பே.

செல்வி.ஆன் நிஷாந்தி ரத்னசிங்ஹ : ஆசிரியை, மேமா/ பிலி/ புனித ஜோசப் மகளிர் வித்தியாலயம், நுகேகொட.

செல்வி. ஆன் பிரன்சிஸ்கா இராஜலோசினி : ஆசிரியை சகல புனிதர்களின் மகளிர் மகா வித்தியாலயம், பொறள்ள.

## பதிப்பாசிரியர்(மொழி)

அருட்சகோதரி மேரிதஸ்நேவிஸ் லடிஸ்லாஸ் : அதிபர் (ஓய்வு நிலை)

## சித்திரம்

திருமதி.எம்.டீ. ஷமிலா பிரியதர்சனி : ஆசிரியை, சகல புனிதர்களின் மகளிர் மகா வித்தியாலயம், பொறள்ள.

## கணிணி பதிப்பும் வடிவமைப்பும்

செல்வி . செ.மேகலா : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## அட்டைப்படம்

சஜித் இஷான் ஹெட்டியாராச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


## திருவிவிலியம்

1. திருவிவிலியம் 1
2. ஐந்நூல் 5
3. நான்கு நற்செய்தி நூல்கள் 8

## விசுவாசம்

4. உலகப் படைப்பு 12
5. படைப்பின் பல்வேறு தன்மை 17
6. இறைவனின் உன்னத படைப்பு 21
7. இயேசுவின் பிறப்பு 26
8. இயேசுவின் பிள்ளைப் பருவம் 33

## அருளடையாளம்

9. அருளடையளங்கள் 37
10. புகுமுக அருளடையாளங்கள் 42
11. குணமளிக்கும் அருளடையாளங்கள் 48
12. பணி வாழ்வின் அருளடையாளங்கள் 53

## பத்துக் கட்டளைகள்

13. பத்துக் கட்டளைகள் 58
14. இறை அன்பு 61
15. ஞாயிறு தினத்தைத் தூய்மையாகக் கடைப்பிடிப்போம் 68
16. சகோதர அன்பு 75
17. பகைவரை அன்பு செய்தல் 82
18. திருச்சபையின் கட்டளைகள் 88

## செப வாழ்வு

19. செபம் 92
20. செபிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் 96
21. இயேசு கற்பித்த செபம் 104
22. அருள் நிறை மரியே 108
23. பொதுச் செபங்கள் 112
24. செபங்களை உருவாக்குதல் 119
25. தியானம் செய்தல் 122



அறிவைத் தேடி சுதந்திரம் மிக்க ஆனந்தத்துடன் நுழையுங்கள்

The National e-Learning Portal for the General Education

www.e-thaksalawa.moe.gov.lk





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

திருமறையானது இறைவார்த்தை, திருச்சபையின் பாரம்பரியங்கள் ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளதாகும். அதாவது திருவிவிலியமும் திருச்சபையின் படிப்பினைகளும் அதன் அத்திவரமாகும். திருவிவிலியத்தையும் கத்தோலிக்க திருச்சபையின் மறைக் கல்வி நூலையும் மூலமாகக் கொண்டு இப்பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க திருச்சபையின் உத்தியோகபூர்வமான படிப்பினைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்பாடநூலானது ஐந்து அலகுகளில் 25 பாடங்களைக் கொண்டதாகும். முதலாவது அலகில் திருவிவிலியம் தொடர்பான விளக்கமும், இரண்டாவது அலகில் இறை வெளிப்பாட்டுக்கு பதில் அளிப்பதோடு நம்பிக்கையில் வாழ்வதையும், மூன்றாவது அலகில் அருளடையாளங்கள் வழியாக இயேசு கிறிஸ்துவோடு உறவு கொண்டு புது வாழ்வொன்றுக்குச் சான்று பகர்வதும், நான்காவது அலகின் வழியாக இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்போடு வாழ்வதையும், ஐந்தாவது அலகின் வழியாக செபத்தினால் ஊட்டம் பெற்று இறைவனோடும் மனிதரோடும் அழகான உறவினைக் கட்டியெழுப்புவது தொடர்பான செழுமையான கருத்துக்களும் விளக்கப்பட்டுள்ளன.

உங்களது திருமுழுக்கின் அழைப்பினூடாக ஆரம்பிக்கப்பட்ட நம்பிக்கை வாழ்வுக்குச் சான்று பகர்வதற்கான ஆன்மீக ஊட்டத்தினைப் பெறுகின்ற கற்றல் கற்பித்தலில் நீங்கள் ஈடுபட வேண்டுமென வேண்டுதல் செய்கிறேன். நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ள, பண்பு நிறைந்த சிறந்த, உயரிய மனித கிறிஸ்தவ மதிப்பீடுகள் உங்களுள் உருவாகக்கடவதாக!

இறை ஆசீர்

**அருட்பணி பியால் ஜானக பர்ணாந்து**
**தேசிய இயக்குனர்**
**தேசிய திருவிவிலிய மறைக்கல்வி மத்திய நிலையம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 திருவிவிலியம்



படம் 1.1 - திருவிவிலியம்

அக்கா :- தம்பி உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நூல் எதுவென உங்களுக்குத் தெரியுமா?

தம்பி :- ஆமாம்! விவிலியம் தானே!

அக்கா :- அப்படிச் சொல்ல வேண்டாம். விவிலியம் என்பது ஒரு புனிதமான நூலாகும். கிறிஸ்தவர்களாகிய எமக்கு இது ஆராதனைக்கு உரிய நூலாகும். நாம் இதனை திருவிவிலியம் என அழைக்கவேண்டும். இதில் இறைவார்த்தை உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே இதனை நாம் மரியாதையோடு ஏற்றி வைத்தல் வேண்டும். இரு கை களையும் பயன்படுத்தி இதனை மரியாதையுடன் கையாளப் பழகிக்கொள்ள வேண்டும்.

தம்பி :- அக்கா! இதனை ஏனைய புத்தகங்களோடு புத்தக இராக்கையிலே வைப்பதில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா :- இல்லை தம்பி! வேறு எந்தப் புத்தகத்தையும் நாம் திருவிவிலியத்தின் மீது வைக்கவும் கூடாது. வேறு ஓரிடத்தில் வணக்கத்திற்குரியதாக பூவும் விளக்கும் வைத்து இதனை வைக்க வேண்டும். நாமும் அவ்வாறே செய்வோம்.

தம்பி :- அக்கா! திருவிவிலியம் எவ்வாறு இப்படிப் பெரிய நூலாக வந்தது?

அக்கா :- தம்பி! மீட்பு வரலாறு தொடர்பான தகவல்கள் திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது ஒரு நூலகம் போன்றதாகும். இதில் 73 நூல்கள் உள்ளன. இதனைப் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பெரும் பிரிவுகளாகவும் பிரிக்கலாம்.

தம்பி :- அக்கா! இது பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகளாக உள்ளது ஏன்?

அக்கா :- பழைய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்கு முற்பட்ட காலம் பற்றிய விவரங்கள் உள்ளன. இயேசுவைப் பற்றியும் ஆரம்ப காலத் திருச்சபை பற்றியும் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. இறைவன் தம்மை வரலாற்று நிகழ்வுகளாலும் குல முதுவர்கள் (ஆதிபிதாக்கள்) இறைவாக்கினர் வழியாகவும் வெளிப்படுத்திய விதத்தினை பழைய ஏற்பாடு உள்ளடக்கியுள்ளது. பழைய ஏற்பாட்டில் 46 நூல்கள் உள்ளன. இயேசுவின் வழியாக இறைவெளிப்பாடு முழுமை அடைந்த விதத்தினை புதிய ஏற்பாடு உள்ளடக்கியுள்ளது. அத்தோடு கிறிஸ்துவால் முழு மனித சந்ததியும் மீட்பு அடைந்த விதத்தினையும் உள்ளடக்கியுள்ளது. 27 நூல்கள் புதிய ஏற்பாட்டில் அடங்குகின்றன. இந்நூல் 1000 இற்கும் அதிகமான காலப்பகுதியில் பல எழுத்தாளர்களின் பங்களிப்பினால் எழுதப்பட்டுள்ளது.

தம்பி :- அப்படியானால் திருவிவிலியம் மிகப் பெறுமதி வாய்ந்த ஒரு நூல் என்பது விளங்குகின்றது.

அக்கா :- ஆம் தம்பி! அது ஒரு புத்தகம் அல்ல பல புத்தகங்களின் உள்ளடக்கம் திருவிவிலியம் கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வின் நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் அடிப்படையாகக் கொண்டதாகும். ஆகவே கிறிஸ்தவர்கள் அனைவரது வீடுகளிலும் திருவிவிலியம் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிவிலியம்

## பழைய ஏற்பாடு

01. தொடக்க நூல்
02. விடுதலைப் பயணம்
03. லேவியர்
04. எண்ணிக்கை
05. இணைச் சட்டம்
06. யோசுவா
07. நீதித் தலைவர்கள்
08. ரூத்து
09. 1 சாமுவேல்
10. 2 சாமுவேல்
11. 1 அரசர்கள்
12. 2 அரசர்கள்
13. 1 குறிப்பேடு
14. 2 குறிப்பேடு
15. எஸ்ரா
16. நெகேமியா
17. எஸ்தர்
18. யோபு
19. திருப்பாடல்கள்
20. நீதி மொழிகள்
21. சபை உரையாளர்
22. இனிமை மிகு பாடல்
23. எசாயா
24. எரேமியா
25. புலம்பல்
26. எசேக்கியேல்
27. தானியேல்
28. ஓசேயா
29. யோவேல்
30. ஆமோஸ்
31. ஒபதியா
32. யோனா
33. மீக்கா
34. நாகூம்
35. அபக்கூக்கு
36. செப்பனியா
37. ஆகாய்
38. செக்கரியா
39. மலாக்கி
40. தோபித்து
41. யூதித்து
42. சால மோனின் ஞானம்
43. சீராக்கின் ஞானம்
44. பாரூக்கு
45. மக்கபேயர் 1
46. மக்கபேயர் 2

## புதிய ஏற்பாடு

01. மத்தேயு நற்செய்தி
02. மாற்கு நற்செய்தி
03. லூக்கா நற்செய்தி
04. யோவான் நற்செய்தி
05. திருத்தூதர் பணி
06. உரோமையர்
07. 1 கொரிந்தியர்
08. 2 கொரிந்தியர்
09. கலாத்தியர்
10. எபேசியர்
11. பிலிப்பியர்
12. கொலோசையர்
13. 1 தெசலோனிக்கர்
14. 2 தெசலோனிக்கர்
15. 1 திமொத்தேயு
16. 2 திமொத்தேயு
17. தீத்து
18. பிலமோன்
19. எபிரேயர்
20. யாக்கோபு
21. 1 பேதுரு
22. 2 பேதுரு
23. 1 யோவான்
24. 2 யோவான்
25. 3 யோவான்
26. யூதா
27. திருவெளிப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1. திருவிவிலியத்தின் இரண்டு முக்கிய பிரிவுகளின் பெயர்களை எழுதுக.
2. பழைய ஏற்பாட்டிலிருந்து நான்கு நூல்களின் பெயர்களை எழுதுக.
3. புதிய ஏற்பாட்டின் நற்செய்தி நான்கினதும் பெயர்களை எழுதுக.
4. திருவிவிலியத்தில் தொடக்க நூலைப் புரட்டி முதலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிமுகத்தை வாசிக்கவும்.

## ஒப்படை

- உங்கள் இல்லத்தில் உள்ள திருவிவிலியத்தை மரியாதையாக ஏற்றி வைப்பதற்குப் பொருத்தமான ஓர் இடத்தினை ஆயத்தம் செய்யவும்.
- குடும்ப செபத்தின்போது நாள்தோறும் திரு விவிலியத்தில் ஒரு பகுதியை வாசித்துத் தியானிக்கப் பழகிக்கொள்ளுங்கள்.



*வாழ்க்கைக்கு........*

*இறைவார்த்தையை எம் உள்ளத்தில் பதிய வைப்போம். அதனைப் பின்பற்றி நடப்போம். ஆராதனை செய்வோம். நாம் இறை வார்த்தையின்படி வாழ்வோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஐந்நூல் (பஞ்சாகமம்)

திருவிவிலியத்தின் முதல் ஐந்து நூல்களும் ஐந்நூல் (பஞ்சாகமம்) என அழைக்கப்படுகின்றது. ஐந்நூல் (பஞ்சாகமம்) வேறு பெயர்களினாலும் அழைக்கப்படுகின்றது. அவையாவன;

* தோரா
* பஞ்சாகமம்
* சட்டம்
* மோசேயின் சட்டம்

எபிரேய மொழியில் இந்நூல் "தோரா" என அழைக்கப்படுகின்றது. ஐந்நூல் என அழைக்கப்படும் இந்நூல்கள் ஐந்தினதும் பெயர்கள் பின்வருமாறு.




## தொடக்க நூல்

திருவிவிலியத்தின் முதலாவது நூல் இதுவாகும். இறைவன் தனது அளப்பரிய அன்பினாலும் இரக்கத்தினாலும் மனிதனைப் படைத்தல், பாவத்தில் விழுந்த மனிதனை மீட்பதற்காக "இஸ்ராயேல்" இனத்தைத் தெரிந்தெடுத்தல், அவர்களின் தந்தையருக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுதல் என்பன இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. இதனைப் படித்து இறைவனின் அன்பைப் புரிந்துகொண்டு, நாம் ஒருவரோடு ஒருவர் அன்புடன் செயற்பட வேண்டுமென்பதை விளங்கிக்கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடக்க நூலில் உள்ள விடயங்களின் சுருக்கம்.**

* ★ கடவுள் உலகையும் மனிதனையும் படைத்தல்.
* ★ ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுதல்.
* ★ காயீன், ஆபேல் கதை.
* ★ நோவாவும் வெள்ளப் பெருக்கும்.
* ★ மனிதனால் கட்டப்பட்ட பாபேல் கோபுரம்.
* ★ குலமுதுவர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மக்கள் தலைவன் யோசேப்பு ஆகியோர் இறைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை.

## விடுதலைப் பயண நூல்


படம் 2.1 - விடுதலைப் பயணம்

திருவிவிலியத்தின் இரண்டாவது நூல் இதுவாகும். இஸ்ரயேல் வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சியான எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து மீட்டல், வாக்களிக்கப் பட்ட நாட்டை நோக்கிய **'விடுதலைப் பயணத்தை'** முதன்மையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

மோசே இங்கு முக்கிய இடத்தினை வகிக்கின்றார். இஸ்ரயேல் மக்கள் விடுதலைப் பயணத்தின்போது இறைவனின் அன்பையும் பராமரிப்பையும் கண்டுணர்ந்த விதம் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. "சீனாய்" உடன்படிக்கையின்மூலம் **"பத்துக்கட்டளைகள்"** பெற்றுக் கொடுக்கப்பட்டு இறைவனால் தமது மக்களென "இஸ்ரயேல் மக்கள்" ஏற்றுக் கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடப்படுகின்றது.

**விடுதலைப் பயண நூலில் உள்ள விடயங்களின் சுருக்கம்**

* ★ பார்வோன் மன்னன் இஸ்ரயேல் மக்களைத் துன்புறுத்துதல்.
* ★ இறைவன் இஸ்ரயேல் மக்களைப் பார்வோன் மன்னனிடமிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு அழைத்துச் செல்லல்.
* ★ இப்பயணத்தின் இடையில் சீனாய் மலையில் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தல்.
* ★ மோசேயின் தூதுப் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரயேல் மக்கள் இறையன்பை கண்டுணர்ந்த விதத்தினைப் போன்று இன்று இறைவன் எம்மையும் அதனைக் கண்டுணருமாறு அழைக்கின்றார். நாமும் இறைவனுக்கு அன்பு செலுத்த மறவாதிருப்போம்.

**செயற்பாடு**

(1) இப்படத்தை பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்து பூரணப்படுத்தவும்.




(2) (i) திருவிவிலியத்தின் ஐந்நூல் தவிர்ந்த வேறு ஏதும் ஐந்து நூல்களின் பெயர்களை எழுதுக.

(ii) திருவிவிலியத்தின் தொடக்க நூலின் அறிமுகத்தை வாசித்து, அதனை ஐந்து வசனங்களில் எழுதுக.

(iii) திருவிலியத்தின் விடுதலைப் பயண நூலின் அறிமுகத்தை வாசித்து ஐந்து வசனங்கள் எழுதுக.

*வாழ்க்கைக்கு.......*

*அனைத்தையும் படைத்த கடவுளைப் புகழுங்கள்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 நான்கு நற்செய்தி நூல்கள்

திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 27 நூல்களில் முதல் நான்கு நூல்களும் "நற்செய்தி" என அழைக்கப்படுகின்றன. அவற்றை எழுதிய ஆசிரியர்களின் பெயராலேயே அவை அழைக்கப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, பணி, போதனை,மரணம், உயிர்ப்பு என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு இந்நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இவை இயேசுவைப் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்ட நான்கு மூலங்கள் என ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவையாவன :-

1. புனித மத்தேயுவினால் எழுதப்பட்ட மத்தேயு நற்செய்தி
2. புனித மாற்குவினால் எழுதப்பட்ட மாற்கு நற்செய்தி
3. புனித லூக்காவினால் எழுதப்பட்ட லூக்கா நற்செய்தி
4. புனித யோவானால் எழுதப்பட்ட யோவான் நற்செய்தி

நான்கு நற்செய்திகளும் நான்கு அடையாளங்களால் அறியப்படுகின்றன.

### 1. மத்தேயு நற்செய்தி



படம் 3.1 - புனித மத்தேயு



படம் 3.2 - அடையாளம் மனிதன்

இயேசுவின் பன்னிரண்டு திருத்தூதர்களில் புனித மத்தேயுவும் ஒருவர் ஆவார். அழைப்புப்பெற முன் அவர் வரி தண்டுபவராக இருந்தார். தனது அழைப்பின் பின்பு இயேசுவின் பகிரங்க வாழ்க்கையின் பங்குதாரராகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைக் கண்டுணர்ந்தார். இறைவாக்கினரின் இறைவார்த்தைகளை அதிகமாக மேற்கோள்காட்டி எதிர்பார்க்கப்பட்ட "மெசியா" இயேசுவே ஆவார் என உறுதிப்படுத்துகின்றார். இயேசுவின் மூதாதையர் பட்டியலோடு நற்செய்தியை ஆரம்பித்துள்ளார். இந்த நற்செய்தியின் அடையாளம் "மனிதன்" ஆகும்.

## 2. மாற்கு நற்செய்தி



படம் 3.3 - புனித மாற்கு




படம் 3.4 - அடையாளம் சிங்கம்

புனித மாற்கு இயேசுவின் திருத்தூதர் அல்ல. இவர் புனித பேதுருவின் சீடராவார். யோவான் மாற்கு என அழைக்கப்படும் இவர் பேதுருவின் மொழிபெயர்ப்பாளராகவும் பணி புரிந்துள்ளார். எனவே இயேசுவைப் பற்றிய அனேகமான தகவல்களை பேதுருவிடமிருந்து கேட்டறிந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது. திருமுழுக்கு யோவானின் போதனையின் (மாற்கு 1 : 3) விபரங்களோடு ஆரம்பித்துள்ளதால் இந் நற்செய்தியின் அடையாளம் "சிங்கம்" ஆகும்.

## 3. லூக்கா நற்செய்தி



படம் 3.5 - புனித லூக்கா



படம் 3.6 - அடையாளம் எருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித லூக்கா இயேசுவின் திருத்தூதர் அல்ல. அவர் ஒரு வைத்தியர் ஆவார். வரலாற்று அறிஞரான அவர் ஒரு சித்திரக் கலைஞனுமாவார். நற்செய்தி எழுதிய ஒரேயொரு "புற இனத்தவர்" லூக்கா ஆவார். இவர் புனித பவுலோடு மறைத்தூதுப் பணியில் ஈடுபட்டிருந்தார். பல்வேறு மூலங்களிலிருந்து தகவல்களைத் தேடி இந்நற்செய்தியைத் தயாரித்துள்ளார். பாடல்கள், செபங்கள், பெண்கள் பற்றிய தகவல்கள் இதில் அதிகமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

இயேசு கிறிஸ்து யூத இனத்துக்கு மட்டுமல்ல எல்லா இனங்களினதும் மீட்பர் என்பதை எடுத்துக் காட்டுகிறார். செக்கரியாவின் குருத்துவப் பணியோடு இந்நற்செய்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் மிருகங்கள் பலிப்பொருளாக இருந்தமையால் இந்நற்செய்தியின் அடையாளம் "எருது" ஆகும்.

### 4. யோவான் நற்செய்தி




படம் 3.7 - புனித யோவான்




படம் 3.8 - அடையாளம் கழுகு

புனித யோவான் இயேசுவின் திருத்தூதர் ஆவார். இவரது சகோதரனாகிய பெரிய யாக்கோபுவும் இயேசுவின் திருத்தூதர் ஆவார். இயேசு இவர்களை அழைப்பதற்கு முன்னர் இவர்கள் இருவரும் மீனவர்களாக இருந்தனர். செபதேயு, சாலமி இவர்களது பெற்றோராவர். சாலமி மரியாவின் உறவினராவாள். ஆகவே இவர்கள் இருவரும் இயேசுவின் உறவு முறை சகோதரர்கள் ஆவர். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய ஆழமான இறையியல் எண்ணக்கருக்களை முன்வைத்துள்ளார். ஆழமான இறையியல் எண்ணக்கருவோடு இந்நற்செய்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இந்நற்செய்தியின் அடையாளம் "கழுகு" ஆகும்.

இயேசு இவ்வுலகிற்கு வருகை தந்தமை ஒரு நற்செய்தியாகும். ஏனெனில் அவர் இவ்வுலகிற்கு முழு மனித சந்ததிக்கும் மீட்பைப் பெற்றுத்தரவே வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

(1) இடைவெளிகளை நிரப்புக.

(மாற்கு, லூக்கா, மத்தேயு, எருது, சிங்கம், யோவான், யாக்கோபு)

1. புனித .................. ஒரு வைத்தியராவார்.
2. இயேசுவின் திருத்தூதரான .................. நற்செய்தியே புதிய ஏற்பாட்டில் முதலாவது நற்செய்தியாக உள்ளது.
3. மாற்கு நற்செய்தியின் அடையாளம் .................. ஆகும்.
4. ............. நற்செய்தி கழுகை அடையாளமாகக் கொண்டது.
5. நற்செய்தியாளர் யோவானின் சகோதரன் .................. ஆவார்.

(2) பின்வரும் சந்தர்ப்பங்களில் பிறர்க்கு நீங்கள் எவ்வாறு நற்செய்தியாக செயற்படலாம் என்பதை எழுதவும்.

1. வகுப்பிலே துன்பத்துக்குள்ளாகி கைவிடப்பட்ட ஒரு நண்பனுக்கு / நண்பிக்கு
2. விஞ்ஞான பாடம் கஷ்டமானது என்று கூறும் ஒரு நண்பனுக்கு / நண்பிக்கு
3. உங்களது தந்தை வெளிநாட்டில் இருக்கும்போது தாய்க்கும் சகோதர சகோதரிகளுக்கும்.

## ஒப்படை

- திருவிவிலியத்தை எடுத்து நற்செய்தி நான்கினையும் புரட்டி, அவற்றிலுள்ள அறிமுகத்தை வாசித்து, அதிலுள்ள விடயங்களை உள்ளடக்கி சிறு கைந்நூல் ஒன்று தயாரிக்கவும்.



*வாழ்க்கைக்கு........*

*பிறர்க்கு எப்போதும் ஒரு நற்செய்தியாக இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 உலகப் படைப்பு



படம் 4.1 - படைப்பு

கடவுளே உலகின் படைப்பாளியாவார். இறைவன் எம்மீது கொண்டுள்ள அளவில்லா அன்பினால் இவ்வியப்புக்குரியதும் பல்வேறு வகையானதுமான படைப்பை எமக்குத் தந்துள்ளார். எனவே நாம் இறைவனின் இந்தப் படைப்பை அன்பு செய்வோமாக.

கடவுள் தமது வார்த்தையின் வல்லமையினால் உலகினைப் படைத்த விதத்தினை திருவிவிலியத்தின் தொடக்க நூலில் காணலாம். இத்திருவிவிலியப் பகுதியை வாசிப்போம்.

## பகலும் இரவும்

''மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கடவுள் 'ஒளி தோன்றுக' என்றார் ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார். கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார். கடவுள் ஒளிக்குப் 'பகல்' என்றும் இருளுக்கு 'இரவு' என்றும் பெயரிட்டார். ...... முதல் நாள் முடிந்தது.''

(தொ.நூ 1: 2-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானமும் நீரும்

அப்பொழுது கடவுள், "நீர்த்திரளுக்கு இடையில், வானம் தோன்றுக! அது நீரினின்று நீரைப் பிரிக்கட்டும்" என்றார். கடவுள் வானத்தை உருவாக்கி வானத்திற்குக் கீழுள்ள நீரையும் வானத்திற்கு மேலுள்ள நீரையும் பிரித்தார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் வானத்திற்கு 'விண்ணுலகம்' என்று பெயரிட்டார். ............. இரண்டாம் நாள் முடிந்தது. (தொ. நூ 1:6-8)

## நிலமும் மரம் செடிகளும்

அப்பொழுது கடவுள் "விண்ணுலகுக்குக் கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்று சேர உலர்ந்த தரை தோன்றுக!" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் உலர்ந்த தரைக்கு 'நிலம்' என்றும் ஒன்று திரண்ட நீருக்குக் 'கடல்' என்றும் பெயரிட்டார். கடவுள் அது நல்லது என்று கண்டார். அப்பொழுது கடவுள் "புற் பூண்டுகளையும் விதை தரும் செடிகளையும் கனி தரும் பழ மரங்களையும் அந்தந்த இடத்தின் படியே நிலம் விளைவிக்கட்டும்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. புற் பூண்டுகளையும் விதையைப் பிறப்பிக்கும் செடிகளையும் கனி தரும் மரங்களையும் அந்தந்த இனத்தின்படி நிலம் விளைவித்தது...... மூன்றாம் நாள் முடிந்தது.

(தொ.நூ 1 : 9-13)

## சூரியன், சந்திரன், விண்மீன்

கடவுள் இரு பெரும் ஒளிப்பிழம்புகளை உருவாக்கினார். பகலை ஆள்வதற்குப் பெரிய ஒளிப் பிழம்பையும், இரவை ஆள்வதற்குச் சிறிய ஒளிப்பிழம்பையும் மற்றும் விண்மீன்களையும் அவர் உருவாக்கினார் கடவுள் மண்ணுலகத்திற்கு ஒளிதர விண் உலக வானத்தில் அவற்றை அமைத்தார்; பகலையும் இரவையும் ஆள்வதற்கும் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரிப் பதற்கும் அவற்றை அமைத் தார்....... நான்காம் நாள் முடிந்தது.

(தொ.நூ 1 : 16-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவைகளும் மீன்களும்

இவ்வாறு, கடலின் பெரும் பாம்புகளையும் திரள் திரளாக நீரில் நீந்தி வாழும் உயிரினங்களையும் அவற்றின் இனத்தின் படி கடவுள் படைத்தார்...... கடவுள் அவற்றிற்கு ஆசி வழங்கி "பலுகிப் பெருகி கடல் நீரை நிரப்புங்கள். பறவைகளும் மண்ணுலகில் பெருகட்டும்" என்றுரைத்தார்....... ஐந்தாம் நாள் முடிந்தது.

(தொ.நூ 1:21-23)

## விலங்குகளும் மனிதனும்

அப்பொழுது கடவுள் "கால் நடைகள், ஊர்வன, காட்டு விலங்குகள் ஆகியவற்றை அவற்றின் இனத்தின்படி நிலம் தோற்றுவிப்பதாக" என்றார். கடவுள் காட்டு விலங்குகளையும் கால் நடைகளையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் அவற்றின் இனத்தின்படி உருவாக்கினார்..... அப்பொழுது கடவுள், மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்..... ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்....... ஆறாம் நாள் முடிந்தது.

(தொ.நூ 1:24-27)

மேற்கூறப்பட்டுள்ள திருவிவிலியத்தின் தொடக்கநூலின் இப்பகுதி யிலிருந்து இறைவன் ஆறு நாட்களில் உலகினைப் படைத்துள்ளார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இவை யாவும் இறைவனின் படைப்பு என்பதை திருவிவிலியத்தில் உள்ள திருப்பாடல் 104 எமக்கு விளக்கமாகக் கூறுகிறது.

கடவுள் முழு உலகையும் படைக்கும் பொழுது மனிதனின் தேவைகள் அனைத்தையும் கருத்திற் கொண்டுள்ளார். ஆகவே மனிதனின் அன்றாட வாழ்வுக்குத் தேவையான அனைத்தையும் படைத்துள்ளார். மனிதன் வாழக்கூடிய சூழலையும் கொடுத்துள்ளார்.

இறைவனின் உன்னத படைப்பாகிய நாம் எப்பொழுதும் இறைவனின் இப் படைப்பினை மதிப்பதற்கு உறுதிகொள்வோமாக. இவ்வுன்னதமான உலகினைப் படைத்து, எமக்களித்துள்ள இறைவனுக்கு நன்றியும் புகழும் கூறிப் போற்றுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

① கீழ்க் காணப்படும் அட்டவணையை நிரப்புக.

| நாள் | படைப்பு |
|---|---|
| 1 வது நாள் | |
| 2 வது நாள் | |
| 3 வது நாள் | |
| 4 வது நாள் | |
| 5 வது நாள் | |
| 6 வது நாள் | |

② கடவுள் மனிதனை எத்தனையாவது நாளில் படைத்தார்?

③ இறைவனது படைப்பைப் பற்றி நீங்கள் அறிந்த பாடலொன்றை எழுதுங்கள்.

④ கீழே காணப்படும் படத்தைப் பாருங்கள். இவ்வாறான இறைவனின் படைப்பு எவ்வளவு மதிப்புக்குரியதாகும். திருப்பாடல் 104 : 8-13 பகுதியினை வாசித்து இறைவனின் வியத்தகு படைப்பிற்கு மதிப்பளித்து ஒரு கவிதையை ஆக்குங்கள்.



படம் 4.2 - படைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) திருப்பாடல் 104 இல் 14-18 வசனங்களையும் 33-34 வசனங்களையும் வாசித்து, அவற்றிலுள்ள கருத்துக்களுக்கேற்ப மனிதனுக்குத் தேவையான சூழலை உருவாக்கிக் கொடுத்த இறைதந்தைக்கு நன்றி கூறிச் செபம் ஒன்று எழுதுங்கள்.

(6) திருப்பாடல்கள் 104 இல் 19-30 வசனங்களை நன்றாக வாசித்து அதிலுள்ள கருத்துக்களை சித்திரமாக வரையுங்கள்.



*வாழ்க்கைக்கு..........*

- ★ *இறைவனின் படைப்பை மதிப்போம்.*
- ★ *விலங்குகளையும் மரம், செடி, கொடிகளையும் அன்பு செய்வோம்.*
- ★ *வீட்டையும் பாடசாலையையும் அழகுமிக்கதாகப் பேணுவோம்*
- ★ *இறைவனின் படைப்பை வியந்து இறைதந்தைக்கு நன்றியும் புகழும் கூறுவோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 படைப்பின் பல்வேறு தன்மை



படம் 5.1 - தோட்டம்

இப்பாடலை இராகத்தோடு பாடவும்.

நல்லதொரு செய்தியினை நான் உனக்குச்
சொல்லுகின்றேன் இயேசு என்னை அன்பு செய்கிறார்
நலமுடனே வாழ்வதற்கு காரணத்தைச் சொல்லுகிறேன்
இயேசு என்னைத் தேடி வருகிறார்

வாழ்வில் நிறைவு கண்டதற்கு காரணத்தைச்
சொல்லுகின்றேன் இயேசு என்னை அன்பு செய்கிறார்
வாழ்வை மாற்றிக் கொண்டதற்கு காரணத்தைச்
சொல்லுகிறேன் இயேசு என்னைத் தேடி வருகிறார்

நம்பிக்கையில் வாழ்வதற்கு காரணத்தைச்
சொல்லுகின்றேன் இயேசு என்னை அன்பு செய்கிறார்
நன்மை பல செய்வதற்கு காரணத்தைச்
சொல்லுகிறேன் இயேசு என்னைத் தேடி வருகிறார்

சூரியனே சந்திரனே சொல்லுவதைக் கேளுங்களேன்
இயேசு என்னை அன்பு செய்கிறார்
வெண்ணிலவே விண்மீனே சொல்லுவதைக்
கேளுங்களேன் இயேசு என்னைத் தேடி வருகிறார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ந்து செல்லும் உயிரினமே சொல்லுவதைக்
கேளுங்களேன் இயேசு என்னை அன்பு செய்கிறார்
பறந்து செல்லும் பறவைகளே சொல்லுவதைக்
கேளுங்களேன் இயேசு என்னைத் தேடி வருகிறார்



படம் 5.2 - ஆதாம் ஏவாள்

கடவுள் ஆதாம், ஏவாளுக்கு என்ன கூறினார் எனப் பார்ப்போம்.

கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, ''பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்'' என்றார். அப்பொழுது கடவுள், ''மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழ மரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன்; இவை உங்களுக்கு உணவாகட்டும்''.

ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.

(தொ.நூ 1 :28 - 29, 2 :15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் மனிதனில் கொண்டுள்ள அன்பினால் அவர் மனிதனிடம் ஒப்படைத்த சில கடமைகளை திருவிவிலியப் பகுதி முன்வைக்கின்றது. அவையாவன,

1. பிள்ளைப் பேறு.
2. மண்ணுலகில் பலுகிப் பெருகுதல்.
3. மீன்கள், பறவைகள், விலங்குகள் அனைத்தையும் ஆற்றலுக்கு உட்படுத்துதல் அல்லது அவற்றைப் பாதுகாத்து, விருத்தி செய்து, மனித தேவைகளுக்காக உபயோகித்தல்.
4. நிலத்தில் பயிர் செய்தல்.
5. விளைச்சலைப் பாவனைக்கு எடுத்தல்.

கடவுள் படைப்பினை விருத்திசெய்து அதில் நற்பயனைப் பெற இவ்வுலகை மனிதனிடம் ஒப்படைத்துள்ளார். கடவுளின் படைப்பைப் பாதுகாத்தல் மனிதனுக்குரிய கடமையாகும். எனினும் இன்று மனிதன் படைப்பைப் பாதுகாக்க இயலாதவனாக இருக்கின்றான்.

உதாரணம் :- சூழலை அசுத்தப்படுத்தல், காடுகளை அழித்தல், பொலித்தீன் பாவனை, குப்பைகளை முறையாக அகற்றாமை, காற்றை அசுத்தப்படுத்தல், நீரை மாசுபடுத்தல்.

வளங்களைப் பாதுகாத்தலும் விருத்திசெய்தலும் முக்கியமாகும். எனவே இறைவனின் படைப்பைப் பாதுகாப்பதற்குத் தேவையானவற்றை மேற்கொள்ள ஊக்கத்துடன் செயற்படுவோம். பல்வேறு தன்மை கொண்ட படைப்பை எமக்குத் தந்துள்ள கடவுளுக்கு நன்றியும் புகழ்ச்சியும் கூறுவோம்.

**செயற்பாடு**

(1) வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

1. கடவுள் மனிதனுக்குக் கூறிய இரண்டு விடயங்களை எழுதுக.
2. கடவுள் ஆதாமையும் ஏவாளையும் குடியிருக்கச் செய்த தோட்டத்தின் பெயரை எழுதுக.
3. இறை படைப்பின் வழியாக மனிதன் பெறும் பயன்கள் மூன்று எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. எம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய படைப்புகள் ஐந்து எழுதுக.

5. பாடலின் வழியாக நீங்கள் கற்றுக் கொள்ளும் படிப்பினைகள் மூன்று எழுதுக.

(2) உங்கள் வீட்டையும் பாடசாலையையும் சுத்தமாக வைத்திருக்கச் செய்யக் கூடிய ஐந்து விடயங்களை எழுதுக.

(3) சூழலை அழகாக வைத்திருக்க உங்களால் செய்யக்கூடிய ஐந்து விடயங்களை எழுதுக.

## ஒப்படை

■ சுவர்ப் பத்திரிகை ஒன்றைத் தயாரிப்பதற்காக பின்வரும் தலைப்புக்களுக்கேற்ப, கடிதம் / சித்திரம் / சித்திரக்கதை/ கவிதை / தாளலயப் பாடல் / மாதிரிப் பகுதிகள் /கட்டுரை செபம் ஆகியவற்றை ஆக்குங்கள்.

1. கடவுளின் படைப்பினால் மனிதன் பெறும் பயன்கள்.
2. கடவுளின் படைப்பை விருத்தி செய்யக் கூடிய விதம்.
3. கடவுளின் படைப்பைப் பாதுகாக்கக் கூடிய விதம்.
4. கடவுளின் படைப்புக்கு நன்றி கூறும் செபம்.



*வாழ்க்கைக்கு.........*

★ குப்பைகளை உரிய இடத்தில் கொட்டுவோம்

★ பொலித்தீன் பாவனையை இயன்றளவு குறைப்போம்.

★ நீரைச் சிக்கனமாக உபயோகிப்போம்.

★ பயனுள்ள செடிகளை வீட்டுத் தோட்டத்தில் நடுவோம்.

★ படைப்பை கொடையாக எமக்குத் தந்த இறைவனை எப்பொழுதும் நன்றி கூறிப் புகழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 இறைவனின் உன்னத படைப்பு



படம் 6.1 - ரோபோ இயந்திரம்

''பல ஆண்டுகளுக்கு முன்னர் விஞ்ஞானத்தின் உதவியினால் நான் பிறந்தேன். உங்களைப் போல் நான் தாயின் வயிற்றில் பிறக்கவில்லை. எனக்குப் பெற்றோர், சகோதரர்கள் இல்லை. திறமைமிக்க பொறியியலாளர்கள் என்னை வடிவமைத்தனர். மனிதர்கள் என்னைப் பலவித தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். வைத்தியம், உயிரியல், விஞ்ஞான செயற்பாடுகள், குண்டுகளை செயலிழக்கச்செய்தல், சந்திரனுக்குச் செல்லுதல், மனிதர்கள் செல்ல இயலாத இடங்களுக்குச் சென்று செய்திகளைச் சேகரித்தல் ஆகியன அவற்றுள் சில. இருப்பினும் அவை ஒன்றுமே நானாக தீர்மானித்துச் செய்வன அல்ல. மனிதர் என்னுள் உள்ளிடும் தகவல்களினால்தான் நான் செயற்படுகின்றேன். அவற்றினால் நான் எத்தகைய வியத்தகு செயல்களைச் செய்தாலும் என்னை மனிதனுக்குச் சமனாக்க முடியாது. எனக்கு உள்ளம் இல்லை. அறிவு இல்லை. இதயம் இல்லை. அவ்வாறே எனது சுய விருப்பத்தினால் எதையுமே என்னால் செய்ய முடியாது. ஆனால் மனிதன் அவ்வாறு அல்ல. அவன் இறைவனின் படைப்பு, மிகவும் மேன்மையானவன். அந்த மேன்மை நிலையுடன் பார்க்கும்போது நான் சிறிதளவும் பெறுமதியற்றவன். மனிதன் உயிருள்ளவன். இறைவனின் உயிர் மூச்சினாலேயே அவன் உயிரைப் பெற்றுள்ளான். ஆனால் நான் மற்றவர்களால் செயற்படுத்தப்படும் ஒரு இயந்திரம். இதுவரை உங்களுடன் கதைத்த நான், ஒரு ரோபோ இயந்திரம்''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனிதன் மற்ற எல்லாப் படைப்புக்களையும் விட உயர்வடைவதற்கான காரணம்**

*1. இறை உருவமும் சாயலும்.*

அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்........" கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்.

(தொ.நூ *1 : 26-27*)

தமது உருவமும் சாயலுமாகவே இறைவன் மனிதனைப் படைத்தார். மனிதன் மட்டுமே இறை வாழ்வுக்குப் பங்குதாரராகிறான். படைப்பை ஆண்டு நடத்தவும் வழிநடத்தவும் பாதுகாக்கவும் வளர்ச்சியடையச் செய்யவும் கடவுள் மனிதனுக்குப் பொறுப்பளித்தார். கடவுளின் படைப்புப் பணியில் மனிதன் மட்டுமே பங்குதாரராகிறான். இவற்றிலிருந்து மனிதன் மற்ற எல்லா படைப்புக்களிலும் மேன்மையானவன் என்பதை அறிகிறோம்.

**2. மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊதுதல்.**

ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.

(தொ.நூ 2:7)

மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனிதன் கடவுள் உயிர் மூச்சை ஊதியதால் உயிர் பெற்றவன் ஆனான். கடவுள் மனிதனுக்கு மட்டுமே உயிர் மூச்சை ஊதினார். மிருகங்களை படைக்கும்போது அவ்வாறு செய்யவில்லை. அதனால் மனிதன் மற்ற எல்லாப் படைப்புக்களிலும் மேலானவன் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. மனிதனைப் படைத்த இறைவன், மனித் படைப்பு "மிகவும்" நல்லதெனக் கண்டார்

> கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன.
>
> (தொ.நூ 1:31)

மற்ற அனைத்தையும் படைத்த பின் "அது நல்லது" எனக் கூறும் கடவுள் மனிதனைப் படைத்த பின் "அது மிகவும் நல்லது" எனக் கூறுகிறார். மனிதனைப் படைத்த பின் இறைவனின் படைப்புத் தொழில் நிறைவைப் பெற்றது. கடவுள் அனைத்துப் படைப்புக்களையும் மனிதன் பயன் பெறுவதற்காகவே படைத்துள்ளார்.

### 4. மனிதன் விலங்கினங்களுக்குப் பெயரிடுதல்.

> கால்நடைகள், வானத்துப் பறவைகள், காட்டு விலங்குகள் ஆகிய எல்லாவற்றிற்கும் மனிதன் பெயரிட்டான்;
>
> (தொ.நூ 2 :20)

படைப்பின் அனைத்து விலங்கினங்களுக்கும் மனிதனே பெயரிட்டான். இதன் மூலம் மனிதனின் சிறப்பும் மேன்மையும் காட்டப்படுகிறது. விலங்குகள் அனைத்தின்மீதும் மனிதனுக்கு அதிகாரம் உண்டு என்பதும் படைப்புக்கள் அனைத்திலும் மனிதன் மேலானவன் என்பதும் இதன் மூலம் விளக்கப்படுகிறது.

## மனிதனின் தனித்துவமும் ஏனையோரை மதித்தலும்

படைப்புக்களில் மேன்மையான படைப்பு மனிதனாவான். நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். எமது திறமைகள், விருப்பு, வெறுப்பு, உடல் அமைப்பு, நிறம் வேறுபடலாம். எமது அறிவின் அளவு வேறுபட்டது. ஆண், பெண் என்ற ரீதியிலும் நாம் வேறுபட்டுள்ளோம். எமது நாட்டிலே தமிழ், சிங்களம், முஸ்லிம், பறங்கியர் என நான்கு முக்கிய இனங்கள் உள. அவர்கள் கிறிஸ்தவம் / கத்தோலிக்கம், இந்து, இஸ்லாம், பௌத்தம் என நான்கு பிரதான மதங்களைப் பின்பற்றுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமன்றி எமது திறமைகளும் வேறுபட்டவை. அத்திறமைகளின் பலவகைகளை கீழேயுள்ள படங்கள் காட்டுகின்றன.




படம் 6.2 - பலவித திறமைகள்

இவ்வாறு மனிதரில் இறைத் திட்டத்திற்கேற்பப் பலவகை திறமைகள் உள்ளன. இவற்றினால் படைப்பின் மேன்மை வளர்ச்சி பெறுகிறது. பிறரின் உதவி அவசியமாகிறது. மேலும் நாம் அனைவரும் இறை உருவமும் சா யலுமுடைய இறை படைப்பாவோம். அதனால் நாம் ஒருவருக்கொருவர் மதிப்பளிப்போம். ஆண் - பெண் என்ற வகையிலும் ஒருவருக்கொருவர் மதிப்பளிக்க வேண்டும். நாம் பல்லின, பலமதத்தவர்களாக இருந்தாலும், பலமொழி பேசுபவர்களாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் மதிப்பளித்து அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டும். மனிதனுடைய தனித்துவத்திற்கு மதிப்பளித்தும் மற்றவர்களுடன் அமைதியுடனும் வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

(1) இடைவெளியை நிரப்புக.
(மிகவும் நன்றாய், உயிர்மூச்சை, தம் உருவில், கால் நடைகள், மண்ணால்)

i கடவுள், தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை................ இருந்தன.
ii ................, வானத்துப் பறவைகள், காட்டு விலங்குகள் ஆகிய எல்லாவற்றிற்கும் மனிதன் பெயரிட்டான்.
iii கடவுள் நிலத்தின் ............... மனிதனைப் படைத்தார்.
iv கடவுள் ............... மனிதனைப் படைத்தார்.
v கடவுள் மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் ............. ஊதினார்.

(2) அனைத்துப் படைப்புக்களிலும் மனிதன் மேன்மையானவனாய் இருப்பதற்கான மூன்று காரணங்களை எழுதுக.

(3) ''ஒவ்வொரு மனிதனும்......'' என்னும் பாடலை வாசித்து அதன் மூலம் நீர் பெற்றுக் கொள்ளும் செய்திகள் மூன்றை எழுதுக.

(4) மற்றவர்களுக்கு மதிப்பளித்து, ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வாழ்வதற்காக வீட்டில், பாடசாலையில், சமூகத்தில் எவ்வாறு செயற்படலாம் என்பதைக் காட்டுவதற்கு ஒவ்வொரு உதாரணம் தருக.



*வாழ்க்கைக்கு......*

- ★ மற்றவர்களுக்கு மதிப்பளிப்போம்.
- ★ ஏனையோரை பாராட்டுவோம்.
- ★ அனைவரையும் சமமாக நடத்துவோம்.
- ★ பிறர் கருத்துக்குச் செவிமடுப்போம்.
- ★ ஒன்றுபட்டுச் செயலாற்றுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 இயேசுவின் பிறப்பு



படம் 7.1 - இயேசுவின் பிறப்பு

பீட்டர் : குழந்தையொன்றின் அழுகுரல் கேட்கின்றது.

அந்தோனி : ஆமாம். யாருடைய குரல் அது?

மரியாள் : அக்குரல் யாருடையது என நான் கூறுகிறேன். ஒரு நாள் நான் வீட்டில் இருந்தேன். கடவுளின், கபிரியேல் என்னும் வான தூதர் என்னிடம் வந்தார்.

வானதூதர் : அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்.

மரியாள் : நான் மிகவும் அச்சம் அடைந்தேன். அப்போது

வானதூதர் : மரியா, அஞ்ச வேண்டாம். கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாள் : இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே ?

வானதூதர் : தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படுவார். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை.

மரியாள் : ''நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'' எனக் கூறி இறை சித்தத்திற்கு நான் தலை சாய்த்தேன்.

பீட்டர் : உம்மை ஏற்றுக்கொள்வதற்கு யோசேப்பு சம்மதித்தாரா?

மரியாள் : இல்லை. ஆனால் கடவுளின் தூதர் அவருக்கு கனவிலே தோன்றினார். நான்கருவுற்றிருப்பது தூய ஆவியினாலேயே என்றும் பெற்றெடுக்கும் மகனுக்கு ''இயேசு'' எனப் பெயரிடுமாறும் இதனால் எசாயா இறைவாக்கினர் முன் உரைத்தது நிறைவேறும் எனவும் கூறினார். அவரும் இறை சித்தத்திற்குக் கீழ்படிந்தார்.

அந்தோனி : இயேசு எங்கே பிறந்தார் ?

மரியாள் : அது ஒரு பெரிய கதை. அக்காலத்தில் அகுஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தார்.

அறிவிப்போன் : செவிசாயுங்கள்! செவிசாயுங்கள்!
பேரரசின் மக்கள் தொகையைக் கணக்கெடுப்பதற்காக அனைவரும் தத்தம் ஊருக்குச் சென்று பெயரைப் பதிவு செய்யுங்கள்.

மரியாள் : யோசேப்பு, தாவீதின் வழிமரபினராதலால் அவரும் நானும் கலிலேயாவின் நாசரேத்து ஊரிலிருந்து புறப்பட்டு யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற ஊருக்குச் சென்றோம். அப்போது குழந்தை இயேசு பிறப்பதற்கான நாளும் வேளையும் நெருங்கியது. கருமுகில் சூழ்ந்தது. இரவைக் கழிப்பதற்காக யோசேப்பு ஒரு விடுதியைத் தேடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசேப்பு : இன்று, இங்கே தங்குவதற்கு எமக்கு இடமளிப்பீர்களா?

விடுதிப் பொறுப்பாளர் : இன்று எமது விடுதியிலே மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். இங்குள்ள எந்த விடுதியிலும் இடம் கிடைக்குமென நான் நினைக்கவில்லை. இருப்பினும் உமது மனைவிக்கு இப்போது கஷ்டமாக இருப்பதால், விருப்பமாயின் எமது மாட்டுத்தொழுவத்தில் தங்கியிருங்கள்.

யோசேப்பு : மிக்க நன்றி.

பீட்டர் : என்ன? குழந்தையை மாட்டுத் தொழுவத்தில்தான் பிரசவித்தீர்களா?

மரியாள் : ஆம், நான் இறை சித்தத்திற்குத் தலைசாய்த்து பிறந்த தலைமகனை துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினேன். அப்பகுதியில் உள்ள வயல்வெளியில் இடையர்கள் தங்கி இரவெல்லாம் தங்கள் கிடையை காவல் காத்துக் கொண்டிருந்த போது

வானதூதர் : "அஞ்சாதீர்கள். இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்.''

இடையர்கள் : அதோ, வானக தூதர்கள் புகழ்ச்சிப் பாடல் பாடுகிறார்கள். நாமும் பெத்தலேகம் சென்று அவரை வணங்குவோம்.

அந்தோனி : இடையர்கள் மட்டுமா இயேசுவைப் பார்க்க வந்தார்கள்?

மரியாள் : இல்லை. இயேசு பிறந்ததைத் தெரிவிப்பதற்கு வானிலே விண் மீன் எழுந்தது. கிழக்கிலிருந்து ஞானிகள் மூவர் வந்தனர். அவர்கள் அரச மாளிகைக்குச் சென்றனர்.

ஞானிகள் : யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண் மீன் எழக்கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்.

ஏரோது அரசன் : எனக்குத் தெரியாது. விசாரித்துப் பார்க்கிறேன். (ஊழியரை அழைத்து) ''எல்லாத் தலைமைக் குருக்களையும் மறை நூல் அறிஞர்களையும் இங்கு வரச் சொல்லுங்கள்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைக் குருக்கள் : அரசே, எம்மை அழைக்கக் காரணம் என்ன?

ஏரோது அரசன் : இயேசு எங்கே பிறந்துள்ளார்?

தலைமைக் குருக்கள் : அரசே, யூதேயாவின் பெத்லகேம் நகரில்.

ஏரோது அரசன் : நீங்கள் எவ்வாறு அறிந்தீர்கள்?

தலைமைக் குருக்கள் : இறைவாக்கினர் நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது..

ஏரோது அரசன் : (யாருக்கும் தெரியாமல் ஞானிகளை அழைத்து) நீங்கள் சென்று குழந்தையைக் குறித்து திட்டவட்டமாகக் கேட்டு எனக்கு அறிவியுங்கள். நானும் சென்று அக்குழந்தையை வணங்க வேண்டும்.

முதலாம் ஞானி: அதோ,.... கிழக்கில் நாம் கண்ட விண் மீன் அந்த மாட்டுத் தொழுவத்திற்கு அண்மையில் நின்று விட்டது.

இரண்டாம் ஞானி : நாம் உள்ளே போவோம். நாம் கொண்டுவந்துள்ள பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் ஆகிய வற்றைக் காணிக்கையாகக் கொடுத்து, நெடுஞ் சாண் கிடையாய் விழுந்து வணங்குவோம்.

அந்தோனி : அந்த ஞானிகள் ஏரோது அரசனுக்கு குழந்தையைப் பற்றிக் கூறினார்களா?

மரியாள் : இல்லை. ஏரோதிடம் திரும்பிப் போக வேண்டாமெனக் கடவுள் அவர்களைக் கனவில் எச்சரித்ததால் அவர்கள் வேறு வழியாகத் தம் நாடுகளுக்குச் சென்றார்கள்.

பீட்டர் அந்தோனி : உங்களைப் போல தினமும் இறை சித்தத்தை நிறைவேற்றுவதற்கு நாமும் விருப்பமாக இருக்கிறோம்.

மரியாள் : இறை சித்தத்தை நிறைவேற்றுவதற்கு உங்களுக்கு வரம் அருளுமாறு நானும் அவரிடம் செபிக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவுக்குப் பெயரிடுதல்

குழந்தைக்கு விருந்தசேதனம் செய்ய வேண்டிய எட்டாம் நாள் வந்தது. தாயின் வயிற்றில் உருவாக முன்பே வானதூதர் சொல்லியிருந்தவாறு அதற்கு இயேசு என்று பெயரிட்டார்கள்.

(லூக் 2 :21)

## இயேசுவைக் கோயிலில் அர்ப்பணித்தல்

மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்குக் கொண்டு சென்றார்கள். ஏனெனில் ''ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்'' என்று அவருடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது. அச்சட்டத்தில் கூறியுள்ளவாறு ஒரு சோடி மாடப் புறாக்கள் அல்லது இரு புறாக் குஞ்சுகளை அவர்கள் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது.

(லூக் 2 :22-24)

யூத இனத்தவரின் மறை, இனச் சம்பிரதாய சடங்குகள் சிலவற்றை மேலே தரப்பட்டுள்ள திருவிவிலிய பகுதிகளில் காண்கிறோம். அவை,

★ எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்தல்.

★ பெயரிடுதல்.

★ தூய்மையாக்கும் சடங்கை நிறைவேற்றல்.

★ தலைப்பேறான குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணித்தல்.

மரியாளும் யோசேப்பும் யூத மத, இன, சம்பிரதாயச் சடங்குகளை நிறைவேற்றினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சமூகத்தில் பலர் இன, மத சம்பிரதாயச் சடங்குகளைக் கருத்திற்கொள்வதே இல்லை. ஆனால் திருக்குடும்பம் அவற்றிற்கு மதிப்பளித்து எமக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. எட்டாம் நாளிலே குழந்தை இயேசுவுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது. வானதூதர் சொல்லியிருந்தவாறு "இயேசு" எனப் பெயரிடப்பட்டது. அவ்வாறே மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற குழந்தை இயேசு எருசலேம் ஆலயத்தில் அர்ப்பணிக்கப்பட்டார்.

இவற்றிலிருந்து இன, மத சம்பிரதாயச் சடங்குகளுக்கு நாமும் மதிப்பளிக்க வேண்டும் என்பது தெளிவாகக் காட்டப்படுகிறது.

**லூக் 2 :1 - 24, மத் 2 :1 - 12, மேற்கூறப்பட்ட நத்தார் நாடகம் ஆகியவற்றின் உதவியோடு கீழ்காணும் பயிற்சியை செய்க.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலிருந்து கீழ்

01. யோசேப்பு இந்த மரபைச் சேர்ந்தவர்.
02. இயேசுவின் பிறப்பபைப் பற்றி இறைவாக்கு உரைத்த இறை வாக்கினர்
03. இயேசு பிறந்த இடம்
06. பேரரசரின் கட்டளையை மக்களுக்கு அறிவிக்கப்பயன்படுத்திய கருவி
08. மார்கழி மாதம் 25ஆம் தினத்தில் இது கொண்டாடப்படுகிறது.
12. ஞானிகளின் காணிக்கைளில் இது ஒன்றாகும்.

இடமிருந்து வலம்

02. மரியாவின் உறவு முறையானவர் இவராகும்.
04. கபிரியேல் தூதன் இவருக்கு மங்கள வார்த்தை கூறினார்.
05. நத்தார் தினத்தில் கிறிஸ்தவ வீடுகளில் இது அமைக்கப்படுகிறது.
07. ஞானிகள் ஏரோது அரசனைச் சந்திக்கச் சென்ற இடம் இதுவாகும்.
09. நத்தார் தினத்தில் சிறுவர்களுக்குப் பரிசுப் பொருட்களை இவர் கொண்டு வருவார்
10. மக்கள் தொகையை கணக்கிடுமாறு கட்டளையிட்ட பேரரசரின் பெயர்.
11. இயேசுவின் பிறப்புப் பற்றிய புகழ்ச்சிப் பாடலைப் பாடியவர்கள் இவர்கள் ஆவர்.

**செயற்பாடு**

1. இன, மத - சம்பிரதாயச் சடங்குகளுக்கு திருக்குடும்பம் மதிப்பளித்த சந்தர்ப்பங்கள் இரண்டை எழுதுக.
2. உமது வகுப்பில் நல்லுறவையும் ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூன்றை எழுதுக.
3. நத்தார் தினத்திலே உமது குடும்பத்தினருடன் இணைந்து நீர் செய்யக் கூடிய நற்செயல்கள் மூன்றை எழுதுக.
4. நத்தார் வாழ்த்து அட்டை ஒன்றை வடிவமைக்குக.



*வாழ்க்கைக்கு........*

★ *தேசிய, மறை தொடர்பான சம்பிரதாய சடங்குகளுக்கு மதிப்பளிப்போம்.*
★ *தருணம் கிடைக்கும்போதெல்லாம் கைவிடப்பட்டோருக்கு உதவி செய்வோம்.*
★ *நத்தார் காலத்தில் வீட்டில் நத்தார் குடில் அமைப்போம்.*
★ *மத வழிபாட்டுத் தலங்களில் மதிப்புடன் நடந்து கொள்வோம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 இயேசுவின் பிள்ளைப் பருவம்

## சிறுவன் இயேசு கோயிலுக்குச் செல்லுதல்

யூத வழக்கப்படி இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவுக்காக ஆண்டு தோறும் எருசலேமுக்குச் செல்வார்கள். அவ்வாறே இயேசுவுக்கு பன்னிரண்டு வயது ஆனபோது மரியாள்,யோசேப்பு, சிறுவன் இயேசு, உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எருசலேம் சென்றார்கள். பாஸ்கா விழா முடிந்த பின் மரியாளும் யோசேப்பும் திரும்பிச் சென்றார்கள். ஆனால் சிறுவன் இயேசு எருசலேமில் தங்கிவிட்டார்.

இதனையறியாத பெற்றோர் சிறுவன் இயேசுவை தமது உறவினர்கள் நண்பர்களிடையே தேடினார்கள். அவரைக் காணாததால் மீண்டும் எருசலேம் நோக்கிச் சென்றார்கள். மூன்று நாட்களுக்குப் பின் மரியாளும் யோசேப்பும் எருசலேமையடைந்தார்கள். கோவிலில் சிறுவன் இயேசு போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருப்பதையும் கண்டார்கள்.


படம் 8.1 - கோவிலில் சிறுவன் இயேசு

மரியாள் : மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ, பார். உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே.

சிறுவன் இயேசு : நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் இயேசு சொன்னதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மரியாள் இவற்றையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார். இயேசு இவ்வுலகிற்கு மீட்புப் பணியை செயற்படுத்துவதற்காகவே வந்தார். பிள்ளைப் பருவத்திலிருந்தே இயேசு, தன் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்வந்தார். கிறிஸ்தவப் பிள்ளைகளாகிய நாமும் கடவுளை உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கான அழைப்பைப் பெற்றுள்ளோம். அவ்வழைப்பிற்கேற்ப பிள்ளைப் பருவத்திலிருந்தே சிறுவர்களாகிய நாம் முன்வர வேண்டும். இதற்காக சிறுவன் இயேசுவின் வாழ்வை முன்மாதிரிகையாகக் கொள்ள வேண்டும்.

கோவிலில் தங்கிய இயேசுவைத் தேடி மரியாளும் யோசேப்பும் சென்ற நிகழ்வானது, பெற்றோர் தம் பிள்ளைகள் மட்டில் விழிப்பாய் இருக்க வேண்டும் என்பதற்கு மாதிரிகையாக இருக்கிறது.

## இயேசுவின் வளர்ச்சி

பிள்ளைப் பருவத்திலே இயேசு வளர்ச்சி பெற்ற விதத்தை புனித லூக்கா இவ்வாறு காட்டுகிறார்.

> அவர் அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்குப் பணிந்து நடந்தார்.......... இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.
>
> (லூக் 2 :51-52)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு சிறுவயதிலிருந்தே இறை சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நற்பண்புகளில் வளர்ச்சி பெற்றார் என்பதை புனித லூக்கா குறிப்பிடுகின்றார். இயேசு தனது பிள்ளைப் பருவத்தில் கோவிலில் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டார், கேள்விகளை எழுப்பினார். இந்நிகழ்விலிருந்து இயேசு ஞானத்தில் வளர்ச்சி பெற்றார் என்பதைப் பார்க்கிறோம். இயேசு இறைமகனாக இருந்த போதிலும் வீட்டிலே தனது பெற்றோருக்குக் கீழ்படிந்தார்; உதவி செய்தார். இவ்வாறாக அவர் உடல் வலிமை பெற்றார்.

இயேசு தனது பெற்றோருடன் இணைந்து மறை காரியங்களில் ஈடுபட்டார், செப வாழ்வில் வளர்ந்தார்.

உதாரணம் :- இயேசுவை அவரது பெற்றோர் கோவிலில் அர்ப்பணிப்பதற்காக எருசலேம் ஆலயத்திற்குக் கொண்டு சென்றனர். பன்னிரண்டு வயதில் பாஸ்கா விழாவுக்கு எருசலேம் சென்றார். பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்தார், சமூக சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்தார் என இவற்றின் வழியாக இயேசுவின் ஆளுமையை புனித லூக்கா படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இவை இயேசு கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தார் என்பதை எமக்கு அறியத் தருகின்றன. இயேசுவைப் போல் நாமும் ஆளுமையில் வளர்ச்சிபெற உடல், உள, ஆன்மீக, சமூக ரீதியாக வளர்ச்சியடைய வேண்டும்.

ஊட்டச் சத்துள்ள உணவுகளை உட்கொண்டும் விளையாட்டு, உடல் பயிற்சிகளில் ஈடுபட்டும் உடல் வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ளலாம்.

செப வாழ்வு, மறை பக்தி முயற்சிகளில் ஈடுபட்டும் ஆன்மீக வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாம் வாழும் சமூகத்தில் (வீட்டில், பாடசாலையில், ஆலயத்தில், கிராமத்தில், நகரில்) அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதன்மூலம் சமூக வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சிறப்பாக சிறுவன் இயேசுவின் வாழ்வை முன்மாதிரிகையாகக் கொண்டு எமது குடும்பத்தில் ஒன்றுபட்டு செயலாற்றுதல், பாடசாலையில், கிராமத்தில் சிரமதானத்தின்போது ஒத்துழைத்தல், ஆலயப் பணிகளில் துணை புரிதல் ஆகியவற்றை எம்மால் செய்ய முடியும். சமூகத்திற்கு இயன்றவரை பணியாற்றி நாமும் இயேசுவைப்போல் உடல், உள, ஆன்மீக, சமூக ரீதியாக வளர்ச்சி பெற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

① (i) உடல், (ii) உள, (iii)ஆன்மீக, (iv) சமூக ரீதியில் வளர்ச்சி பெறும் முறை பற்றி இவ்விரண்டு வசனம் எழுதுக.

② உம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டிய நற் பண்புகள் மூன்றை எழுதுக.

③ பன்னிரெண்டு வயதில் சிறுவன் இயேசு எந்த விழாவைக் கொண்டாடுவதற்காக எருசலேமுக்குப் பெற்றோருடன் சென்றார்?

④ சிறுவன் இயேசு பன்னிரண்டு வயதில் எருசலேம் ஆலயத்தில் தங்கியிருந்ததன் காரணம் என்ன?

⑤ "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள் நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா" - இக்கூற்றின் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ளும் செய்தி என்ன?

⑥ சிறுவன் இயேசுவின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் மூன்றை எழுதுக.



*வாழ்க்கைக்கு.....*

- ★ *சிறுவன் இயேசுவை எப்போதும் வாழ்வின் முன்மாதிரகையாகக் கொள்ளுங்கள்.*
- ★ *உங்களின் நன்மைக்காக வளர்ந்தோர் வழங்கும் அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். அதன்படி வாழ்வதற்கு முயற்சி செய்யுங்கள்.*
- ★ *இயேசுவின் பிள்ளைப் பருவத்தைப் பற்றி எழுதியுள்ள சித்திரக் கதைகளை வாசியுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 அருளடையாளங்கள்

ஒவ்வொரு அருளடையாளமும் உயிர்த்த ஆண்டவரை எதிர் கொள்ளவதாகும். கண்ணுக்குப் புலப்படாத இறைவனின் அருளை, புலன்களுக்கு விளக்கக் கூடிய வகையில் வெளிப்படுத்துகின்றவையும் கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டவையுமே அருளடையாளங்களாகும்.

இதன்படி அருளடையாளத்தில் முக்கிய பண்புகள் நான்கு உள. அந்தப் பண்புகள் நான்கையும் நற்கருணை என்னும் அருள் அடையாளத்தின்படி இவ்வாறு விளக்கலாம்.

1. உள்ளே தரப்படும் அருளைப் பெறல் - இயேசு
2. வெளியில் அதனை அடையாளப்படுத்துதல் - அப்பம், இரசம்
3. கிறிஸ்துவினால் நிறுவப்பட்டது - பெரிய வியாழன் இறுதி இரா உணவின்போது
4. அடையாளச் சடங்கு (சடங்கு முறை) - திருப்பலி



படம் 9.1 - கதிர்பாத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கும் நற்கருணை ஆண்டவர்

நற்கருணை வழியாக நாம் இயேசு ஆண்டவரைப் பெற்றுக்கொள்கிறோம் அவரது திரு உடலாலும் திரு இரத்தத்தாலும் எமது இறை வாழ்வு ஊட்டம் பெறுவதை நம்புகிறோம். இது உள்ளார்ந்தமாகப் பெறும் இறையருளாகும். நற்கருணை இயேசு கிறிஸ்துவினால் பெரிய வியாழனன்று இறுதி இரா உணவின்போது ஏற்படுத்தப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பயன்படுத்திய அப்பமும் இரசமும் நற்கருணைச் சடங்கின் வெளியடையாளமாய் இருப்பதோடு திருப்பலியின் வழியாக அது ஒரு வழிபாடாகக் கொண்டாடப்படுகிறது.

அருளடையாளங்கள் ஏழு உள. கீழ்க் காணும் படத்தில் இவற்றைக் காணலாம்.



படம் 9.2 - அருளடையாளங்கள்

இயல்பு வாழ்வு,ஆன்மீக வாழ்வு நிலைகளுக்கிடையே காணப்படும் ஒத்தமைவு

- ★ பிறப்பு - திருமுழுக்கு
- ★ ஊட்டம் பெறுதல் - நற்கருணை ஆண்டவர்
- ★ முதிர்ச்சி நிலை - உறுதிப்பூசுதல்
- ★ வாழ்வின் நிலையைத் தேர்ந்தெடுத்தல் - திருமணம் / குருத்துவம்
- ★ நோய் அல்லது பலவீனமடைதல் - ஒப்புரவு, நோயில் பூசுதல்

வாழ்வின் வளர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு, ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி பெறுவதற்கு அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அருளடையாளங்கள் வழியாக இயேசு அருள் வரங்களை அருளுகின்றார். ஆகவே சுய விருப்பத்துடனும் தெளிவான அறிவுடனும் அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் திருமுழுக்கு பெற்றுள்ள கத்தோலிக்கர் அனைவரும் ஏனைய அருளடையாளங்களைக் குறிப்பிட்ட வயதிலோ அல்லது உரிய சந்தர்ப்பங்களிலோ பெற்றுக்கொள்ள வேண்டும் அருளடையாங்களைக் கீழ்க் காணும் விதத்தில் வகைப்படுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு முறை மட்டும் பெற்றுக்கொள்ளக் கூடிய அருளடையாளங்கள் மூன்று உள்ளன.

1. திரு முழுக்கு
2. உறுதிப் பூசுதல்
3. குருத்துவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1



படம் 9.3 - திருமுழுக்கு

2



படம் 9.4 - உறுதிப் பூசுதல்

3



படம் 9.5 - குருத்துவம்

ஒரு முறை மட்டும் பெற்றுக்கொள்ளக் கூடிய அருளடையாளங்கள் மூன்று உள்ளன.ஏனெனில் இவற்றினால் நம் ஆன்மாவில் அழியாத முத்திரை பொறிக்கப்படுகின்றது.

| அருளடையாளம் | பெற்றுக்கொள்ளும் அருள் |
|---|---|
| திருமுழுக்கு | இறைவனின் பிள்ளையாதல், பாவ மன்னிப்பு, தூய ஆவியில் புது வாழ்வு |
| ஒப்புரவு | பாவ மன்னிப்பு |
| நற்கருணை | இயேசுவை பெறுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| உறுதிப்பூசுதல் | முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாக சான்று பகர்ந்து வாழ்வதற்கு தேவையான அருள் |
| திருமணம் | பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான இறையருள், திருமண வாழ்வில் இருவரினதும் நலன், பிறப்பு, அவர்களைப் பயிற்றுவித்தல். |
| குருத்துவம் | இயேசுவினால் திருத்தூதருக்கு அளிக்கப்பட்ட தூதுப் பணியைத் தொடர்ந்து செய்வதற்குத் தேவையான இறையருள் |
| நோயில் பூசுதல் | ஆன்மீக நலம் / உடல் நலம் |

## செயற்பாடு

கீழ் காணும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1. அருளடையாளம் என்றால் என்ன?
2. இதுவரை நீங்கள் பெற்றுள்ள அருளடையாளங்கள் எவை?
3. புகுமுக அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்ளும் காலத்தை அட்டவணைப்படுத்துக.
4. (i) முதல் நன்மை பெற்றிராத நண்பருக்கு அல்லது
   (ii) ஞாயிறு திருப்பலிக்குச் செல்லாத நண்பருக்கு அல்லது
   (iii) ஒப்புரவு அருளடையாளம் பெற்றுக் கொள்ளாத நண்பருக்கு நீர் வழங்கும் அறிவுரைகள் இரண்டு எழுதுக.



*வாழ்க்கைக்கு.....*

*குறித்த வயதில் குறிப்பிட்ட அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 புகுமுக அருளடையாளங்கள்




## 1. திருமுழுக்கு



படம் 10.1 - யோர்தான் ஆற்றில் இயேசு திருமுழுக்குப் பெறுதல்

திருமுழுக்கு ஒரு முறை மட்டும் பெறக்கூடிய அருளடையாளமாகும். இறைவனின் பிள்ளை என்ற அழியாத முத்திரை இதனைப் பெறுபவரின் ஆன்மாவில் பதியப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**திருமுழுக்கிற்கு பயன்படுத்தப்படும் அடையாளங்கள்.**


படம் 10.2 - நீர் ஊற்றுதல்


படம் 10.3 - வெள்ளை ஆடை அணிவிக்கப்படுதல்

**1. நீர்**

பாவத்திற்கு இறந்து அருள் வாழ்விற்கு உயிர்த்தெழுவதை அடையாளப்படுத்துகிறது.

**2. வெள்ளை ஆடை**

கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல், (கலா 3:7) ஆன்மீக வாழ்வைத் தூய்மையாக வைத்திருத்தல் ஆகியவற்றை அடையாளப்படுத்துகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 10.4 - மெழுகுவர்த்தி ஏற்றுதல்



படம் 10.5 - திருத் தைலம் பூசுதல்

3. பாஸ்கா மெழுகுவர்த்தி

உயிர்த்த இயேசுவினால் புதிய கிறிஸ்தவன் ஒளியாக்கப் பட்டதையும் அந்த ஒளியை அணைந்து போகாமல் வைத் திருக்க வேண்டும் என்பதையும் அடையாளப்படுத்துகிறது.

4. திருத் தைலம்

தூய ஆவியின் வரம் கிடைப்பதை அடையாளப்படுத்துகிறது.

## 2. உறுதிப் பூசுதல்

(மாதாவே துணை நீரே உம்மை.... என்ற மெட்டில் இப் பாடலைப் பாடவும்)



பெந்தகோஸ்து நாளில் சீடர்கள்
இறை வேண்டல் செய்த இல்லத்திலே
கொடுங்காற்று வீசிட இரைச்சல், அக்கினி
நா உருவில் தூய ஆவி வந்தார்

ஆவியால் நிரம்பிய சீடர்கள் துணிந்து
மறைக்கு சான்று பகர்ந்தனரே
ஆவியின் வரமும் மறையுரை ஊட்டமும்
அனைவருமே அங்கு பெற்றனரே

போதனைகளை மக்கள் தத்தம் மொழியில்
கேட்டு மலைத்து நின்றனரே
இதனால் மறையைத் தழுவிய மக்கள்
மூவாயிரத்துக்கும் அதிகமாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெந்தகோஸ்து நாளன்று திருத்தூதர் மீது தூய ஆவி எழுந்தருளியதைப் போன்று இன்று உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளத்தினால் எம் மீதும் தூய ஆவி எழுந்தருளி வருகிறார். எந்த ஒரு செயற்பாட்டையும் செய்யும் முன்னர் தூய ஆவியிடம் செபிப்பதால் அவரின் வழிகாட்டல், வலிமை ஆகியவற்றைக் குறைவின்றிப் பெற்றுக்கொள்கிறோம். அவ்வாறே திருமுழுக்கினால் நாம் பெற்றுள்ள புதிய வாழ்வு உறுதிப்பூசுதலின் மூலம் உறுதி பெறுகிறது. மேலும் முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாக சான்று பகர்ந்து வாழும் பொறுப்பு எமக்கு இவ்வருளடையாளம்மூலம் தரப்படுகின்றது.

### 3. நற்கருணை



படம் 10.6 - ஆண்டவரின் திருவிருந்து

> பின்பு அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அதைப்பிட்டுஅவர்களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றார்.
>
> (லூக் 22 : 19)

ஆண்டவரின் இறுதி இரா உணவின்போது மேற்கூறிய வார்த்தைகளைக் கூறி இயேசு, நற்கருணையை ஏற்படுத்தினார். புகுமுக அருளடையாளங்கள் தேவநற்கருணை பெற்றுக்கொள்வதுடன் நிறைவடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லஞ்சியோனாவில் நற்கருணை புதுமை



படம் 10.7 - தேவநற்கருணை புதுமை

நற்கருணை புதுமை நடைபெற்ற காலம் - கி.பி. 700 ஆம் ஆண்டளவில்,

புதுமை நடைபெற்ற இடம் :- இத்தாலியில் லஞ்சியோனா நகர புனித எலகோன்சியன் ஆலயம்

நடைபெற்ற புதுமை :- அப்பமும் இரசமும் உண்மையாகவே இயேசுவின் திரு உடலாகவும் திரு இரத்தமாகவும் மாறுகின்றதா என சந்தேகித்த ஒரு துறவற சபை குருவானவர், திருப்பலியின் வசீகரப் பகுதி வேளையிலே அப்பம் ஒரு தசைத் துண்டாகவும் இரசம் இரத்தமாகவும் மாறியிருப்பதைக் கண்டார்.

### 1574 இல் விஞ்ஞானிகளின் ஆய்வின்போது கிடைத்த பெறுபேறு.

உறைந்து போன சமனற்ற பல வடிவ இரத்தக்கட்டிகளை நிறுத்துப் பார்த்த பொழுது ஒவ்வொரு கட்டியும் ஒரே நிறையுடையனவாக இருந்தன. அதே போன்று எல்லாக் கட்டிகளையும் ஒன்றாக நிறுக்கும்போது அவற்றின் நிறையும் ஓர் இரத்தக் கட்டியின் நிறையை ஒத்ததாக இருந்தது.

### 1978 ஆம் ஆண்டு செய்த விஞ்ஞானப் பரிசோதனையின் பெறுபேறு

- ★ சதைத்துண்டும் இரத்தமும் உண்மையாகவே ஒரு மனிதருடையது எனவும் சதைத்துண்டு மனித இதயத்திலிருந்து எடுக்கப்பட்டது எனவும் வெளிப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அந்தச் சதைத்துண்டும் இரத்தமும் " AB பொசிட்டிவ்" இரத்த வகையைச் சேர்ந்தது.

★ உடலில் புதிதாக பெற்றுள்ள இரத்தத்தைப் போல புரதப் பொருள், தாதுப் பொருள் அகற்றப்படாது தொடர்ந்து தங்கியிருக்கிறது.

★ தசைத் துண்டிற்கும் இரத்தத்திற்கும் நீண்ட நாள் பாதுகாப்பதற்கான எவ்வித இரசாயனக் கலவையும் பயன்படுத்தப்படவில்லை.

★ 12 நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக - மாற்றங்கள் இருப்பினும் இந்த சதைத்துண்டும் இரத்தமும் கெட்டுப் போகவில்லை.

### 1970 ஆம் ஆண்டு செய்த பரிசோதனையில்

டியுரின் நகர மாபெரும் கூட்டத்தில், லன்சியானோ நகரச் சதைத் துண்டிலும் இரத்தத்திலும் "AB பொசிட்டிவ்" இரத்த வகை இருப்பதாக நாசா நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.

இதனால் இயேசு உயிருடன் எழுந்தருளியிருக்கும் நற்கருணையை, நாம் அதிக ஆர்வத்துடனும் மதிப்புடனும் பக்தியுடனும் அடிக்கடி பெற்றுக் கொள்ள வேண்டும். அதனால் எமது வாழ்வு ஊட்டம் பெறுவதோடு இறையருளினால் நிறைவுபெற்று வளர்ச்சியடைகிறது. ஆதலால் சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் நற்கருணை உட்கொள்ள வேண்டும்.

**செயற்பாடு**

1. திருமுழுக்கினால் நீர் பெற்றுள்ள புதிய வாழ்வை எவ்வாறு வளர்த்துக்கொள்ளலாம்?
2. பெந்தகோஸ்து தினம் தொடர்பான பாடலிலிருந்து நீர் கற்றுக்கொள்ளும் விடயங்கள் ஐந்தை எழுதுக.



*வாழ்க்கைக்கு......*

*சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் திருப்பலியில் பங்கு கொண்டு நற்கருணை ஆண்டவரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 குணமளிக்கும் அருளடையாளங்கள்




ஆன்மீக உடல், உள சுகத்தை இவ்விரு அருளடையாளங்கள் வழியாகப் பெறலாம்.

## ஒப்புரவு அருளடையாளம்



படம் 11.1 - பாவியான பெண் இயேசுவிடம் பாவமன்னிப்புப் பெறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புரவின் அருளடையாளம் திருமுழுக்கின் பின் ஒருவர் செய்கின்ற பாவங்களுக்கு மன்னிப்புப்பெற கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டதாகும். இறை உறவிலிருந்து விலகும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையான மனமாற்றத்தோடு இந்த அருளடையாளத்தைப் பெற்று மீண்டும் இறைவனோடு உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

## ஒப்புரவு அருளடையாளத்தை நிறுவுதல்

உயிர்த்த இயேசு பாஸ்கா ஞாயிறன்று மாலையில் தமது திருத் தூதர்களின் முன் தோன்றி;

> அவர் அவர்கள் மேல் ஊதி தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவரு டைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா என்றார். (யோவா 20 :22-23)

என திருவிவிலியப் பகுதியில் உள்ள, இவ்வார்த்தைகளைக் கூறி பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கியதன் வழியாக ஒப்புரவு அருளடையாளத்தை நிறுவினார்.



படம் 11.2 - பாவமன்னிப்பு பெறுகின்ற ஒரு சந்தர்ப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாகக் கிடைக்கும் அருள்**

- ★ திருச்சபையோடு (அயலவர்களோடு) ஒப்புரவாகுதல்.
- ★ நித்திய தண்டனையிலிருந்து மீட்பு
- ★ இறைவனுடன் ஒப்புரவு, உள அமைதி
- ★ காலத்துக்குரிய தண்டனையிலிருந்து ஓரளவு விடுதலை
- ★ ஆன்மீக வலிமை

திருமுழுக்குப் பெற்ற ஒருவர் சாவான பாவம் செய்கின்றபோதெல்லாம் மனம் மாறி பாவமன்னிப்புப் பெறவேண்டும். அற்ப பாவங்களைச் செய்த பிறகும் இந்த அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்வதால் பாவத்திற்கு மன்னிப்பும் பாவத்தை விலக்கி நடக்க வலிமையும் கிடைக்கின்றது. ''பாவ மன்னிப்பு'' எனப்படுவது மீண்டும் மீண்டும் பாவம் செய்வதற்குக் கிடைக்கின்ற ஒரு அனுமதிப் பத்திரம் அல்ல. ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக இறைவனோடு உறவை ஏற்படுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. பாவம் வெறுக்கத்தக்கது என்பதால் அதிலிருந்து விலகிப் போக உறுதி செய்துகொள்ள வேண்டும். இறை அருளில் வாழ்வதற்கு அதனை ஒரு வழியாகக்கொள்ள வேண்டும்.

**ஒப்புரவு அருளடையாளத்தைத் தகுதியான முறையில் பெற்றுக்கொள்ளத் தேவையானவை.**

1. தனது பாவங்களை நினைத்தல்.
2. அவற்றுக்காக மனம் வருந்துதல்.
3. இனிமேல் பாவம் செய்வதில்லை என உறுதி செய்தல்.
4. பாவங்கள் அனைத்தையும் குருவானவரிடம் கூறுதல்.
5. குருவானவர் தரும் அபராதங்களை நிறைவேற்றுதல்

**நோயில் பூசுதல்**




படம் 11.3 - பெத்சாயிதா குளத்தருகே குணமளித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் ரீதியாக நாம் நலிவடையும்போது ஆன்மீக ரீதியான சக்தியைப் பெற்று, ஆன்மீக, உடல் சுகத்தைப் பெற நோயில்பூசுதல் அருளடையாளம் அளிக்கப்படுகிறது.

## நோயில் பூசுதல் அருளடையாளத்தின் வழியாகக் கிடைக்கும் அருள்

- ★ கிறிஸ்துவின் துன்பங்களில் பங்காளியாதல்
- ★ வேதனையைத் தாங்கிக்கொள்ள வலிமை
- ★ பாவங்களுக்கு மன்னிப்பு
- ★ உடற் சுகம்
- ★ நிலை வாழ்வைப் பெறுவதற்கான ஆயத்தம்

## நோயில் பூசுதல் அருளடையாளத்தைப் பெறவேண்டிய சந்தர்ப்பங்கள்

- ★ ஒருவர் கடுமையான உடல் நோயில் இருக்கும்போது,
- ★ கடுமையான அறுவை சிகிச்சைக்கு முன்னர்,
- ★ வயோதிபத்தில் உடல் நலிவடைந்து இருக்கையில்,
- ★ மரணத்தருவாயில் இருக்கையில்,
- ★ கடுமையான விபத்தின் பின்னர்.

## நோயில் பூசுதல் பெறுவதற்கான இடத்தினை ஆயத்தம் செய்தல்



படம் 11.4 - நோயிற் பூசுதல் பெறுவதற்கு ஆயத்தம் செய்யப்பட்ட இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வீட்டில் நோயில் பூசுதல் கொடுக்க இருக்கும் சந்தர்ப்பத்தில் மேற்காணும் விதத்தில் நோயில் பூசுதலுக்கான இடத்தை ஆயத்தம் செய்யுங்கள்.

எமது அயலவரில் ஒருவர் நோயில் இருக்கும் சந்தர்ப்பத்தில் அவர் ஒரு கத்தோலிக்கராய் இருப்பின் பங்குத் தந்தைக்கு அது பற்றி அறிவித்து, இவ்வருளடையாளத்தைப் பெறுவதற்கு தேவையானவற்றைச் செய்தல் வேண்டும். மேலும் அடிக்கடி நற்கருணை பெறுவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்பாடு செய்தல் வேண்டும். இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒப்புரவு அருளடையாளத்தை பெறச் செய்து அவர்களுக்காகச் செபித்தல் வேண்டும்.

**செயற்பாடு**

1. இடைவெளியை நிரப்புக.
   (i) "எவருடைய .................... அவை ...................."
   (ii) .................... ஏற்படுத்துவதன் வழியாக வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
2. நோயில் பூசுதல் பெறக்கூடிய இரண்டு சந்தர்ப்பங்களை எழுதுக.
3. உங்கள் அயலில் வசிக்கும் கத்தோலிக்க நோயாளிக்கான உங்களது கடமைகள் மூன்று எழுதுக.



*வாழ்க்கைக்கு......*

*பாவம் செய்யும் போதெல்லாம்*
*பாவமன்னிப்பைப் பெற்று*
*தவறுகளிலிருந்து விடுபடுவோம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 பணி வாழ்வின் அருளடையாளங்கள்

பணி வாழ்வின் அருளடையாளங்கள் இரண்டு. அவையாவன,

1. குருத்துவம் : இயேசு கிறிஸ்து தம் திருத்தூதர்களிடம் ஒப்படைத்த தூதுப்பணியை உலக முடிவுவரை தொடர்ந்து ஆற்றுவதற்காகவே இவ்வருளடையாளம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.
2. திருமணம் : நிலையான திருமண உடன்படிக்கையின் மூலம் இணையும் தம்பதியர், பிரமாணிக்கமாகவும் துணை யாகவும் அன்பு உறவின் முழுமையால் குழந்தைகளைப் பெற்று, அவர்களை நற்பண்புள்ள வர்களாக்கி, இறை ஆட்சியை இவ்வுலகில் ஏற்படுத்த உதவுவர்.

இந்த இரு அருளடையாளங்களின் வழியாகவும் இறை மக்கள் கட்டியெழுப்பப்படுகிறார்கள். குருக்கள் தமது பங்கிலும் பெற்றோர் தமது வீட்டிலும் நல்லதொரு சூழலை உருவாக்குவதன் வழியாக குருத்துவத்தை அல்லது திருமண உடன்படிக்கையை அவர்கள் பெற்ற நாள் முதல் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவார்கள்.

## குருத்துவம்



படம் 12.1 - திருப்பலி நிறைவேற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு பெரிய வியாழக்கிழமை அன்று பின்வரும் வார்த்தைகளைக் கூறி நற்கருணையை ஏற்படுத்தினார்.

> பின்பு அவர் அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, ''இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல், எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்'' என்றார்.
>
> (லூக் 22 : 19)

இயேசுவால் கடைசி இராவுணவின்போது நிறுவப்பட்ட இந்த அருளடையாளத்தை, குருக்கள் திருப்பலியை ஒப்புகொடுப்பதன் வழியாகத் தொடர்ந்து நினைவு கூர்கின்றனர். மேலும் குருத்துவத்தின் மூலம் ஆன்மாவில் அழியாத முத்திரையொன்றும் பதிக்கப்படுகின்றது. ஆகவே இந்த அருளடையாளத்தை ஒரு முறை மட்டுமே பெறமுடியும்.

### குருக்களின் பணிகள்

- ★ நற்செய்தியைப் போதித்தல்.
- ★ உண்மை ஆயனாக இருத்தல்.
- ★ திருப்பலி ஒப்புக்கொடுத்தல்.
- ★ அருளடையாளங்களை வழங்குதல்.
- ★ இறைவனுக்கும் மக்களுக்கும் நடுநிலையாளராகப் பணியாற்றுதல்.
- ★ இறைமக்களை இறைவனிடம் வழிநடத்திச் செல்லல்.
- ★ பங்கு மக்களுக்குத் தேவையான ஆன்மீக உதவிகளைச் செய்தல்.
- ★ மக்களை ஆசீர்வதித்தல்.
- ★ மறைக்கல்வி வகுப்புக்களை நடாத்துதல்.
- ★ மறையைக் கற்பித்தல்.
- ★ மரணச் சடங்குகளை நடாத்துதல்.
- ★ வீடுகளைத் தரிசித்தல்.
- ★ ஏழைகளுக்கு உதவுதல்.

இவ்வாறாக எமக்கு பணியாற்றுகின்ற குருக்களின் பணிகளை திறமையாகச் செய்வதற்கு அவர்களுக்கு உதவி செய்தல் கிறிஸ்தவ பிள்ளைகளாகிய எமது கடமையாகும். ஆதலால் நாம் அனைவரும் அவர்களின் பணிகளுக்கு உதவுவோம். கீழே காணப்படும் படங்களில் இவ்வாறான சில சந்தர்ப்பங்களைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 12.2 - பீடப்பணியாளராக



படம் 12.3 - இறை வார்த்தை/விசுவாசிகளின் மன்றாட்டு வாசித்தல்



படம் 12.4 -பாடகர் குழுவில் இணைதல்



படம் 12.5 -ஆலயச் சூழலை துப்புரவு செய்தல்

## திருமணம்



படம் 12.6 - திருமணம்

## திருமண அருளடையாளத்தை நிறுவுதல்

இறைவனால் ஆரம்பிக்கப்பட்ட திருமணத்தை இயேசு கிறிஸ்து ஓர் அருளடையாளமாக உயர்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு ஆண்டவராகிய கடவுள், "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று; அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்" என்றார்.

(தொ.நூ 2 :18)

படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள், "ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர்; இனி அவர்கள் இருவர் அல்லர் ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்." என்றார்

(மாற் 10 : 6-9)

## பெற்றோர்மட்டில்பிள்ளைகளின்கடமைகளும்பொறுப்புக்களும்

| | |
|---|---|
| சீராக் 3 : 12-16 | • உன் தந்தையின் முதுமையில் அவருக்கு உதவு.<br>• அவர் உள்ளத்தைப் புண்படுத்தாதே.<br>• அவரது அறிவாற்றல் குறைந்தாலும் அவருக்கு இரக்கம்காட்டு<br>• தந்தையைக் கைவிடாதே.<br>• அன்னையைச் சினமூட்டாதே. |
| சீராக் 7 : 27-28 | • உன் தந்தையை உன் முழு உள்ளத்துடன் மதித்து நட.<br>• உன் தாயின் பேறுகாலத் துன்பத்தை மறவாதே.<br>• அவர்கள் உன்னைப் பெற்றெடுத்தவர்கள் என்பதை மறவாதே. |
| கொலோசையர் 3 : 20 | • பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். |
| எபேசியர் 6 : 1-2 | • பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு கீழ்ப் படியுங்கள்.<br>• உன் தந்தையையும் தாயையும் மதித்து நட. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 12.6 - பெற்றோரை வணங்குதல்

இந்தப் படத்தைப் பாருங்கள். தமது பெற்றோரின் பாதங்களை வணங்குகின்ற இரு பிள்ளைகளைக் காண்கிறோம். இவ்வாறே நாமும் நமது பெற்றோரின் பாதங்களைத் தவறாது வணங்க வேண்டும். எமக்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்கின்ற இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். மாணவர்களான நாம் எமது கல்விச் செயற்பாடுகளினால் அவர்களை மகிழ்விக்க வேண்டும். வீட்டில் எப்பொழுதும் அமைதி நிலவும் வகையில் செயற்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் எமக்கு வாழ்வளித்து எம்மை ஊட்டம் பெறச் செய்கின்றனர். எமக்குக் கல்வியைப் பெற்றுத் தருகின்றனர். எமது கல்விச் செயற்பாடுகள் பற்றித் தேடிப்பார்ப்பார்கள். எம்மை ஊக்குவிப்பார்கள்.

**செயற்பாடு**

1. குருத்துவத்தை நிறுவுதல், குருக்களின் பணிகள் என்பன உள்ளடக்கப்பட்ட குறிப்பு ஒன்றைத் தயாரிக்கவும்.
2. குடும்பத்தில் பிள்ளைகளது கடமைகள் பொறுப்புக்கள் சிலவற்றை சுவரொட்டியாக முன்வைக்கவும்.



*வாழ்க்கைக்கு......*

*பெற்றோருக்கும் பங்குத்தந்தையர்க்கும்*
*ஆசிரியர்களுக்கும் பெரியோருக்கும்*
*கீழ்ப்படியுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 பத்துக் கட்டளைகள்



படம் 13.1 - சீனாய் மலை உச்சியில் பத்துக் கட்டளைகளைப் பெறல்

இறைவன் சீனாய் மலையின் உச்சியில் மோசேயிடம் பத்துக் கட்டளைகளைக் கொடுத்த விதத்தினை இப்படத்தில் காணலாம். இக் கட்டளைகளைப் பெறுவதற்கு முன்னர் மோசே 40 நாட்கள் செபத்தில் ஈடுபட்டார்.

நாம் நற்பண்புள்ளவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் வாழ வழிகாட்டவே இறைவன் இப்பத்துக் கட்டளைகளைத் தந்துள்ளார். இறை அன்பினை அடித்தளமாகக் கொண்டு அயலவர்களை அன்பு செலுத்துவதே கிறிஸ்தவ திருமறையின் முதன்மைப் படிப்பினையாகும். இதனைக் கடைப்பிடித்து வாழ இறைவனின் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்துக் கட்டளைகள்

### முதல் மூன்று கட்டளைகள்

1. உண்மையான ஒரே இறைவனை மட்டுமே ஆராதனை செய்வாயாக
2. இறைவனின் திருநாமத்தை அநாவசியமாக பயன்படுத்தாதிருப்பது.
3. ஓய்வு நாளாகிய ஞாயிற்றுக் கிழமையை பரிசுத்தமாக வைத்திருப்பது.

### மிகுதி ஏழு கட்டளைகள்

4. தந்தை தாய் பேணுதல்.
5. கொலை செய்யாதிருத்தல்.
6. விபச்சாரம் செய்யாதிருத்தல்.
7. களவு செய்யாதிருத்தல்.
8. பொய் உரையாதிருத்தல்.
9. பிறர் தாரத்தை விரும்பாதிருத்தல்.
10. பிறர் பொருளை விரும்பாதிருத்தல்.

இந்த இறை கட்டளைகள் ஒழுக்கமுள்ள, சட்டங்களை மதிக்கும் ஒருவரை உருவாக்குவதற்கான வழிகாட்டல்களாகும்.

| இறை கட்டளைகள் | நாம் பெறுகின்ற செய்தி |
|---|---|
| முதலாவது இறை கட்டளை | மூவொரு இறைவனை மட்டும் நாம் ஆராதனை செய்ய வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. |
| இரண்டாவது இறை கட்டளை | உண்மைக் காரணம் ஒன்று இல்லாமல் வெறுமனே சத்தியம் செய்வதும் பொய்ச் சத்தியம் செய்வதும் பரிசுத்தமானவற்றைச் சபிப்பதும் செய்யத் தகாதனவாகும். |
| மூன்றாவது இறை கட்டளை | ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் முழுத் திருப்பலியில் பங்கு பற்றுதல் வேண்டும். ஓய்வு நாளாக அனுசரிப்பதோடு மட்டுமன்றி பிறர்க்கு உதவிகள் செய்தலும் வேண்டும். இந்நாட்களிலும் ஏனைய நாட்களிலும் தவறான செயல்களைச் செய்யாது தூய்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும். |
| நான்காவது இறை கட்டளை | இவ்வுலகில் இறைவனைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற எமது பெற்றோரை நாம் மதித்தல் வேண்டும். ஆசிரிய, ஆசிரியைகள், பெரியோர், திருச்சபையின் தலைவர்கள், அரச அதிகாரிகள் ஆகியோரையும் மதித்தல் வேண்டும். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஐந்தாவது இறை கட்டளை | அயலவர்களின் உடல், ஆன்மீக நலன்களை மதித்து அமைதியோடு வாழ வேண்டும். எமது உடல் நலன் பற்றியும் அக்கறை கொண்டிருக்க வேண்டும். |
| ஆறாவது இறை கட்டளை | தகாத வார்த்தைகள் பேசுதல், தகாதவற்றைப் பார்த்தல் என்பன தவிர்க்கப்பட வேண்டும். தூய்மையான உள்ளம், நன்நடத்தை என்பன கட்டியெழுப்பப்பட வேண்டும். |
| ஏழாவது இறை கட்டளை | பிறருடைய பொருட்களை எடுக்காமல் இருப்பது, அவற்றைப் பாதுகாப்பது, பிறருடைய உரிமைகளை மதிப்பது போன்ற செயல்களைப் பழகிக்கொள்ள வேண்டும். |
| எட்டாவது இறை கட்டளை | எப்பொழுதும் உண்மை பேசுபவர்களாக இருத்தல் வேண்டும். |
| ஒன்பதாவது இறை கட்டளை | திருமணமானவரோடு முறையற்ற உறவு கொண்டிருக்கக் கூடாது. |
| பத்தாவது இறை கட்டளை | தாம் பெற்றுக் கொண்டவற்றில் திருப்தி அடைவதோடு, பிறரின் முன்னேற்றத்தில் மகிழ்ச்சியடைய வேண்டுமெனக் கூறப்படுகிறது. |

மேலுள்ள அட்டவணை பத்துக் கட்டளைகளின்படி நாம் வாழ்வதற்கான வழிகாட்டல்களைத் தருகிறது.

**செயற்பாடு**

பத்துக் கட்டளைகளை ஒழுங்காக எழுதி ஒரு கையடக்கத் தொலைபேசி போன்ற ஆக்கமொன்றைத் தயாரியுங்கள்.



***வாழ்க்கைக்கு.........***

*இரவில் நித்திரைக்குச் செல்வதற்கு முன்னர் ஒவ்வொரு கட்டளைகளுக்கும் எதிராகச் செய்தவற்றை நினைத்து, தவறு செய்திருப்பின் இறைவனிடம் மன்னிப்புக் கேளுங்கள். மீண்டும் அத்தவறினை செய்யாதிருக்க உறுதியும் பூணுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 இறை அன்பு



படம் 14.1 - சாத்ராக்கு, மேசாக்கு, அபேத்நெகோ ஆகிய மூவரும் தீப்பிழம்பின் நடுவே எரியாமல் உலாவும் காட்சி

மிகப் பன்னெடுங்காலத்தில் பாபிலோனியா என்னும் நாட்டிலே நெபுகத்னேசர் என்னும் பலம் மிக்க மன்னர் ஒருவர் இருந்தார். இவர் உண்மையான ஒரே கடவுளை வழிபடாது வேறு கடவுளரை வணங்கினார்.

இம்மன்னன் தனது பணியாட்களைக்கொண்டு மிகப் பெரிய பொற்சிலை ஒன்றைச் செய்து பாபிலோனியா நாட்டின் ''தூரா'' என்னும் இடத்தில் அச்சிலையை வைத்து அந்நாட்டு மக்கள் அனைவரும் வழிபட வேண்டுமென ஆணை பிறப்பித்தான் மன்னரது ஆணையை மீறுகின்ற அனைவருக்கும் மரண தண்டனையும் அறிவித்தான். எனினும் அந்நாட்டில் சாத்ராக்கு, மேசாக்கு, அபேத்நெகோ என்னும் யூத இனத்தைச் சேர்ந்த மூவர் இருந்தனர். இவர்கள் உண்மையான இறைவனை மட்டும் முழு உள்ளத்தோடு வழிபடுவதோடு, மரியாதையும் அன்பும் செலுத்தி வந்தனர். இவர்கள் நெபுகத்னேசர் மன்னரின் பொற்சிலையை வழிபட மறுத்தனர். இதனை அறிந்து கோபமுற்ற மன்னன் தீச் சூளையில் அவர்களைத் தூக்கி எறியும்படி கூறி மரண தண்டனை விதித்தான்.

தீப் பிழம்பு நாற்பத்தொன்பது முழம் எழும்பிற்று. பணியாட்கள் மேலும் தீ வளர்த்த வண்ணம் இருந்தனர். அவர்கள் மூவரையும் தீச் சூளைக்குக் கொண்டு சென்று எறிந்தனர். தீ சூளைக்குக் கொண்டு சென்ற பணியாட்கள் இறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறியப்பட்ட இம்மூவரது தலையில் உள்ள ஒரு மயிர் கூட அசையவில்லை. இவர்கள் மிக்க மகிழ்ச்சியோடு தீச் சூளையின் நடுவில் உலாவிக் கொண்டிருந்த விதத்தினை மன்னனும் அங்கிருந்த ஏனையோரும் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஆச்சரியமடைந்தனர். இந்நிகழ்ச்சியைக் கண்ட மன்னன் நெபுகத்னேசர் தான் செய்த பொற்சிலையைத் தூக்கி எறிந்துவிட்டு அன்று தொடக்கம் உண்மையான ஒரே கடவுளை வழிபடத் தொடங்கினான். நாட்டு மக்களையும் அவ்வாறே செய்யும்படி ஆணை பிறப்பித்தான்.

(தானியேல் 3)

அன்று அவர்களை தீச் சூளையிலிருந்து காப்பாற்றிய அதே இறைவனுக்கு இன்று நாமும் வழிபாடும் ஆராதனையும் செலுத்தி வருகின்றோம். இதே போன்று உண்மையான ஒரே இறை தந்தையை மட்டுமே நாம் ஆராதனை செய்ய வேண்டுமென முதலாவது கட்டளை எடுத்துக் காட்டுகிறது. இன்றைய சமூகத்திலே மரஞ்செடிகள், சிலைகள், மிருக உருவங்கள் போன்றவற்றிற்கு ஆராதனை செலுத்தும் பலருக்கு உண்மை ஆராதனை எதுவென்பதற்கு மேலுள்ள நிகழ்வு மிகச் சிறந்த உதாரணமாக அமைகிறது.

ஒரே இறைவனை மட்டும் நாம் ஆராதிக்கும்போது சாத்ராக்கு, மேசாக்கு, அபேத்நெகோ ஆகியோரை தீச் சூளையில் இருந்து காப்பாற்றிய அந்த உண்மையான ஒரே இறைவன் எம்மோடு இருந்து எம்மையும் எல்லாத் தொல்லைகளிலுமிருந்தும் பாதுகாக்கின்றார். அதேபோன்று வாழ்க்கையில் முகங்கொடுக்கும் எல்லாச் சவால்களையும் வெற்றிகொள்ளத் தேவையான இறை தந்தையின் பாதுகாப்பும் வல்லமையும் குறைவின்றி எமக்குக் கிடைக்கின்றது என்பதும் உறுதியாகும்.

உண்மையான ஒரே இறைவனை ஆராதித்தல் தொடர்பாக எமக்குத் தரப்பட்டுள்ள கட்டளைகள் மூன்றின் இரண்டு. அவை பின்வருமாறு;

1. நாம் இறைவனாகிய கடவுள் ஒருவரை மட்டுமே பணிந்து ஆராதிக்க வேண்டும்.

2. இறைவனாகிய ஆண்டவருடைய திருப்பெயரை பொய்யாக ஒரு பொழுதும் பாவியாமல் இருப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டு இறை கட்டளைகள் பற்றி இணைச் சட்ட நூலில் கூறப்பட்டுள்ள இறைவார்த்தைக்கு எமது கவனத்தைத் திருப்புவோம்.

என்னைத் தவிர வேறு கடவுள் உனக்கு இருத்தல் ஆகாது. மேலே விண்ணுலகிலும் கீழே மண்ணுலகிலும், மண்ணுலகின் கீழுள்ள நீர்த்திரளிலும் உள்ள எந்த உருவத்திலேனும் உனக்கென நீ சிலையை செய்யாதே. நீ அவைகளை வழிபடவோ அவற்றுக்குப் பணிவிடை புரியவோ வேண்டாம்........... உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே. ஏனெனில் தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவனை ஆண்டவர் தண்டியாது விடார்.

(இச 5 :7-9,11)



படம் 14.2 - உண்மையான ஒரே இறைவனை மட்டும் ஆராதனை செய்யும் மக்கள்.

திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த இறை கட்டளைகளை கிறிஸ்தவர்களாகிய நாம் கடைபிடித்தல் அவசியமாகும். இதன் வழியாக உன்னத இறைவனுக்கு எமது மரியாதையையும் அன்பையும் செலுத்தலாம். முதலாம், இரண்டாம் இறை கட்டளைகளை எப்பொழுதும் எமது நினைவில் வைத்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| i | ii |
|---|---|
| உண்மையான ஒரே இறைவனை மட்டும் ஆராதனை செய்வாயாக | இறைவனாகிய ஆண்டவருடைய திருப்பெயரைப் பொய்யாக ஒரு பொழுதும் சத்தியம் செய்யாதே |

முதலாம் இரண்டாம் இறை கட்டளைகளுக்கேற்ப செய்யத் தகுந்தவை, செய்யத் தகாதவை பற்றிக் கவனிப்போம்.

| இறை கட்டளைகள் | செய்யத் தகுந்தவை | செய்யத் தகாதவை |
|---|---|---|
| முதலாவது இறை கட்டளை | • உண்மையான ஒரே இறைவனை மட்டும் ஆராதனை செய்தல்.<br>• தினமும் வேலைகளை ஆரம்பிக்கும் முன்னர் இறைவனுக்கு ஆராதனையும் புகழ்ச்சியும் கூறிச் செபித்தல்.<br>• வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் இறை தந்தையில் நம்பிக்கை வைத்தல்.<br>• இறுதிவரை இறைதந்தைக்கு பிரமாணிக்கமாய் இருத்தல். | • எந்தவொரு ஆளையோ, பொருளையோ ஆராதனை செய்தல்.<br>• வேறு கடவுளை ஆராதித்தல்.<br>• சிலை வழிபாடு<br>• மூட நம்பிக்கைகளான பில்லி, சூனியம், மந்திரித்த கூடு, மந்திரித்த எண்ணெய் வகைகள், நூல் என்பன உபயோகித்தல்.<br>• சகுன சாஸ்திரம் பார்த்தல், சுப வேளை பார்த்தல் மைவெளிச்சம் பார்த்தல்.<br>• பிற மறைகளின் வழிபாடுகளில் பங்குபற்றல். |
| இரண்டாவது இறை கட்டளை | • எந்த நேரத்திலும் உண்மையை மட்டும் வெளிப்படுத்துதல்.<br>• நீதி மன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் உண்மையை மட்டும் வெளிப்படுத்த வேண்டும். | • இறை தந்தையின் பெயரில் சத்தியம் செய்தல்.<br>• நீதி மன்றத்தில் பொய்ச் சத்தியம் செய்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாம் இறைவனின் பெயரில் எந்தவொரு ஆளுக்கோ, பொருளுக்கோ ஆராதனை செய்யக் கூடாதென இணைச்சட்ட நூலின் 5 /7-8 வசனங்களில் நாம் கற்றோம்.

புனிதர்களின் சுரூபங்கள் நாம் செபிப்பதற்குத் துணையாக இருக்கின்றன. திருச்சுரூபங்களை உற்றுநோக்கும்போது அப்புனிதரைப் பற்றி மனதில் கற்பனை செய்வதற்கு இவை எமக்கு உதவுகின்றன. எனினும் புனிதர்கள் எமக்காகச் செபிக்கிறார்கள். நாங்கள் புனிதர்களின் சுரூபங்களின் முன்னிலையில் எமக்காக இறைவனிடம் பரிந்து பேசும்படியும் மன்றாடவும் நேர்த்திகள் வைத்தும் செபிக்கிறோம்.

எமக்குத் தேவையானவற்றைத் தருபவர் இறைவனே. இவ்வாறே எமது நிலை வாழ்வை நோக்கிய பயணத்தில் புனிதர்கள் முன்மாதிரிகைகளாக இருக்கிறார்கள். எனவே புனிதர்களின் பொருட்டு செய்கின்ற எல்லா பக்தி முயற்சிகளும் அவர்களுக்குச் செய்யும் வணக்கமாகும்.

மேலும் பிற மதங்களின் சடங்குகள் நடாத்துதல், நேர்த்திகள் வைத்தல், வணங்குதல் ஆகியன முதலாவது கட்டளைக்கு எதிரான பாவமாகும். பொய்த் தெய்வ வழிபாடு, சிலை வழிபாடு என்பன இறை தந்தைக்கு அருவருப்பானது என திருவிவிலியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

எம்மைப் பாதுகாக்கின்ற தந்தையாம் இறைவன் தொடக்ககாலம் முதல் ஆதித் தந்தையர்களையும் மக்களையும் பாதுகாத்து வழி நடத்தி வந்த விதத்தினை திருவிவிலியத்தில் பல இடங்களில் காணலாம். ''விடுதலைப் பயணம்'' நூல் இதற்கான நல்ல உதாரணமாகும். அன்று போல இன்றும் எமது தந்தையாம் இறைவன், நம்மைப் பாதுகாக்கின்றார் என்பது உறுதியாகும்.

எனவே நாம் அனைவரும்

- தந்தையாம் இறைவனுக்கு மட்டும் ஆராதனை செய்வோம்.
- அவருடைய திருப்பெயருக்கு மரியாதை செய்வோம்.
- இறை தந்தை விரும்பும்படியாக நாம் வாழ்வோம்.

நமது நற்பண்புள்ள வாழ்வும் இறைவனுக்கு நாம் செலுத்தும் ஆராதனையும் புகழ்ச்சியுமாக அமைகிறது. இவ்வாழ்வினூடாக இறை தந்தையின் ஆசீர் வற்றாத ஊற்று போன்று எம் வாழ்வில் பெருக்கெடுத்து ஓடுவதை சுவைப்போம். இந்த மகிழ்சிகரமான அனுபவத்தினை உங்களாலும் பெற்றுக்கொள்ள முடியும். எனவே நீங்களும் முயற்சி செய்யுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

(1) கீழ்க் காணப்படும் வாக்கியங்கள் சரியாயின் "✓" அடையாளத்தையும் பிழையாயின் "×" அடையாளத்தையும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் குறிக்கவும்.

i. இறைவனை மட்டும் ஆராதனை செய்ய வேண்டும். ( )

ii. துன்ப துயரங்கள் வாழ்க்கையில் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மை வெளிச்சம் பார்த்தல் தவறாகும். ( )

iii. பிற மறைகளுக்கு மரியாதை செய்தல் நல்ல கிறிஸ்தவப் பண்பாகும். ( )

iv. ''இறைவனது திருப்பெயரை அவமரியாதையாக உபயோகிக்க வேண்டாம்'' என்பது முதலாவது இறை கட்டளையாகும். ( )

v. வேறு கடவுளை வணங்குவது முதலாவது கட்டளையை மீறுவதாகும். ( )

vi. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இறைவனுடைய திருப்பெயரில் சத்தியம் செய்ய எம்மால் முடியும். ( )

vii. வீட்டில் சிறு பிள்ளைகள் இருக்கும்போது ''சிறு பிள்ளைகளுக்கான நோய் இன்றல்ல நாளை'' என எழுதுவது அவசியமாகும். ( )

viii. பரீட்சைக்கு முன்னர் பிறமத ஆலயத்திற்கு சென்று நாம் நேர்த்தி செய்யலாம். ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) முதலாம், இரண்டாம் இறை கட்டளைகளின்படி செய்யத் தகுந்த / தகாத செயல்கள் அடங்கிய சுவரொட்டியொன்றை ஆக்குங்கள்.

(3) முதலாம் இரண்டாம் கட்டளைகளுக்குச் சார்பான /சார்பற்ற விடயங்களைக் குறிப்பிட்டு பாடலொன்றை இயற்றிப் பாடவும்.



*வாழ்க்கைக்கு.........*

★ *காலையில் எழுந்தவுடன் எப்பொழுதும் சிறிது நேரம் மௌனமாகச் செபியுங்கள்.*

★ *பல்லிகள் சத்தம் செய்தல், ஆந்தைகள் அலறுதல், நாய் ஊளையிடுதல் ஆகிய அன்றாட நிகழ்வுகளை அபசகுனமாக கொள்ளும் மூட நம்பிக்கைகளை விட, வல்லமையுள்ள எல்லாம் வல்ல இறை தந்தை எம்மை அன்பு செய்கின்றார் எனவும் பாதுகாக்கிறார் எனவும் நம்பிக்கை கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஞாயிறு தினத்தைத் தூய்மையாகக் கடைப்பிடிப்போம்



படம் 15.1 - ஞாயிறு தினத்தன்று திருப்பலியில் பங்கேற்கும் பங்கு மக்கள்

வாருங்கள் அன்பு மாந்தரே/பலிசெலுத்த வாருங்கள்
பண்ணிசைத்துப் பாடுங்கள்/ வாருங்கள் அன்பு மாந்தரே

இயேசு என்னும் ஆதவன் கதிர் விரிக்கக் காணுங்கள்
இதயம் என்ற மலர்விரித்து மணம் பரப்ப வாருங்கள்
ஆசை என்ற இருள் மறைந்து அன்பு உதயமாகவே - 2
அருள் வழங்கும் இதயம் சேரும் அன்புருவைக் கேளுங்கள்
(வாருங்கள் அன்பு மாந்தரே)

அன்பு என்றால் என்னவென்று அவனைக் கேட்டுப் பாருங்கள்
அத்தனையும் தருவருதான் அன்பு என்று கூறுவான் தன்னை ஈந்து
அன்பு செய்த தேவன் இங்கு வருகின்றார் - 2
நம்மை முற்றும் நந்து இன்பம் யாவும் பெற்றுத் திரும்புவோம்
(வாருங்கள் அன்பு மாந்தரே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலில் கூறப்பட்டுள்ளதன்படி;

1. எவ்வாறான செயற்பாட்டிற்காக நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள்?
2. இறை தந்தை பாடலினால் வாழ்த்தி, ஆராதிப்பதற்கான தகுதி உள்ளவர் என்பதற்கு இரண்டு காரணங்கள் தருக.
3. இயேசுவின் சிலுவை மரணத்தினால் எமக்கு உரிமையாவது எது?
4. இறைவனை ஆராதித்து,புகழ்ந்து, நன்றி கூறப் பங்கு மக்கள் அனைவரும் ஒரு சபையாக வாரத்தில் ஒரு முறை கட்டாயமாக ஒன்று கூடுகின்ற நாள் எது?

''ஓய்வு நாளைத் தூய்மையாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு. ஆறு நாள்கள் நீ உழைத்து உன். அனைத்து வேலையையும் செய்வாய். ஏழாம் நாளே உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள். எனவே அன்று நீயும் உன் மகனும் மகளும் உன் அடிமையும் அடிமைப் பெண்ணும் உன் கால் நடைகளும் உன் நகருக்குள் இருக்கும் அன்னியனும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். ஏனெனில் ஆண்டவர் ஆறு நாள்களில் விண்ணுலகையும் மண்ணலகையும், கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறு ஆண்டவர் ஓய்வு நாளுக்கு ஆசி வழங்கி அதனைப் புனிதப்படுத்தினார்.''

(வி.ப 20 : 8-11)

**ஞாயிறு தினத்தையும் கடன் திருநாட்களையும் தூய்மையாகக் கடைப்பிடிப்போம்.**

இந்த இறை கட்டளைக்கேற்ப ஞாயிறு தினத்திலும் திருச்சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கடன் திருநாட்களிலும் நாம் கட்டாயமாகத் திருப்பலியில் பங்கேற்க வேண்டும். ஆகவே இந்த் கடன் திருநாட்களை நாம் அறிந்திருப்பது முக்கியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் கத்தோலிக்கருக்கு உள்ள கடன் திருநாட்கள்

1. ஆண்டின் எல்லா ஞாயிற்றுக் கிழமைகளும்
2. ஜனவரி 01 - இறைவனின் அன்னையாகிய கன்னி மரியாளின் திருவிழா
3. ஆகஸ்டு 15 - மரியன்னையின் விண்ணேற்பு திருவிழா
4. டிசெம்பர் 08 - மரியன்னையின் அமல உற்பவத் திருவிழா
5. டிசெம்பர் 25 - நத்தார் பெருவிழா

கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் எனப்படும் அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை நாம் நினைவு கூருகிறோம். கிறிஸ்து மானிடர் அனைவரதும் பாவங்களுக்கு ஈடாக தமது விலைமதிப்பற்ற திரு இரத்தத்தைச் சிந்தி பலியாகினார். அவர் இதனால் மானிடர் அனைவரதும் பாவங்களுக்கு மன்னிப்பும் நிலைவாழ்வின் உரிமையும் பெற்றுத் தந்துள்ளார்.

இவ்வாறு பாவங்களுக்கு மன்னிப்புப் பெற்ற நாம் பெரு மகிழ்வோடும் ஆர்வத்தோடும் ஒற்றுமையாகவும் ஒரே மனத்தோராகவும் பங்குக் குடும்பமாக ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க வேண்டும்.

மரணத்தை வென்று உயிர்ப்பு வாழ்வினை நமதாக்கிக் கொள்வதற்கு, தம் ஒரே பேறான மகனை தந்தையாம் இறைவன் இவ்வுலகிற்கு அனுப்பினார். இதனால் தந்தை நம்மீது எத்துணை அன்பு வைத்துள்ளார் என்பது வெளிப்படுகின்றது. ஆகவே நாம் அனைவரும் தந்தையாம் இறைவனையும் மனித சந்ததியை பாவத்திலிருந்து மீட்பதற்காகத் தம்முயிரைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவையும் ஞாயிறு தினத் திருப்பலியில் ஆராதனை செய்ய வேண்டும். அத்தோடு புகழ்வதையும் நன்றித் துதி செலுத்துவதையும் எமது பிரதான மான நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

நாம் தூய்மையாகவும் பேறுபெற்றோராகவும் வாழ வேண்டுமென தந்தையாம் இறைவன் எப்பொழுதும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே எம்மை படைத்து அனைத்தையும் தந்த தந்தையாம் இறைவனுக்கு எமது நன்றியறிதலை வெளிப்படுத்தும் வழிவகைகளை ஆராய்ந்து பார்ப்போம்.

- ★ ஞாயிறு தினங்களிலும் கடன் திருநாட்களிலும் முழு மனதுடன் திருப்பலியில் பங்கேற்றல்.
- ★ மறைக் கல்வி வகுப்புக்களுக்குச் சென்று இறைவனைப் பற்றிய அறிவினை வளர்த்துக்கொள்ளல்.
- ★ குடும்பத்தில் ஒற்றுமையை வளர்க்கக் கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்குதல். (உதாரணம்:- ஒன்றாக உணவு உண்ணல், செபித்தல்)
- ★ ஆன்மாவுக்கு ஊட்டத்தினைப் பெற்றுத்தரக்கூடியனவும் சுய விருப்பத்தோடு பணியாற்றக்கூடியனவுமாகிய பல்வேறு பக்திச்சபைகள், அமைப்புக்களில் இணைதல்.
- ★ தமது நண்பர்களையும் ஞாயிறு தின திருப்பலிக்கு அழைத்துச் செல்லல்.
- ★ நோயாளிகளைத் தரிசிக்கச் செல்லுதல்.
- ★ ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்தல்.

**ஓய்வு நாளில் நாம் செய்யத் தகாத செயல்கள்**

1. திருப்பலிக்குச் செல்லாதிருத்தல்.
2. ஞாயிறு திருப்பலிக்கும் மறைக்கல்வி வகுப்புகளுக்கும் செல்லாது மேலதிக வகுப்புகளுக்குச் செல்லுதல், உல்லாசப் பயணங்கள் செல்லுதல்.
3. ஞாயிற்றுக் கிழமைகளில் முறையற்ற விதத்தில் பணம் உழைப்பதற்கான செயல்களில் ஈடுபடல்.
4. ஆலயத்துள் கதைத்தல், பகிடி செய்தல் - பிறருக்குத் துர் மாதிரியாக இருத்தல்
5. பண்பற்ற ஆடைகள், அநாகரீகமான உடைகள் என்பன அணிந்து திருப்பலிக்குச் செல்லுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு நாளிலும் ஏனைய கடன் திருநாட்களிலும் செய்யத் தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் அத்தினத்தில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய புனிதத்தன்மை அழிந்து விடும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

ஞாயிற்றுக் கிழமையையும் ஏனைய நாட்களையும் தூய்மை யாகவும் நற்பண்புள்ளதாகவும் கடைப்பிடித்து வாழ்வதனால், நீங்கள் இறை தந்தையால் விரும்பக் கூடியவர்களாக இருக்கின்றீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

அப்பொழுது உங்கள் வாழ்வுக்கு இறைவனது இரக்கமும் ஆசீரும் அதிகளவு கிடைக்கப் பெறும். உங்களது வாழ்வு இறை ஆசீரும் மகிழ்ச்சியும் நிறைந்ததாகக் காணப்படும். ஆகவே நீங்கள் எப்பொழுதும் தூய்மையாகவும் நற்பண்புள்ளவராகவும் வாழ முயற்சி செய்யுங்கள்.

**செயற்பாடு**

**சதுரங்களை உரிய சொற்களைக் கொண்டு நிரப்புங்கள்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலிருந்து கீழ்

01. வாரத்தில் ஆறு நாட்களிலும் வேலை செய்து விட்டு ஏழாவது நாளை இவ்வாறான நாளாகக் கழிக்க வேண்டும்.

02. மரியாவுக்கு மங்களம் கூறியவர் இவர்

04. அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வதைக் குறிக்கும் சொல்.

06. ஓய்வுநாள் பற்றி எத்தனையாவது கட்டளையில் கூறப்பட்டுள்ளது.

07. ஞாயிற்றுக் கிழமைகளில் இப்பாடசாலைக்குச் செல்வதால் இறை தந்தைப்பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளலாம்.

09. இயேசு இதனை வெற்றி கொண்டார்.

இடமிருந்து வலம்

03. ஞாயிறு தினங்களில் இப்படிப்பட்டவர்களைத் தரிசிக்கச் செல்வது நற்செயலாகும்.

05. ஞாயிறு தினங்களில் எமது வாழ்க்கையை இவ்வாறு கழிக்க முயற்சி செய்ய வேண்டும்.

08. பங்கிலுள்ள சபைகள், சங்கங்களில் ஈடுபட்டுச் செயலாற்றுவதனால் எமது ஆன்மா இதனைப் பெறுகிறது.

10. திருவிவிலியத்தில் ஓய்வு நாளைத் தூய்மையாகக் கழிப்பது பற்றிக் கூறப்பட்டுள்ள நூலின் பெயர்.

(2) விடை எழுதுக.

1. இறைவனுடைய அன்னைக்குரிய கடன் திருநாட்களையும் திருவிழாக்களையும் எழுதுக?

2. ஞாயிற்றுக் கிழமை நாம் விசேடமாக நினைவு கூர்வது எதனை?

3. இறை தந்தையின் ஆசீரைப் பெற்றுக்கொள்ள நாம் எவ்வாறு வாழ வேண்டும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) கீழ்க் காணப்படும் அட்டவணையை உங்களது பயிற்சிப் புத்தகத்தில் பிரதிசெய்து அதனை நிரப்புக.

| ஓய்வு நாளில் நாம் செய்யத் தகுந்தவை | ஓய்வு நாளில் நாம் செய்யத் தகாதவை |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |



வாழ்க்கைக்கு.........

திருப்பலியில் பங்கேற்கும்போது

- ★ சத்தமாக செபங்களுக்கு பதிலளிப்போம்.
- ★ மனப்பாடமில்லாத செபங்களை புத்தகத்தைப் புரட்டிச் சொல்லுவோம்.
- ★ பாடல் புத்தகமொன்றை உபயோகிப்போம்.
- ★ இருகரம் கூப்பி செபிப்போம்
- ★ பராக்குப் பார்க்காதிருப்போம்.
- ★ பகிடி செய்யாதிருப்போம்.
- ★ உரிய அங்க அசைவுகளை வெளிப்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 சகோதர அன்பு



படம் 16.1 - மகிழ்ச்சியுடன் வாழும் குடும்பம

நாம் குடும்பத்திலும் பாடசாலையிலும் சமூகத்திலும் பல தரப்பட்டவர்களுடன் வாழ்கின்றோம். அனைவரோடும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும் என்பது எம் ஒவ்வொருவரதும் விருப்பமாகும். இவ்வாறு மகிழ்ச்சியோடு வாழ வேண்டுமாயின் நாம் ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும். மற்றவர்களின் வாழ்வும் மேன்மையானது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அத்தகைய மகிழ்ச்சி மிக்க குடும்பத்தைக் கட்டியெழுப்புவதற்கு பத்துக் கட்டளைகள் எவ்வாறு எமக்கு வழி காட்டுகின்றது என்பதைக் கற்றுக் கொள்வோம். அயலாரை அன்பு செய்ய வேண்டும் என கற்பிக்கும் இறை கட்டளைகள் ஏழு உள்ளன. அவை நான்காம் கட்டளையிலிருந்து பத்தாம் கட்டளை வரையுள்ள இறை கட்டளைகள் ஏழுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• நான்காம் இறை கட்டளை - தந்தையையும் தாயையும் மதித்து நட

"உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ் நாள்கள் நீடிக்கும்படி உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட"

(வி.ப 20 :12)

"பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரை சார்ந்தவர்களுக்கு இதுவே தகும்."

(கொலோ 3 :20)

• ஐந்தாம் இறை கட்டளை - கொலை செய்யாதே

கொலை செய்யாதே

(வி.ப 20 :13)

"கொலை செய்யாதே; கொலை செய்பவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர் என்று முற்காலத்தவர்களுக்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள் "

(மத் 5 :21)

• ஆறாம் இறை கட்டளை - விபச்சாரம் செய்யாதே

விபச்சாரம் செய்யாதே (வி.ப 20 :14)

உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே உங்கள் உடலால் கடவுளுக்கு பெருமை சேருங்கள்.

(1கொரி 6 :19-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ஏழாம் இறை கட்டளை - களவு செய்யாதே

களவு செய்யாதே (வி.ப 20 :15)
திருடர், பேராசையுடையோர், குடிவெறியர், பழிதூற்றுவோர், கொள்ளையடிப்போர் ஆகியோர் இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்வதில்லை.
(1 கொரி 6 :10)

• எட்டாம் இறை கட்டளை - பொய்ச்சான்று சொல்லாதே

பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே
(வி.ப 20 :16)

ஆகவே பொய்யை விலக்கி ஒருவரோடு ஒருவர் உண்மை பேசுங்கள். ஏனெனில் நாம் யாவரும் ஓர் உடலில் உறுப்புகளாயிருக்கின்றோம்.
(எபே 4 : 25)

• ஒன்பதாம் இறை கட்டளை - பிறர் தாரத்தைக் கவர்ந்திட விரும்பாதே

பிறர் மனைவியைக்......
கவர்ந்திட விரும்பாதே

(வி.ப 20 :17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பத்தாம் இறை கட்டளை - பிறருக்குறியது எதையும் கவர்ந்திடாதே

> பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே, பிறர் அடிமை, அடிமைப் பெண், மாடு, கழுதை, அல்லது பிறர்க்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே
>
> (வி.ப 20 :17)

மேற்கூறியவாறு இறைக்கட்டளைக்கேற்ப எம் வாழ்வை அமைத்துக்கொள்வோமாயின் நாம் வாழுகின்ற சமுதாயத்தில் அனைவருமேபயமும் சந்தேகமுமின்றி மகிழ்ச்சியையும்அமைதியையும் அனுபவிக்கலாம். எனவே இக்கட்டளைகளின்படி வாழும்போது நாம் செய்யவேண்டியவற்றையும் தவிர்க்கவேண்டியவற்றையும் பார்ப்போம்.

| இறை கட்டளை | செய்ய வேண்டியவை | தவிர்க்க வேண்டியவை |
|---|---|---|
| நான்காம் இறை கட்டளை<br>தந்தையையும் தாயையும் மதித்து நட | ★ பெற்றோர், பெரியோர், வளர்ந்தோருக்கு மதிப்பளித்தல்<br>★ பெற்றோர், பெரியோரின் அறிவுரைகளைக் கடைப்பிடித்தல்<br>★ பெற்றோர் பெரியோருக்காகச் செபித்தல்.<br>★ அவர்களை அன்புடனும் இரக்கத்துடனும் பராமரித்தல் | ★ பெரியோருக்குக் கீழ்ப்படியாமை<br>★ பெரியோருடன் கோபத்துடனும் பழிவாங்கும் எண்ணத்துடனும் தர்க்கம் புரிதல்.<br>★ பெரியவர்களை துன்புறுத்தல், அவர்களைக் கேலி செய்தல்<br>★ பெரியவர்களை வேதனைக்கு உள்ளாக்குதல். |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஐந்தாம் இறைக் கட்டளை<br><br>கொலை செய்யாதே | ★ எல்லா உயிர்களும் இறை தந்தையின் மேலான பரிசு என்பதை நினைவிற் கொள்ளல்<br>★ தன் வாழ்வைப் போலவே பிறருடைய வாழ்வையும் பாதுகாத் தல்<br>★ நோயினால் அவதியு றும்போது மருந்தெ டுத்தல் வைத்தியம் பார்த்தல். | ★ தற்கொலை செய்தல்<br>★ பிறரின் உயிருக்கு அல்லது உடலுக்கு ஊறு விளைவித்தல்<br>★ உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு, போதை வஸ்துக் களைப் பயன்படுத்தல்<br>★ கோள் சொல்லுதல்<br>★ நற்பெயரைக் கெடுத்தல் |
| ஆறாம், ஒன்பதாம் இறை கட்டளை<br><br>விபச்சாரம் செய்யாதே<br><br>பிறர் தாரத்தை கவராதே | ★ திருமண வாழ்வு இறை தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய்மையும் ஆசீரும் நிறைந்த வாழ்க்கை என்பதை கருத்திற் கொண்டு பணியாற்றல்.<br>★ பிறரை பாவத்திற்குத் தூண்டாத விதத்தில் ஆடை அணிதல்<br>★ குடும்பத்தில் மகிழ்வும் அமைதியும் ஏற்படும் விதத்தில் வாழ்தல். | ★ தரம் குறைந்த புத்தகங் கள் திரைப்படங்கள் பார்த்தல்<br>★ பிறரின் இல்லற வாழ்வில் பிரிவினை உண்டாக்குதல்<br>★ ஆசைகளுக்கு அடிமையாகுதல்<br>★ மற்றவர்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தல் |
| ஏழாம், பத்தாம் இறை கட்டளை<br><br>களவு செய்யாதே | ★ பிறரின் உடமைகளைப் பாதுகாத்தல்<br>★ வியாபாரத்தில் ஈடுபடும் போது நீதியாக செயற்படுதல்<br>★ கடனாகப் பெற்றவற்றை உரிய நேரத்தில் திருப்பிக் கொடுத்தல்<br>★ உழைப்புக்கேற்ப ஊதியம் வழங்குதல் | ★ களவெடுத்தல்<br>★ இலஞ்சம் பெறுதல்<br>★ செல்வம், உடைமைகளை தவறான முறையில் சேமித்து வைத்தல்<br>★ நேரத்தை விரயமாக்குதல்<br>★ பிறருக்குரியவற்றை பலவந்தமாக கவர்ந்து கொள்ளுதல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஏழாம், பத்தாம் இறை கட்டளை<br><br>பிறருக்குரியதைக் கவர்ந்திடாதே | | ★ உடைமைகளை வீணாக்குதல்<br>★ பொதுச் சொத்துக்களை அழித்தல்<br>★ வஞ்சகம் செய்தல் |
| எட்டாம் இறை கட்டளை<br><br>பொய்ச் சான்று சொல்லாதே | ★ எப்போதும் உண்மை பேசுதல்<br>★ இறைவனைப் போல் உண்மை உடையோராய் இருத்தல் | ★ பொய் பேசுதல்<br>★ தவறான தீர்ப்பு வழங்குதல்<br>★ பொய்க் குற்றம் சுமத்துதல்<br>★ தமது தவறை மற்றவர்கள் மீது சுமத்துதல்<br>★ தமது நன்மைக்காக உண்மையை மறைத்தல் |

கீழ்க் காணும் பாடலைப் பாடுக

பாடல் :

இறைவழி செல்வோர் பேறு பெற்றோர்

1. தீயோரின் அறிவுரை கேளாதவன்
பாவியின் வழியில் செல்லாதவன்
பழிகாரர் கூட்டத்தில் அமராதவன்
பேறுப்பெற்றோர்

2. மாசற்ற வாழ்க்கை நடத்துபவன்
நீதி நியாயத்தில் நிலைநிற்பவன்
இதயத்தில் இனியதைத் தியானிப்பவன்
பேறுப்பெற்றோர்

3. தீயோரை இழிவாகக் கருதாதவன்
பிறரை பழித்துப் பேசாதவன்
நாவால் பழிச் சொல் கூறாதவன்
பேறுபெற்றோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

(1) கீழ்க் காண்பவை எந்த இறை கட்டளைக்குரியவை என்பதை அடைப்புக்குறிக்குள் எழுதுக

| | குறித்த இறை கட்டளை எண் |
|---|---|
| i. மாசற்ற வாழ்க்கை நடத்துபவர் | (.....) |
| ii. நாவால் பழி சொல் கூறாதவன் | (.....) |
| iii. உண்மை பேசுபவன் | (.....) |
| iv. பெரியவர்களை மதித்து வாழ்பவர் | (.....) |
| v. பிறரின் உடைமையைப் பாதுகாப்பவர் | (.....) |
| vi. இலஞ்சம் பெறாது காரியமாற்றுபவர் | (.....) |
| vii. மற்றவர்களின் நற்பெயரைப் பாதுகாப்பவர் | (.....) |
| viii. தமது குடும்பத்தில் மகிழ்ச்சி அமைதி ஏற்படும் விதத்தில் காரியமாற்றுபவர். | (.....) |

(2) கீழ்க் காணும் திருவிவிலியப் பகுதிகளை உமது பயிற்சி புத்தகத்தில் எழுதவும். அவற்றுடன் தொடர்புடைய இறைக்கட்டளையையும் எழுதவும்.

| | | |
|---|---|---|
| i. | வி.ப | 20:12, 20:13, 20:14, 20:15, 20:16, 20:17 |
| ii. | லேவி | 19:11 |
| iii. | மத் | 5:21 |
| iv. | கொலோ | 3:20 |
| v. | 1 கொரி | 6:10, 6:18 |
| vi. | எபே | 4:25 |



*வாழ்க்கைக்கு.......*

*நன்னெறியில் வாழுங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 பகைவரை அன்பு செய்தல்



படம் 17.2 - சிலுவையில் பலியாகிய இயேசு

என் பகைவருக்கும் எனக்கும்
பாலம் ஒன்று அமைப்பீரே இயேசுவே இயேசுவே

அந்தப் பாலத்தில் நான் நடக்க
பலம்தாரும் என் இயேசுவே - என்

என் பகைவரை ஏற்றுக் கொள்ள
மனம் தாரும் என் இயேசுவே - என்

என் பகைவரை அன்பு செய்ய
அன்பைத் தாரும் என் இயேசுவே - என்

என் பகைவரை நான் மன்னிக்க
வரம் தாரும் இயேசுவே - என்

மேற்குறிப்பிட்டுள்ள பாடலிலிருந்து உமது வாழ்வுக்கு கற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினைகள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைத் துன்புறுத்துவோர், எம்மை பகைப்போர் அனைவரையும் நாம் மன்னிக்க வேண்டும். இதனை திருவிவிலியத்தின் ஒளியில் பார்ப்போம்.

"கண்ணுக்குக் கண்', 'பல்லுக்குப் பல்' என்று கூறப்பட்டிருப்பதை கேள்விபட்டிருக்கிறீர்கள், ஆனால் நான் உங்களுக்குச் சொல் கிறேன். தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்கள் வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து, உங்கள் அங்கியை எடுத்துக் கொள்ள விரும்பினால் உங்கள் மேலுடையையும் அவர் எடுத்துக் கொள்ள விட்டுவிடுங்கள். எவராவது உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள். உங்களிடம் கேட்கிறவருக்குக் கொடுங்கள். கடன் வாங்க விரும்புகிறவர்களுக்கு முகம் கோணாதீர்கள்."

*(மத் 5 : 38 - 41)*

எம்மை அன்பு செய்பவர்களை நாமும் அன்பு செய்வது எளிதானது. ஆனால் எம்மைத் துன்புறுத்துவோர், பகைவர் என்போரை அன்பு செய்வதென்பது கடினமாகும் என மேலுள்ள திருவிவிலியப் பகுதி அறிவுறுத்துகின்றது.

இறைதந்தையின் ஆசீர், இரக்கம், அன்பு ஆகியன அனைவருக்கும் சமமாகக் கிடைக்கிறது. அவர் எம் அனைவரையும் அன்பு செய்கிறார். அவ்வாறே நாமும் எம்மைப் பகைப்பவர்களையும் அன்பு செய்ய வேண்டுமென இயேசு தெளிவாகக் கற்பிக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக. பகைவரிடம் வெறுப்பு கொள்வாயாக'' என கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும், தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைமாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா? நீங்கள் உங்கள் சகோதரர், சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்து கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாக செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா? ஆதலால் உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவாரயிருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராயிருங்கள். (மத் 5 : 43 - 48)

மேற்கூறப்பட்ட படிப்பினை எம்மைத் துன்புறுத்துவோர், எம்மைப் பகைப்போர் அனைவரையும் முழு இதயத்தோடும் அன்பு செய்ய வேண்டுமெனக் காட்டுகின்றது. இறை தந்தை நல்லோரையும் தீயோரையும் ஒரே விதமாக அன்பு செய்கிறார். இறை தந்தையைப் போல நாமும் எமது நண்பரையும் பகைவரையும் அன்பு செய்ய வேண்டும்.

பகைவரை அன்பு செய்வது கடினம். ஆனால் இயேசுவின் வாழ்வில் அவரை நிந்தித்து, ஏளனம் செய்து, இறுதியில் சூழ்ச்சியினால் மரணத்திற்கு கையளித்தவர்களையும் மன்னித்தார்.

அப்போது இயேசு, ''தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை.'' என்று சொன்னார். (லூக் 23 : 34)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு இவ்வார்த்தைகளைக் கூறிய சம்பவம் நினைவிலிருக்கிறதா? தாங்கிக்கொள்ள முடியாத வேதனையுடன் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபோது கூறினார். அவரது முழு உடலிலும் பல காயங்கள் அவமானத்துடன் மரணித்துக் கொண்டிருந்த வேளையில் தாங்கி அவரை எள்ளி நகையாடி வெற்றிக் களிப்பிலிருந்த பகைவரை இயேசு முழு இதயத்துடன் மன்னிக்கிறார். மேன்மையான அன்பை உலகிற்கு வெளிப்படுத்தும் உயரிய சந்தர்ப்பமாக இது அமைகிறது.

இயேசுவைப் போல் பகைவரை அன்பு செய்த சிலரைப் பற்றிப் பார்ப்போம்.

## 1. புனித ஸ்தேவான்

இயேசுவின் சீடரான புனித ஸ்தேவான், பகைவரை அன்பு செய்தார். திருவிவிலியத்திலே அதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி.ப. 7 : 54 - 60) புனித ஸ்தேவான் இறைதந்தையின் உண்மை மறையை உலகிற்கு அறிவிப்பதற்கு முன்வந்தார். அதனால் பல துன்புறுத்தல்களுக்கு அவர் ஆளானார்.



படம் 17.3 - புனித ஸ்தேவானை கல்லால் எறிந்து கொல்லுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவர்கள் ஸ்தேவான் மீது கல்லெறிந்த போது அவர் 'ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்'' என்று வேண்டிக்கொண்டார். பின்பு முழந்தாள்படியிட்டு உரத்த குரலில்,''ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்'' என்று சொல்லி உயிர்விட்டார்.'' (தி.ப 7 : 59 - 60)

## புனித இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்

தன்னைக் கொல்லுவதற்கு முயற்சித்தவரை திருத்தந்தை புனித 2ஆம் அருளப்பர் சின்னப்பர் மன்னித்தார். அவரைக் கொல்லுவதற்கு அலி அகா என்ற இளைஞன் முயற்சித்தபோதும் அவனது முயற்சி பலிக்கவில்லை. திருத்தந்தை உயிர் தப்பினார். அலி அகா சிறையிலடைக்கப்பட்டான். அவனைப் பார்ப்பதற்குச் சிறைக்குச் சென்ற திருத்தந்தை அவனை அன்புடன் கட்டியணைத்தார். முழு இதயத்தோடும் அவனை மன்னித்தார்.



படம் 17.4 - திருத்தந்தை, அல் அகாவை மன்னிக்கிறார்.

இயேசுவின் வழியில் சென்று பகைவரை அன்பு செய்யும் விதத்தைத் திருத்தந்தை புனித 2ஆம் அருளப்பர் சின்னப்பர் முழு உலகிற்கும் எடுத்துக் காட்டினார். நீங்களும் அவ்வாறே உங்களைப் பகைப்பவரை மன்னியுங்கள். மன்னிப்பு அளிப்பதன் மூலம் உங்கள் இறை தந்தைக்கு உகந்த பிள்ளையாவதற்கு முயற்சி செய்யுங்கள்.

இயேசு காட்டிய முன்மாதிரியை அடிக்கடி நினைவிற்கொள்ளுங்கள். நீங்கள் மன்னிப்பதன் ஊடாக அன்பு நிறைந்த புதிய வாழ்வை அடையப் பேறு பெற்றவர்களாவீர்கள் என்பதில் சந்தேகமே இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

(1) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து இடைவெளியை நிரப்புக.

(பகைவரை , கதிரவனை, செபியுங்கள், எதிர்க்க, மன்னியும், கொடுங்கள்)

1. தீமை செய்பவரை .................... வேண்டாம்
2. உங்களிடம் கேட்கிறவருக்கு ......................
3. உங்களைத் துன்புறுத்துவோருக்காக ......................
4. கடவுள் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம்........ உதிர்த்தெழச் செய்கிறார்.
5. உங்கள் ........................ மன்னியுங்கள்
6. தந்தையே இவர்களை..................................

(2) உங்கள் பகைவரை இறைதந்தை ஆசீர்வதிக்க வேண்டுமெனவும் அவர்கள் தமது தவறான வழியிலிருந்து விடுபடுவதற்குத் தேவையான தூய ஆவியின் வரம் கேட்டும் செபம் ஒன்று எழுதுக.



***வாழ்க்கைக்கு........***

*உங்கள் நண்பருக்கும் பகைவருக்கும் இறை தந்தையின் ஆசீர் வேண்டி உங்கள் அன்றாட செப வேளையில் மன்றாடுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 திருச்சபையின் கட்டளைகள்

உலகிலே பல நாடுகளிலும் கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் திருச் சபையின் அங்கத்தவர்களாவர். இறைவார்த்தையின் அடிப்படை யில் இவர்களை நல்வழியில் நடத்திச் செல்வது திருச்சபையின் தலைவர்களது கடமையாக உள்ளது. இறைவனால் அளிக்கப்பட்ட பத்துக் கட்டளைகளோடு இறை மக்களை நல்வழியில் நடத்திச் செல்ல (திருச்சபையால்) ஐந்து கட் டளைகள் தரப்பட்டுள்ளன.

அவையாவன:-

1. ஞாயிற்று கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் முழுத்திருப்பலியில் பங்கேற்பது.
2. ஆண்டிற்கு ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளம் பெறுவது.
3. பாஸ்கு காலத்தில் தேவ நற்கருணை உட்கொள்வது.
4. குறிப்பிட்ட தினங்களில் ஒருசந்தி, சுத்தபோசனம் அனுசரித்தல்
5. திருச்சபையின் பராமரிப்பிற்கு உதவுதல்.

## 1. ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் முழுத்திருப்பலியில் பங்கேற்பது

இறை தந்தைக்கு இறைமக்கள் நாம் ஒப்புக் கொடுக்கும் பலி திருப்பலியாகும். ஞாயிறு தினங்களிலும் கடன்திருநாட் களிலும் திருப்பலியிலே பங்கு கொள்வது இறைமக்களின் கட மையாகும். இக்கடன் நிறைவு பெற வேண்டுமாயின் முழுத் திருப்பலியிலும் பங்கு கொள்ள வேண்டியது அவசியமாகும். அவ் வாறாயின் வருகைப் பாடலிலிருந்து திருப்பலியில் நன்றிப் பாடல் வரையிலும் - திருப்பலியில் செயற்பாட்டுடன் பங்கு கொள்ள வேண்டும். திருப்பலியில் அவ் வாறு செயற்பாட்டுடன் பங்கு கொள்ளுவதற்குத் தடையாக உள்ள வீண் பேச்சுகளைத் தவிர்த்து முழு உள்ளத்தோடும் பங்கு கொள்ள வேண்டும். திருப்பலி செபங்களிலும் பாடல்களிலும் பங்கு பற்றுவோம்.

நோயுற்றிருப்போர், அருகாமையில் திருப்பலி நடைபெறாத சூழலில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்போர், அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டிருப்போர் ஆகியோர் திருப்பலியில் கலந்து கொள்ளாதிருப்பதால் தவறிழைப்பதில்லை. இதைத்தவிர ஏழு வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும்கடன்திருநாட்களில் திருப்பலியில் பங்கேற்க வேண்டும்.

மேலும் தகுந்த காரணங்களுக்காக திருப்பலியில் பங்கேற்க வாய்ப்பு இல்லாத போது பொருத்தமானதொரு செப வழிபாட்டில் கலந்து கொள்ளவோ, அல்லது தனித்து செபத்தில் ஆழ்ந்திருக்கவோ முயற்சி எடுக்க வேண்டும்.

திருச்சபையின் கட்டளையாக இருப்பதற்காக அன்றி, இறை தந்தையில் தமக்கிருக்கும் மரியதை, பக்தி அன்பைக் காட்டுவதற்காக ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க வேண்டும்.

## 2. ஆண்டிற்கு ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளம் பெறுவது

சமூகத்தில் வாழும் பொழுது பல வேளைகளிலே பாவங்கள் செய்கின்றோம். சில வேளைகளில் அறிந்தும் சில வேளைகளில் அறியாமலும் பாவங்களைச் செய்கின்றோம். எமது பிழைகள் குறைகள், பாவங்கள் காரணமாக எமது சகோதர சகோதரிகள், அயலவர், நாம் பழகுபவர்கள் ஆகியோருடனான நல்லுறவில் பாதிப்பு ஏற்படலாம், எம்மிடையே இருக்க வேண்டிய சகோதர உறவு முறிந்து விடலாம். சாவான பாவம் அல்லது கன்ம பாவம் நாம் செய்திருந்தால் அப்பாவத்திற்காக ஒப்புரவுஅருள் அடையாளம் மூலம் மன்னிப்பு பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் அடிக்கடி ஒப்புரவு அடையாளத்தைப் பெற்று உள்ளத் தூய்மை பெறுவது விரும்பத்தக்கது.

சாவான பாவம் செய்யாவிடின் வருடத்தில் ஒரு முறையேனும் ஒப்புரவு அடையாளம் பெற்றுக் கொள்வோம்.

## 3. பாஸ்கு காலத்தில் தேவ நற்கருணை உட்கொள்வது

ஒரு காலத்தில் மனிதரிடையே தேவநற்கருணை பெற்றுக் கொள் வதற்கு இருந்த பயத்தினால் குறிப்பாக பாஸ்கா காலத்திலாவது நற்கருணைப் பெறுவதற்கு இக் கட்டளை வழிசமைக்கின்றது. இக் காலத்திலே திருப்பலியின் போது தேவ நற்கருணையைப் பெற்றுக் கொள்ளுமாறு திருச்சபை எமக்குக் கற்பிக்கிறது. நாம் பங்குகொள்கின்ற திருப்பலியிலே முழுமையாகப் பங்கு கொள்ள வேண்டுமாயின் கட்டாயம் தேவநற்கருணை பெற்றுக்கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. குறிப்பிட்ட தினங்களில் ஒருசந்தி, சுத்தபோசனம் அனுசரித்தல்

★ சுத்த போசனம் (மாமிச தவிர்ப்பு)

மாமிசத் தவிர்ப்பு என்பது குறிப்பிட்ட தினங்களில் தரை வாழ் உயிரினங்கள், மிருகங்களின் இறைச்சியை உண்ணாதிருப்பதாகும்.

அத்தகைய தினங்கள்

- விபூதிப் புதன்
- பெரிய வெள்ளி
- வருடத்தின் எல்லா வெள்ளிக் கிழமைகள்

★ ஒருசந்தி

ஒரு சந்தி அனுசரித்தல் என்றால் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே நிறை வான உணவு உண்ணுதல், ஏனைய இரு வேளைகளில் உண்ணாதிருத்தல் அல்லது சிறிதளவான உணவு மட்டுமே உண்ணுதலாகும். ஒரு சந்தி அனுசரிப்பதன் நோக்கம்,

- தமது பாவங்களுக்கு பரிகாரம் செய்தல்
- ஆன்மீக வாழ்வில் வளரப் பயிற்சிப்பெறல்.
- உணவு உண்ணாமல் நாற்பது நாட்கள் நோன்பிருந்த இயேசுவைப் பின்பற்றுதல்.

ஒருசந்தி நாட்களில் ஒருவர், தான் உண்ணாமல், அந்த உணவை பசியோடிருக்கும் ஒருவருக்கு அளிக்குமாறு திருச்சபை எமக்குக் கற்பிக்கிறது. அவ்வாறு கொடுத்தல், ஒருசந்தி அனுசரிப்பதன் முக்கிய நோக்கமாகும்.

18 - 60 வயதிற்குட்பட்டோர் ஒருசந்தி அனுசரிக்கப் பணிக்கப்பட்டுள்ளனர். ஆனால் நோயாளர், வயது முதிர்ந்தோர் இதற்கு விதிவிலக்கு. இருப்பினும் மற்றவர்கள் தம் சொந்த விருப்பத்தின்பேரில் ஒருசந்தி அனுசரிக்கலாம்.

விபூதி புதன், பெரிய வெள்ளி ஆகிய தினங்களில் ஒருசந்தி அனுசரிக்க நியமிக்கப்பட்டிருந்தாலும் மற்றய தினங்களில் தமது சொந்த விருப்பத்தின் பேரில் ஒருசந்தி அனுசரிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. திருச்சபையின் பராமரிப்பிற்காக உதவுதல்

எந்த ஒரு நிறுவனத்தினதும் ஒன்றியத்தினதும் வளர்ச்சிக்காக அதன் அங்கத்தினர் தம்மால் இயன்ற விதத்தில் தியாகம் செய்வது வழக்கமாகும்.

அவ்வாறே திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் தேவைகளுக்காகவும் அதன் உறுப்பினர் தம்மால் இயன்றவரை தியாகம் செய்யவேண்டுமென இக்கட்டளையில் அறிவுறுத்தப்படுகின்றது. பங்கின் பலவித இரக்கப்பணிகளுக்காகவும் இத்தியாகம் (காணிக்கை) பயன்படுத்தப்படுகிறது.

**செயற்பாடு**

1. திருச்சபையின் கட்டளைகள் ஐந்தையும் எழுதுக.
2. திருப்பலியில் செயற்பாட்டுடன் பங்குகொள்வதற்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூன்றை எழுதுக.
3. மாமிசத் தவிர்ப்பு, ஒருசந்தி அனுசரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாட்களை வெவ்வேறாக எழுதுக.
4. ஒருசந்தி அனுசரித்தல் என்றால் என்ன?



*வாழ்க்கைக்கு..............*

★ ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் முழுத் திருப்பலியில் பங்கேற்போம்.

★ வருடத்தில் ஒருமுறையேனும் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவோம்.

★ குறிப்பிட்டதினங்களில் ஒருசந்தி அனுசரிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 செபம்

(தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் டேமியனின் பெற்றோருக்கு பிரதம வைத்தியரை வந்து சந்திக்குமாறு கூறப்பட்டது)

தந்தை : எம்மை வரச் சொன்னீர்களா ஐயா...

வைத்தியர் : ஆமாம், வாருங்கள். அமருங்கள். டேமியனின் நிலை அவ்வளவு நல்லதாக இல்லை என்பதை சொல்வதற்காகவே உங்களை வரவழைத்தேன். வைத்தியர் என்ற ரீதியில் எம்மாலான அனைத்தையும் செய்தோம்.

தாய் : ஐயோ... ஆண்டவரே, எனது ஒரே மகன்

வைத்தியர் : குழப்பமடைய வேண்டாம். உங்களின் நிலை எனக்குப் புரிகிறது. இன்னும் இருபத்தி நான்கு மணித்தியாலங்களுள் டேமியனின் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டால் எம்மால் அவரைப் பிழைக்க வைக்க முடியும். அதைப்பற்றி கூறத்தான் உங்களை அழைத்தேன்.

தந்தை : ஐயா, இறைவன் எங்களை கைவிட மாட்டார். நாங்கள் செபிப்போம். இறைவன் எமக்குத் துன்பம் தர மாட்டாரென நான் நம்புகிறேன்.

(வைத்தியரிடம் விடை பெற்ற அவர்கள் தொடர்ச்சியாக செபித்தார்கள். சில மணித்தியாலங்களின் பின்னர் சிரித்த முகத்துடன் வைத்தியர் அவர்களிடம் வந்தார்.)

வைத்தியர் : மகிழ்ச்சியான செய்தி, ஒரு புதுமை நடைபெற்றுள்ளது. உங்கள் மகன் பிழைக்க முடியும்.

தந்தை : இறைவனுக்கு நன்றி. எமது வேண்டுதலுக்கு இறைவன் செவிசாய்ப்பாரென நான் உறுதியாக நம்பினேன். (மனைவி பக்கம் திரும்பி) மகனை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

தாய் : ஆமாம், நானும் நினைத்தேன். மகனைக் கோயிலுக்கு கூட்டிச் சென்று மற்ற நாட்களை விட அதிகமாகச் செபிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்விலே செபம் மிகவும் முக்கியமானது. மரத்துடன் அதன் பட்டை இணைந்திருப்பது போல் செபம் கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வில் ஒரு அங்கமாக இருக்க வேண்டும்

செபம் என்பது

இறைவனைப் பணிந்து தொழுவதும், அவருக்கு நன்றி சொல்வதும், அவரைப் புகழ்வதும் அவரிடம் நம் தேவைகளுக்காக மன்றாடுவதும் அவர்பால் நம் சிந்தனையைச் செலுத்துவதுமாகும்.

- பெரிய குறிப்பிடம் 283 -

''செபம்'' என்பது இறைவனுடன் அன்பில் இணைந்து, நல்லுறவுடன் உரையாடுவதாகும். நாம் பக்தியுடன் மனம் ஒன்றித்துச் செபிக்க வேண்டும். அவ்வாறில்லாது வெறும் சொற்களை மாத்திரம் மனப்பாடத்துடன் சொல்வது நிறைவான செபம் அல்ல. எமது உள்ளத்தில் எழும் சிந்தனைகளை வார்த்தைகளாக்கி இறை தந்தையின் முன் வைத்தல் மிகவும் பலன் தரும்.

செபத்தில் நான்கு வகைகளுண்டு

1. புகழ்ச்சி
2. நன்றி கூறுதல்
3. பாவமன்னிப்பு வேண்டல்
4. இறையருள் வேண்டல்.

- பெரிய குறிப்பிடம் 285 -

கிறிஸ்தவர்களாகிய நாம் இறைதந்தையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதற்கு, எமது எந்தக் காரியத்தின் போதும் செபத்தில் ஈடுபட வேண்டும். எம் செபத்தில் இறை தந்தையைப் புகழுதல், நன்றி கூறல் பாவமன்னிப்பு வேண்டுதல், இறையருள் வேண்டல் ஆகியன இடம்பெறுகின்றன.

எமக்கு அவசியமானவற்றைத் தரும் இறை தந்தையிடம் இடைவிடாது மனம் தளராது செபிக்க வேண்டுமென இயேசு உவமையின் மூலம் எமக்குக் கற்றுத் தந்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• திருவிவிலியத்திலுள்ள கீழ்க் கண்ட உவமையை வாசிக்கவும்

| | |
|---|---|
| நள்ளிரவில் வந்த நண்பன் பற்றிய உவமை (லூக் 11 :5-8) | நேர்மையற்ற நடுவன் பற்றிய உவமை (லூக் 18:1-8) |



படம் 19.1 - நள்ளிரவில் வந்த நண்பன்



படம் 19.2 - நேர்மையற்ற நடுவன்

## பரிசேயரும் வரிதண்டுபவரும் பற்றிய உவமை

தாங்கள் நேர்மையானவர் என்று நம்பி மற்றவர்களை இகழ்ந்து ஒதுக்கும் சிலரைப் பார்த்து இயேசு இந்த உவமையைச் சொன்னார் ''இருவர் இறைவனிடம் வேண்டக் கோவிலுக்குச் சென்றனர். ஒருவர் பரிசேயர், மற்றவர் வரிதண்டுபவர். பரிசேயர் நின்றுகொண்டு, இவ்வாறு இறைவனிடம் வேண்டினார் 'கடவுளே, நான் கொள்ளையர், நேர்மையற்றோர், விபச்சாரர் போன்ற மற்ற மக்களைப் போலவோ இந்த வரிதண்டுபவரைப் போலவோ இல்லாதது பற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன் வாரத்தில் இருமுறை நோன்பு இருக்கிறேன், என் வருவாயில் எல்லாம் பத்திலொரு பங்கைக்கொடுக்கிறேன்.' ''ஆனால் வரிதண்டுபவர் தொலையில் நின்றுகொண்டு வானத்தை அண்ணாந்து பார்க்கக்கூடத் துணியாமல் தம் மார்பில் அடித்துக் கொண்டு, 'கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும்' என்றார்.'' இயேசு, ''பரிசேயரல்ல, வரிதண்டுபவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார். ஏனெனில் தம்மைத் தாமே உயர்த்துவோர் தாழ்த்தப் பெறுவர் தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்'' என்றார்.

(லூக் 18 :9-14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் செபிக்கும் போது;

- கடவுள் எம்மை அறிந்திருப்பவராதலால் எம்மைப் பற்றிய வருணனை தேவையில்லை
- மற்றவர்களுடன் எம்மை ஒப்பிடத் தேவையில்லை
- மற்றவர்களை வெறுக்கத் தேவையில்லை
- எமது பலயீனங்கள், பாவங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்
- நாம் எளிமையாக செபிக்க வேண்டும்.

என்ற படிப்பினையை மேற்கண்ட பரிசேயரும் வரிதண்டுபவரும் பற்றிய உவமையின் மூலம் கற்றுக்கொள்ளலாம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் செபிக்கும் போது பலவித உடல்நிலைகளை பயன்படுத்துகின்றோம். அவை, கைகளைக் குவித்து நெஞ்சில் வைத்தல், கைகளை விரித்தல், சிரம் தாழ்த்தி தலை மேல் கரம் குவித்து வணங்குதல், முழந்தாள்படியிட்டு செபித்தல் ஆகியனவாகும். இந்த உடல் நிலைகள்மூலம் இறை தந்தைக்கு எம் உள்ளத்திலுள்ள மதிப்பு, எமது எளிமையான பண்பு ஆகியன காட்டப்படுகிறது.

ஆகவே நாம் செபிக்கும்போது முறையான உடல்நிலைகளின் ஊடாக கடவுளுக்குரிய புகழ்ச்சியை அவருக்கே எப்போதும் அளிப்போம்.

### செயற்பாடு

1. செபம் என்றால் என்ன?
2. செபத்தின் நான்கு வகைகளை எழுதுக.
3. கீழ்காணும் உவமைகளிலிருந்து நீர் பெற்றுக்கொள்ளக் கூடிய மாதிரிகைகள் இவ்விரெண்டு எழுதுக.

- நள்ளிரவில் வந்த நண்பன்
- நேர்மையற்ற நடுவன்
- பரிசேயரும் வரி தண்டுபவரும்.



*வாழ்க்கைக்கு........*

*கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள் என்ற ஆண்டவரின் வார்த்தையை மனதில் பதித்து தினமும் செபிப்போம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 செபிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள்


படம் 20.1 - கெத்சமனி தோட்டத்தில் இயேசு

இறுதி இராவுணவின் பின் இயேசு தமது திருத்தூதருடன் வழமைபோல் ஒலிவ மலைக்குச் சென்றார். இன்னும் சிறிது நேரத்தில் இதுவரை தன்னுடன் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்ட யூதாசினால் தலைமைக் குருக்களுக்குத் தான் காட்டிக்கொடுக்கப்படுவதையும் அதன் பின் அனுபவிக்கப் போகும் வேதனைகளையும் அவர் நன்கு அறிந்திருந்தார். அதிக துயரமும் மனக்கலக்கமும் அடைந்த இயேசு முழந்தாள்படியிட்டு இறை தந்தையிடம் இவ்வாறு வேண்டினார்.

"தந்தையே உமக்கு விருப்பமானால் இத் துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனால் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்"
(லூக் 22 : 42)

இயேசுவின் வாழ்விலே செபம் ஒரு கட்டாயமான - முக்கியமான பகுதியாக இருந்தது. வேதனை, தனிமையின்போதும் மேலும் விடைகாண முடியாத பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும்போதும், செபத்தின் மூலம் அவர் தெளிவு பெற்றார். அதன் மூலம் தந்தைக்கும் மகனுக்குமிடையே ஒரு நெருங்கிய உறவு வளர்ந்தது. இந்த - செப உறவு தந்தை அவருக்கு அளித்த பணியை செவ்வனே அவர் நிறைவேற்றுவதற்குக் காரணமாயிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசு செபித்த சந்தர்ப்பங்கள் சில

★ திருமுழுக்குப் பெறும்போது

"இயேசுவும் திருமுழுக்கு பெற்று இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்த போது"

(லூக் 3:21)

★ குணமளிப்பதற்கு முன்

"அவரோ ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களுக்குச் சென்று தனித்திருந்து இறைவனிடம் வேண்டி வந்தார்."

(லூக் 5:16)

★ திருத்தூதரை தேர்ந்தெடுக்கும் போது

"அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார்"

(லூக் 6:12)

★ பேதுருவின் அறிக்கை

"இயேசு தனித்து இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்த போது சீடர் மட்டும் அவரோடிருந்தனர். அப்போது அவர்களிடம் "நான் யார் என மக்கள் சொல்கிறார்கள்?" என்று கேட்டார்.

(லூக் 9 :18)

★ தோற்றம் மாறுதலின் முன்

"அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலை மீது ஏறினார்."

(லூக் 9:28)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் செபிக்கும்போது,

1. எமது தேவைக்கேற்ப சுயமாகச் சொல்லும் செபம்
2. பல்வித சந்தர்ப்பங்களில் செபிப்பதற்கு திருச்சபையால் எமக்கு தந்திருக்கும் செபம் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறோம்.

## எப்போதும் பயன்படுத்தப்படும் (பொது) செபங்கள் சில

★ துயிலெழும்போது (காலைச் செபம்)

அனைத்தையும் படைத்து ஆண்டு நடத்தும் இறைவா, உமது இரக்கத்தினால் நான் பெற்றுக்கொண்ட அனைத்து வரங்களுக்காகவும் சிறப்பாக கடந்த இரவிலே எந்தவித ஆபத்துமில்லாமல் என்னை பாதுகாத்தமைக்காக உமக்குப் பலமுறை நன்றி கூறுகிறேன். உமது கட்டளைகளைத் தவறாது இன்றைய நாளில் கடைப்பிடிப்பதாக வாக்களிப்பதோடு எனது சொல், செயல், சிந்தனையனைத்தையும் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்: இன்று முழுவதும் என்னை உமது பிரசன் னத்தினால் வழிநடத்தியருளும். அவ்வாறே எனது உடல், உயிருக்கு ஆபத்தில்லாது உமது சித்தத்தின்படி மறைக்கேற்ப வாழ்ந்து விண்ணக பேரின்பத்தை நான் அடைய உமது இரக்கத்தைத் தந்தருளும் ஆமென்.

இச்செபத்தின் மூலம்

★ கடந்த இரவில், தமது வாழ்வை அனைத்து தீமைகளிலிருந்தும் பாதுகாத்ததற்காக இறை தந்தைக்கு நன்றி கூறுவர்.
★ புதிய நாளிலே இறை கட்டளைக்கேற்ப வாழ்ந்து சொல், சிந்தனை, செயலால் நல்லது மட்டுமே செய்வதாக இறை தந்தைக்கு வாக்களிப்பர்.
★ புதிய நாளைத் தொடங்கிய வேளையிலிருந்து முடிகின்ற வேளைவரை தம்மைப் பாதுகாக்குமாறு இறை தந்தையை வேண்டுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இறைவேண்டலை கற்றுக் கொடுக்கும் முன்

இயேசு ஓரிடத்தில் இறைவனிடம் வேண்டிக் கொண்டு இருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களில் ஒருவன், ''ஆண்டவரே................. எங்களுக்கும் இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடும்'' என்றார்.
(லூக் 11:1)

**சிலுவை மரத்தில் தொங்கிய போது இயேசு இவ்வாறு கூறினார்.**

''தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை
(லூக் 23:34)

''தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்''
(லூக் 23:46)

செப வாழ்வின் முக்கியத்துவம் பற்றி இயேசு தந்த உயர்ந்த முன்மாதிரிகையைக் கிறிஸ்தவர்களாகிய நாமும் பின்பற்ற வேண்டும். அதன் மூலம் இறை சித்தத்தை புரிந்துகொள்ள எம்மால் முடியும். அதனால் எமது தேவைகளை இறை ஆசீருடன் நிறைவேற்றலாம். மனிதனின் உயிர்மூச்சை உள்ளெடுத்து, வெளியேற்றுவதில் தான் தங்கியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் அச்செயற்பாட்டிற்கு சௌகரியம் ஏற்படும்போது வாழ்வை இழக்க நேரிடுகிறது. அவ்வாறே கிறிஸ்தவர்களாகிய எமக்கு செப வாழ்வு மிக முக்கிய தேவையாக இருக்கிறது. செபத்திலிருந்து நாம் விலகும் போது இறை தந்தையிடம் இருந்து நாம் விலகுகிறோம். அவ்வேளையில் எமது ஆன்மீக வாழ்வு பலயீனமடைந்து எமது கிறிஸ்தவ மதிப்பீடுகள் எம்மில் நலிவடைகின்றன. அதனால் செபத்தை எமது வாழ்வில் மிக முக்கிய அங்கமாகக்கொண்டு தினமும் செபிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பாடசாலைக்கு அல்லது பயணம் செல்வதற்கு முன்

காவல் தூதருக்கு செபம்



படம் 20.2 - காவல் தூதர்

எனது காவல் தூதரே, தேவ கிருபையால் உம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்ட எனக்கு இன்று ஞான வெளிச்சம் தந்து என்னை காத்து நடத்தியருளும், ஆமென்

இச்செபத்தின் மூலம் ,

★ காவல் தூதரின் பாதுகாப்புக்கு ஒப்படைக் கப்பட்ட வேளையிலிருந்து சகல தீமைகளிலிருந்தும் விபத்துகளிலிருந்தும் தம்மைப் பாதுகாக்குமாறு வேண்டுவர்.

★ உணவு உட்கொள்வதற்கு முன் / பின் செபம்

உட்கொள்வதற்கு முன்

ஆண்டவரே எம்மையும் இந்த உணவையும் ஆசீர்வதித் தருளும். நீர் தந்த இந்த உணவுக்காக உம்மைப் போற்றுகின்ற அதேவேளை இன்றுபசியாக இருப்பவர்களையும் போஷிக்குமாறு உம்மை மன்றாடுகின்றோம். இந்த உணவைத் தயாரித் தவர்களையும் ஆசீர்வதித் தருளும். ஆமென் (பரலோக மந்திரம் சொல்லவும்)



படம் 20.3 - உணவுக்கு முன் செபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு உட்கொண்ட பின்

ஆண்டவரே, எமது பசியைப் போக்க நீர் தந்த இந்த உணவுக்காவும் மற்றும் அனைத்து நன்மைக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். பசியால் வாடுவோரை போஷித்தருளும். இறந்த ஆன்மாக்களுக்கு இளைப்பாற்றியை அளித்தருளும். ஆமென்.

இச் செபங்களின் மூலம்

- ★ இறைவனின் இரக்கத்தினால் கிடைக்கப்பெற்ற உணவுக்காக அவருக்கு நன்றி கூறுவர்.
- ★ உணவையும் அதனை உட்கொள்ளும் தம்மையும் ஆசீர்வதிக்குமாறு இறை தந்தையை வேண்டுவர்.
- ★ உணவைத் தாயரித்தவர்கள், அதற்காக உழைத்தவர்களை ஆசீர்வதித்து பாதுகாக்குமாறும்
- ★ வாழ்வோரை ஆசீர்வதிக்குமாறும்
- ★ இறந்தவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளுமாறு இறை தந்தையை வேண்டுவர்.

## வேறு பணிகள் அல்லது (பாடம்) படிப்பதற்கு முன்

### ★ தூய ஆவியானவரின் செபம்



படம் 20.4 - படிக்கும் முன் செபித்தல்

தலைவன் :- தூய ஆவியே எழுந்தருளி வாரும். உமது விசுவாசிகளின் இதயங்களை நிரப்பியருளும்.

மற் :- உமது நேசத்தின் அக்கினியை அவர்களிடத்தில் பற்றி எரியச் செய்தருளும்

மற் :- ஆண்டவரே, உமது தூய ஆவியை எங்களிடத்தில் அனுப்பியருளும்.

தலைவர் :- அப்போது எங்கள் இதயங்கள் புதுப்பிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபிப்போமாக

தூய ஆவியின் ஒளியினால் விசுவாசிகளின் இருதயங்களைப் புதுப்பித்தருளிய இறைவா / நாங்களும் அதே தூய ஆவியின் வரத்தினால் நல்லவைகளை விரும்பவும் அவருடைய ஆறுதலை எப்போதும் பெற்று அக்களிக்கவும் பண்ணியருளும்: இந்த மன்றாட்டை எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துநாதர் வழியாக எமக்குத் தந்தருளும், ஆமென்

இச்செபத்தின் மூலம்,

* தூய ஆவியில் நம்பிக்கைக் கொள்வோர் அவரினால் நிரப்பப்பட வேண்டுமென செபிப்பர்
* அனைத்தையும் சரியாக விளங்கிக் கொள்வதற்கான வலிமையைக் கேட்பர்
* தூய ஆவியின் வரத்தினால் ஊட்டம் பெற்று மகிழ்ச்சியான வாழ்வை உரிமையாக்கிக்கொள்வதற்காக வரம் வேண்டுவர்.

**★ இரவு நித்திரைக்குச் செல்லும் முன்**

இரவு செபம்


படம் 20.3 - இரவு செபம் சொல்லுதல்

மனிதருக்கு மீட்பைப் பெற்றுத்தந்த இயேசுவே, இன்றைய நாளிலே நான்செய்த அனைத்து பாவங்களையும் மன்னித்து சடுதி மரணம், சகல பொல்லாப்புக்கள், அலகையின் மாயைகளுக்கு நான் இடம் கொடாது எனது உடலுக்கும் உயிருக்கும் எந்த தீங்குமின்றி காலையில் நான் துயில் எழுந்து உம்மைப் புகழ்வதற்கு வரமளித்தருளும், ஆமென்.

இச்செபத்தின் மூலம்,

* அன்றைய நாள் ஆரம்பத்திலிருந்து முடியும் வரை தாம் செய்த பிழைகளுக்காக இயேசுவிடம் மன்னிப்புக் கேட்பர்.
* இரவில் சடுதி மரணம், சகல பொல்லாப்புக்கள், தீய கனவுகள், அலகையின் மாயைகளிலிருந்து தம்மைப் பாதுகாக்குமாறு இயேசுவைக் கேட்பர்.
* நித்திரை விட்டெழுந்து புதிய நாளுக்காக இயேசுவுக்கு நன்றி கூறும் திறனை வேண்டுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பொதுச் செபங்களை நாம் பயன்படுத்தும்போது, அவற்றைச் சரியாக மனப்பாடம் செய்து நம்பிக்கையுடன் அவற்றை செபிக்க வேண்டும்.

**செயற்பாடு**

1 இயேசு செபித்த சந்தர்ப்பங்கள் நான்கினை எழுதுக.
2 நீர் தினமும் செபிக்கும் சந்தர்ப்பங்கள் ஐந்தை எழுதுக.
3 மேற்குறிப்பிட்ட பொதுச் செபங்களை மனப்பாடம் செய்து ஆசிரியருக்கு ஒப்புவிக்குக.



*வாழ்க்கைக்கு........*

*உணவு உட்கொள்ளும் முன் / உட்கொண்ட பின் சொல்லும் செபங்களை எமது உணவு அறை மேசைக்கருகில் எழுதி தொங்கவிடுவோம். உடல். ஆன்மீக ரீதியில் எம்மைப் போஷிக்கும் இறை தந்தைக்கு குடும்பமாக நன்றி கூறுவோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 இயேசு கற்பித்த செபம்


படம் 21.1 - இயேசு செபிக்க கற்றுக் கொடுக்கிறார்.

இயேசு ஒருநாள் செபித்துக் கொண்டிருந்தார். அவர் செபித்து முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர் அவரை நோக்கி ''ஆண்டவரே யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் செபிக்கக் கற்றுக் கொடுத்தது போல் எங்களுக்கும் கற்றுக்கொடும்'' என்றார். அவர்கள் கேட்டதற்கு இணங்கி அவரும் ''நீங்கள் இறைவனிடம் செபிக்கும் பொழுது இவ்வாறு சொல்லுங்கள்'' எனக் கூறியவாறு கற்றுக் கொடுத்தார். எமது ஆண்டவராகிய இயேசுவே இச் செபத்தைக் கற்றுக் கொடுத்தமையால் அதனை ''இயேசு கற்பித்த செபம்'' என அழைக்கின்றோம். இச்செபம் ''பரலோகத்திலே இருக்கின்ற எங்கள் பிதாவே,'' ''பரமண்டல மந்திரம்'' எனவும் அழைக்கப்படுகின்றது. இச் செபம் பின்வருமாறு:-

பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக! உம்முடைய இராச்சியம் வருக! உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக! எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களை எங்களுக்குப் பொறுத்தருளும். எங்களை சோதனையிலே விழ விடாதேயும் தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும்.

இயேசு கற்பித்த செபத்திற்கேற்ப ஒரு செபத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பண்புகள் சில உள அவை:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செபத்தின் பண்புகள் | இயேசு கற்பித்த செபம் |
|---|---|
| இறை புகழ்ச்சி | உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக! |
| ஆராதனை | உம்முடைய இராச்சியம் வருக! உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக! |
| வேண்டுதல் | எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். |
| மன்னிப்பு வேண்டல் | எமக்குத் தீமை செய்பவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். |
| இறை பராமரிப்பை நாடுதல் | எங்களைச் சோதனையிலே விழவிடாதேயும் தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும். |

இயேசு கற்பித்த செபத்தில் நாம் இறைவனை ''எனது பிதாவே'' என அழைக்காது ''எங்கள் பிதாவே'' என அழைக்கின்றோம். ''எங்கள் பிதாவே'' என அழைப்பதனால் ஒரு சமூக உறவினைக் காணக்கூடியதாக உள்ளது. ஆகவே சமூகமாக ஒன்று கூடுகின்ற வழிபாடுகளில் இச்செபத்தை அதிகமாகச் செபிக் கின்றோம். திருப்பலி இதற் குச் சிறந்த உதாரணமாகும். அவ்வாறே தனிமையில் நாம் செபிக்கும்போதும் இச் செபத்தைப் பயன்படுத்துவோம்.

நாம் செபிக்கும்போது இரு கை களையும் கூப்பி நெஞ்சின்மேல் வைத்துக் கொள்வோம். எனினும் இயேசு கற்பித்த செபத்தைச் செபிக்கையில் இரு கை களையும் விரித்துச் செபிக்குமாறு திருச்சபைத் தாய் எமக்கு அழைப்பு விடுக்கிறாள்.

இயேசு கற்பித்த செபத்தில் புகழ்ச்சிக்குரிய வாழ்த்துகள் மூன்றும் ஆன்மீக உடல் தேவை கள் தொடர்பான வேண்டுதல்கள் நான்கும் உள்ளன.

## *1.* புகழ்ச்சிக்குரிய வாழ்த்துகள்

### (i) உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக!

- அனைத்தையும் படைத்தளித்த இறைவனது திருநாமத்தைப் புகழ்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ii) உம்முடைய இராச்சியம் வருக.**

- கிறிஸ்தவர்களான எமது இறுதியான எதிர்பார்ப்பானது இறை ஆட்சியில் நுழைவதாகும். அந்த இறை ஆட்சியை இவ்வுலகில் நிறுவும்படி மன்றாடுதல்.

**(iii) உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக.**

- இறை தந்தையின் விருப்பம் விண்ணுலகில் மட்டுமல்ல மண்ணுலகிலும் வரும்படி மன்றாடுதல்.

## 2. ஆன்மீக உடல் தேவைகள் தொடர்பான வேண்டுதல்கள்

**(i) எங்கள் அனுதின உணவை இன்று எமக்கு அளித்தருளும்.**

- இஸ்ரேயல் மக்கள் எகிப்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய பயணத்தில் மன்னாவினால் அவர்களை ஊட்டம் பெறச் செய்தது போன்று, எமது அன்றாட உணவை அளிக்கும்படி மன்றாடுகிறோம். அதுமட்டுமன்றி இறைவார்த்தையாலும் நற்கருணையாலும் ஊட்டம் பெற வேண்டும்.

**(ii) எமக்குத் தீமை செய்தவர்களை நாம் பொறுப்பது போல எமது பாவங்களைப் பொறுத்தருளும்.**

- பிறர் எமக்கு எதிராக செய்யும் பிழைகளை நாம் மன்னிக்க வேண்டும். இங்கு நாம் அவர்களின் பிழைகளை எவ்வாறு மன்னிக்கிறோமோ அதே போன்று எமது பிழைகளையும் இறை தந்தை மன்னிக்கும்படி மன்றாடுதல்.

**(iii) சோதனையில் எம்மை விழ விடாதேயும்**

- இறை கட்டளைகளுக்கு எதிராக செயற்பட இடமளிக்காது எம்மைப் பாதுகாக்கும்படி மன்றாடுதல்.

**(iv) தீமையிலிருந்து எம்மை இரட்சித்துக் கொள்ளும்**

- எல்லாவிதமான ஆன்மீக உடல் சார்ந்த துன்பங்களிலிருந்து எம்மை மீட்கும் படி மன்றாடுதல்.

இச்செபத்தின் வழியாக இறை தந்தைக்கு எமது இதயத்திலே உள்ள புகழ்ச்சியை, மரியாதையை சமர்பிக்கிறோம். அவ்வாறே உண்மையும் நீதியும் ஆட்சி செய்கின்ற இறை ஆட்சி இவ்வுலகுக்கு வருக! என மன்றாடுகின்றோம். அது மட்டுமல்லாமல் சரியானவற்றை விளங்கி நல் வழியில் செல்வதற்குத் தேவையான ஆன்மீக, உடல் ஊட்டத்திற்கான வழிக்காட்டலுக்காக இறைதந்தையிடம் மன்றாடுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு கற்பித்த இறைவேண்டல்

- இயேசு கற்பித்த செபத்தை சரியாக மனப்பாடம் செய்து கொள்வோம்.
- சரியான உடல் நிலைகளுடன் செபிப்போம்.
- மனப்பாடமாக மட்டுமல்லாது அர்த்தம் புரிந்து செபிப்போம்.
- இதய பூர்வமாகவும் சத்தமாகவும் செபிப்போம்.
- எமது நாளாந்த செபத்தில் இதனை எப்பொழுதும் சேர்த்துச் செபித்தல் முக்கியமென உணர்வோம்.

### செயற்பாடு

1. இயேசு கற்பித்த செபத்தை கற்பித்தது,
   (i) யார் ?
   (ii) யாருக்கு ?

2. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை இயேசு கற்பித்த செபத்தின் துணையோடு பூரணப்படுத்துக.

| செபத்தின் முக்கிய பகுதிகள் | இயேசு கற்பித்த செபம் |
|---|---|
| 1 புகழ்ச்சி | 1 .............................. |
| 2 ஆராதனை | 2 .............................. |
| 3 வேண்டுதல் | 3 .............................. |
| 4 மன்னிப்பு வேண்டல் | 4 .............................. |
| 5 இறை பராமரிப்பை நாடுதல் | 5 .............................. |

3. இயேசு கற்பித்த செபத்தில் காணக்கூடிய புகழ்ச்சிக்குரிய மூன்று வாழ்த்துக்களையும் ஆன்மீக உடல் தேவைகள் தொடர்பான நான்கு வேண்டுதல்களையும் வெவ்வேறாக எடுத்துக் காட்டுக.



*வாழ்க்கைக்கு..........*

*"இயேசு கற்பித்த செபத்தை" மனப்பாடம் செய்து சரியான உடல் நிலைகளுடனும் அர்த்தத்துடனும் உச்சரித்து இறை தந்தையை அழைப்போம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 அருள் நிறை மரியே



படம் 22.1 - டொமினிக் குஸ்மான் அடிகளாருக்கு மரியன்னை காட்சியளித்தல்

## டொமினிக் குஸ்மான் அடிகளாருக்கு மரியன்னை காட்சியளித்தல்

13ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலே கிழக்கு பிரான்சிலும் வட இத்தாலியிலும் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிராக பல சக்திகள் செயற்பட்டன. ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த அருட்பணி டொமினிக் குஸ்மான் அடிகளார் இந்நிலையையிட்டு அதிக கவலை யடைந்தார். அவர், ''டுலுஸ்'' என்ற பிராந்தியத்திற்கு அண்மையில் செபத்திலும் ஒறுத்தல் முயற்சியிலும் ஈடுபட்டு மேற்கூறப்பட்ட நிலையை மாற்றியருளுமாறு இறை தந்தையிடம் வேண்டினார். மூன்று நாட்களுக்குப்பின், மரியாள் செபமாலையைக் கையிலேந்திய வண்ணம் வானதூதருடன் டொமினிக் அடிகளாருக்குத் தோன்றி காட்சியளித்தார்.

மரியாள் : டொமினிக், உலகை புதுப்பிப்பதற்கு தூய திரித்துவம் பயன்படுத்தும் ஆயுதம் எது?

டொமினிக் அடிகளார் : மரியன்னையே, உமது திருமகன் இயேசுவுடன் நெருக்கமாக இருந்து மீட்பின் திட்டத்தை செயற்படுத்தும் நீர் என்னை விட அதுபற்றி அறிவீர்.

மரியாள் : கடின மனமுடைய மனிதர்களிடம் சென்று அவர்களை வெற்றிகொள்வதற்கு எனது செபமாலைப் பக்தியைப் பரப்புங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத்திமா நகரில் மரியன்னை காட்சியளித்தல்



படம் 22.2 - பாத்திமா நகரில் மரியன்னை காட்சியளித்தல்

ஒரே குடும்பத்தின் சகோதரர்களான பிரான்சிஸ், ஜசிந்தா ஆகியோர் தமது உறவினரான லூசி என்பவருடன் பாத்திமா நகரில் வாழ்ந்து வந்தனர். தமது குடும்பத்தினரின் ஆடுகளை மேச்சலுக்கு கொண்டு செல்வது இவர்களின் பொறுப்பாக இருந்தது. 1917 வைகாசி 13ஆம் திகதி (ஞாயிறு) இச் சிறுவர்கள் வழமைபோல தமது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தனர். திடீரென இடி முழங்கியதைப் போன்ற ஒளிக் கதிரினால் அவர்கள் இருந்த இடம் பிரகாசித்தது. அச்சமுற்ற சிறுவர்கள் அங்கிருந்து செல்வதற்கு ஆயத்தமாகும் போது அவர்களுக்கு அண்மையிலிருந்த உயரமற்ற 'ஒக்' முட் புதரின் ஒளிக் கதிர் நடுவே இருந்து தம்மையே பார்த்துக் கொண்டிருந்த அழகான ஒரு பெண்ணைக் கண்டனர். செபமாலையைக் கையில் வைத்திருந்த அவர் ''அஞ்ச வேண்டாம் நான் உங்களுக்கு ஆபத்து இழைக்க மாட்டேன்'' எனக் கூறினார். மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்ட லூசி, ''எங்கிருந்து வருகிறீர்கள்?'' எனக் கேட்க, ''வானகத்திலிருந்து வந்துள்ளேன்'' என்று அவர் பதிலளித்தார். உலகிலே பாவிகள் மனமாற்றம் பெறுவதற்காக செபிக்குமாறு கேட்டுக் கொண்ட அவர், ''செபமாலை செபியுங்கள்'' என்று கூறி மறைந்தார்.



படம் 22.3 - லூர்து நகரில் மரியன்னை காட்சியளித்தல்

## லூர்து நகரில் மரியன்னை காட்சியளித்தல்

1858 மாசி 11ஆம் திகதி பெர்னதேத் என்ற சிறுமி தனது சகோதரி, நண்பி ஆகியோருடன் விறகு வெட்டுவதற்காக லூர்து நகரின் ஆற்றோரமாகச் சென்றாள். பெர்னதேத் ஆற்றின் மறுபக்கமாகச் செல்ல முற்படுகையில் பேரிரைச்சலுடன் மாபெரும் காற்று வீசியது. அச்சமுற்ற பெர்னதேத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றும் முற்றும் பார்க்கையில் நதி கால்வாய்க்கருகில் உள்ள குகையில் பொன்நிறமான முகில்களுக்கு மத்தியில் ஒரு அழகான பெண் தோன்றுவதைக் கண்டாள். பெர்னதேத், அது பற்றிய தனது அனுபவத்தை இவ்வாறு கூறுகிறாள். ''என்னைப் பார்த்து,புன்னகைத்த அப்பெண் தன்னிடம் வருமாறு எனக்கு சைகை காட்டினார். நான் அச்சம் கொள்ளவில்லை. நான் எங்கு இருக்கிறேன் என்பதை மறந்தேன். நான் கண்களை மூடினேன் , கண்களைத் திறந்தேன். அந்த அழகு மிக்க பெண் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார். நான் விரைவாக செபமாலையைக் கையிலெடுத்து முழந்தாளிட்டேன். அப் பெண் தனது இடுப்பிலே தொங்கவிட்டிருந்த செபமாலையைக் கையிலெடுத்தார். நான் செபமாலை சொல்லும்போது அவரின் செபமாலை மெதுவாக நழுவியது. அதன் பின் அவர் முகில்களுடன் குகையினுள்ளே சென்றார்.''

மரியன்னை காட்சி கொடுக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் செபமாலைச் செபிக்குமாறு உலக மக்களை வேண்டினார். செபமாலையில் ''அருள் நிறைந்த மரியே'' என்ற செபத்தை நாம் சொல்கிறோம். இச்செபம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

1. கபிரியேல் தூதர் மரியாளுக்குக் கூறிய மங்கள வார்த்தை அடிப்படையாகக் கொண்டு அருள் நிறைந்த மரியே செபத்தின் முதல் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. ''அருள் நிறைந்த மரியே வாழ்க. கர்த்தர் உம்முடனே'' (லூக் 1:25)
2. எலிசபெத்து தேவ தாயை வாழ்த்திய வாழ்த்துரையை (லூக்கா 1:45) அடிப்படையாகக் கொண்டது.''பெண்களுக்குள்ளே ஆசிர்வதிக்கப்பட்டவர் நீரே உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.''
3. திருச்சபையால் சேர்த்துக்கொண்ட ஒரு பகுதியாக இச்செபத்தின் இரண்டாம் பகுதி அமைகிறது. ''அர்ச்சிஷ்ட மரியே, சர்வேசுரனுடைய மாதாவே பாவிகளாயிருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும், ஆமென்.''

''இதோ ஆண்டவருடைய அடிமையானவள் உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது'' எனக் கூறிய மரியாள் இறை சித்தத்திற்குத் தலை சாய்த்து தன் வாழ்வின் இறுதி வரை அவரது சித்தத்தை நிறைவேற்றினார். அதனால் அவர் திருச்சபையின் தாய் என்று அழைக்கப்படும் பேற்றைப் பெற்றார். அதனால்,

- மரியாளின் திருநாட்கள் பல திருவழிபாட்டு ஆண்டில் கொண்டாடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் :-

- ★ புனித கன்னி மரியாள் பெருவிழா (தை 01)
- ★ புனித கன்னி மரியாளின் விண்ணேற்பு விழா (ஆவணி - 15)
- ★ புனித கன்னி மரியாளின் அமல உற்பவ திருநாள் (மார்கழி - 08)

- மரியாளின் பெயரால் செபம், பாடல், பக்தி முயற்சிகள் ஆகியன இயற்றப்பட்டமை
- மரியாளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்களில் வருடாந்தம் திருவிழா கொண்டாடுவதற்கு அனுமதி அளித்தல்.

உதாரணம் : இலங்கை மாதா ஆலயம் , சதாசகாய மாதா ஆலயம், மருதமடு ஆலயம், மாத்தறை மாதா ஆலயம்.

புனிதர்களில் மரியாளுக்கே மேன்மையான மதிப்பு அளிக்கப்படுகிறது. ஆகவே எங்கள் இதயங்களில் அவ்வன்னை மட்டில் எழும் அன்பையும் மதிப்பையும் எப்போதும் அவருக்கு அளிக்க முயற்சிப்போம்.

**செயற்பாடு**

1. தேவதூதர் கபிரியேல், மரியன்னைக்கு மங்கள வார்த்தை கூறியதிலிருந்து தயாரிக்கப்பட்ட செபத்தை எழுதுக.
2. மரியன்னையின் திருநாட்கள் மூன்றைப் பெயரிடுக.
3 மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்கள் மூன்றை எழுதுக.



*வாழ்க்கைக்கு..........*

*தினமும் செபமாலை சொல்வதோடு இயன்றவரை ஒறுத்தல் முயற்சிகள் செய்து மற்றவர்களின் மீட்புக்காக செபிப்போம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23 பொதுச் செபங்கள்

இறையன்பில் நிலைத்து இறையுறவில் இணைந்து இறைவனோடு செய்யும் உரையாடலே செபம் எனப்படும். செபம் இரு வகைப்படும்.

1. மனப்பாடம் செய்த செபம்
2. தாமாகவே இயற்றிய செபம்

நாம் இயற்றிய செபங்கள் அல்லது மன்றாட்டுகளின் வழியாக எமது இதயத்தில் எழுகின்ற எண்ணங்களையும் மன்றாட்டுகளையும் உண்மையாகவே இறைவனிடம் வெளிப்படுத்தலாம். இதன் வழியாக எமக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவு வளர்ச்சியடையும். இது ஆழமான செப வாழ்வுக்கு எம்மை இட்டுச் செல்கிறது.

இவ்வாறான செப முறையினை நாம் பழகிக் கொள்ளும் வரை திருச்சபைத் தாய் இயற்றியுள்ள பொதுச் செபங்கள் எமக்கு மிக முக்கியமாகும். இச் செபங்களின் பயன்களுள் சில

- செபிக்கப் பழகிக்கொள்ளல்
- செபமொன்றை இயற்றுவதற்கான வழிக்காட்டல்
- பொதுச் செபங்களில் ஈடுபடும்போது அனைவரும் சத்தமாக செபிக்கக் கூடியதாயிருத்தல்.
- தனிச் செபத்திலும் இவற்றை உபயோகிக்கக் கூடியதாக இருத்தல்.

விசுவாசப் பிரமாணம், மூவேளைச் செபம், பாஸ்கு காலத்து மூவேளைச் செபம், உத்தம மனஸ்தாபச் செபம் என்பன இவ்வாறான பொதுச் செபங்களில் சிலவாகும். இப்படியான செபங்களை உபயோகிப்பதற்குச் சரியாக அவற்றை மனப்பாடம் செய்ய வேண்டும். பிறரோடு சேர்ந்து இச் செபங்களைச் செபிக்கையில்,

- ஒரு சமூகமாக ஒன்றாகச் சேர்ந்து
- சத்தமாகவும்
- மிகவும் தெளிவாகவும்
- சரியான வேகத்தோடும்
- நம்பிக்கையோடும்
- சரியான உடல் நிலைகளைப் பயன்படுத்தியும்
- கவனத்தோடும் செபித்தல் முக்கியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்போஸ்தலர்களின் விசுவாசப் பிரமாணம்

- நாம் நம்பிக்கை கொள்ள வேண்டிய பன்னிரெண்டு சத்தியங்கள் (உண்மைகள்) அப்போஸ்தலர்களின் விசுவாசப் பிரமாணத்தில் அடங்குகின்றன.
- இது எமது நம்பிக்கையின் சுருக்கமாகும்.
- எமது நம்பிக்கையை வெளிப்படுத்தும் முகமாக இச்செபத்தைச் சொல்லுகிறோம்.



படம் 23.1

1. பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல பிதாவாகிய ஒரே இறைவனை விசுவசிக்கிறேன்.



படம் 23.2

2. அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாயகன் இயேசு கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன்



படம் 23.3

3. இவர், பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்து அர்ச்சிஷ்ட கன்னி மரியாளிடமிருந்து பிறந்தார்.



படம் 23.4

4. போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் செய்யப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 23.5

5. பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.



படம் 23.6

6. பரலோகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல பிதாவாகிய இறைவனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார்.



படம் 23.7

7. அவ்விடத்திலிருந்து சீவியரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவார்.



படம் 23.8

8. பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன்



படம் 23.9

9. பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையையும் புனிதர்களுடைய, சமூக உறவையும் விசுவசிக்கின்றேன்



படம் 23.10

10. பாவப் பொறுத்தலை விசுவசிக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 23.11

11. உடலின் உயிர்ப்பை விசுவசிக்கிறேன்



படம் 23.12

12. நித்திய வாழ்வை விசுவசிக் கிறேன். ஆமென்

## மூவேளைச் செபம்

- இறை மகனாகிய இயேசு மனுவுரு எடுத்து கன்னிமரியின் திருவயிற்றிலே கருவானதை அதாவது இயேசு மனிதனாகப் பிறந்ததை இச்செபம் நினைவூட்டுகிறது.
- நாள்தோறும் காலை 5.30 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் இச்செபம் சொல்லப்படுகின்றது.



படம் 23.13 -
கபிரியேல் தூதர் மரியாளுக்கு மங்களம் கூறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவருடைய சம்மனசானவர் மரியாளுக்கு மங்களம் சொல்ல,
அவள் பரிசுத்த ஆவியினாலே கருத்தரித்தாள்.
(அருள் நிறைந்த மரியே......)

இதோ ஆண்டவருடைய அடிமை,
உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது.
(அருள் நிறைந்த மரியே......)

வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடி கொண்டார்
(அருள் நிறைந்த மரியே......)

முதல்வர் : இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் தகுதியானவர்களாக இருக்கும்படியாக,

எல்லோ : இறைவனின் புனித அன்னையே எங்களுக்காக மன்றாடும்.

செபிப்போமாக

இறைவா உமது திருமகன் கிறிஸ்து மனுவுருவானதை உமது வானதூதர் வழியாக அறிந்திருக்கிறோம். அவருடைய பாடுகளினாலும் சிலுவையினாலும் நாங்கள் உயிர்ப்பின் மகிமையை அடையுமாறு உமது அருளை எங்கள் உள்ளத்தில் பொழிய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

(திரித்துவப் புகழ் மூன்று முறை சொல்லவும்)

## பாஸ்கு காலத்து மூவேளைச் செபம்

- இது இயேசுவின் உயிர்ப்பைப் பற்றி நினைவுபடுத்துகின்ற செபமாகும்.
- அல்லேலூயா சனிக்கிழமை தொடக்கம் தூய ஆவியின் திருநாளன்று மாலை வரை வழமையான மூவேளைச் செபத்தைச் சொல்வதற்குப் பதிலாக பாஸ்கு கால மூவேளைச் செபம் சொல்லப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணக அரசியே மனங்களிகூரும் - அல்லேலூயா
ஏனெனில் இறைவனை கருத்தாங்கப் பேறு பெற்றீர் - அல்லேலூயா
தாம் சொன்னபடியே அவர் உயிர்த்தெழுந்தார் - அல்லேலூயா
எங்களுக்காக இறைவனை மன்றாடும் - அல்லேலூயா
கன்னிமரியே அகமகிழ்ந்து பூரிப்படைவீர் - அல்லேலூயா
ஏனெனில் ஆண்டவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்தார் - அல்லேலூயா

## செபிப்போமாக

இறைவா உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பினால் உலகம் களிகூரத் திருவுளமானீரே. அவருடைய திருத்தாயாராகிய புனித கன்னி மரியாளின் துணையால் நாங்கள் என்றும் நிலையான பேரின்ப வாழ்வைப் பெற அருள் புரிய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

### உத்தம மனஸ்தாபச் செபம்

- நம்மை அன்பு செய்யும் இறை தந்தைக்கு பிரதி அன்பைக் காட்டாமல் அவருக்கு எதிராகச் செய்த பாவச் செயல்களுக்கு மன்னிப்பு வேண்டி சொல்லும் செபமாகும்.
- ஒப்புரவு செய்யும் சந்தர்ப்பத்தில் குருவானவரிடம் இருந்து பாவமன்னிப்பு பெறுவதற்கு முன்னர் சொல்லுகின்ற செபமாகும்.


படம் 23.14 - ஒப்புரவு பெறும் வேளை

என் ஆண்டவரே அளவில்லாத அன்பிற்குப் பாத்திரமாயிருக்கிற உம்மை மதியாமல் அடியேன் பாவங்கள் பல செய்ததினால் முழு மனதுடனே துக்கப்படுகிறேன். இறைவா, இனிமேல் உமது உதவியினாலே ஒருபோதும் பாவம் செய்ய மாட்டேன் என்றும் பாவத்திற்கு ஏதுவான சந்தர்ப்பங்களை விட்டு விடுகிறேன் என்றும் வாக்குப் பண்ணுகிறேன். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாடுபட்டு அடைந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டில்லாத பேறு பலன்களைப் பார்த்து, என் பாவங்களை பொறுத்தருள மன்றாடுகிறேன். என் பாவங்களைப் பொறும் ஆண்டவரே, என் பாவங்களை பொறும் ஆண்டவரே, என் பாவங்களை எல்லாம் பொறுத்தருளும் ஆண்டவரே. ஆமென்.

நாம் நாள்தோறும் செபிக்கும் சந்தர்ப்பங்களில் இவ்வாறான பொதுச் செபங்களையும் உபயோகித்து இறை தந்தையிடம் செபிப்போம்.

**செயற்பாடு**

1. பொதுச் செபங்களை உபயோகிப்பதனால் கிடைக்கும் பயன்கள் இரண்டு எழுதுக.
2. கீழுள்ள செபங்களில் காணப்படும் சிறப்புக்களில் ஒன்றை எழுதுக.
   - அப்போஸ்தவர்களின் விசுவாசப் பிரமாணம்
   - உத்தம மனஸ்தாபச் செபம்.
   - பாஸ்கு காலத்து மூவேளைச் செபம்
3. உங்களுக்குத் தெரிந்த வேறு பொதுச் செபங்கள் ஐந்தின் பெயர்களை எழுதுக.



*வாழ்க்கைக்கு..........*

*ஞாயிறு ஒளிக்கதிர் உதிக்கையிலே திங்களின் தண்ணொளி மறைகிறதே பலரும் நாளின் பொழுதெல்லாம் பொதுச் செபத்தால் இயலும் வரை பிதாவைப் போற்றித் துதிப்போமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 செபங்களை உருவாக்குதல்

நாம் இயற்றிய செபங்கள் அல்லது மன்றாட்டுகளின் வழியாக எமது இதயத்தில் எழுகின்ற எண்ணங்களையும் மன்றாட்டுகளையும் உண்மையாகவே இறைவனிடம் வெளிப்படுத்தலாம். இதன் வழியாக எமக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவு வளர்ச்சியடையும். இது ஆழமான செப வாழ்வுக்கு எம்மை இட்டுச் செல்கிறது. இறைவனோடு அன்புறவு கொண்டு நட்புடன் செய்யும் உரையாடல் செபம் எனப்படும். இதற்காக மனப்பாடம் செய்த வாக்கியங்களை விட எமது உள்ளத்திலிருந்து எழுகின்ற எண்ணங்களையும் மன்றாட்டுக்களையும் உண்மையுடன் இறைவன் முன்னிலையில் வெளிப்படுத்துதல் மிகப் பலன்மிக்கதாகும்.

காண்பவை, காணாதவை யாவையும் படைத்த எல்லாம் வல்ல இறை தந்தையை நோக்கி எச்சந்தர்ப்பங்களிலும் செபிக்க வேண்டும். எனவே செபத்தின் வகைகளை நாம் அறிந்திருக்க வேண்டும்.

1. புகழ்ச்சி - இறைவனுக்குப் புகழ்ச்சி கூறும் செபம்
   உதாரணம்:- திருப்பலியின்போது செபிக்கப்படும் நற்கருணை மன்றாட்டு
2. நன்றி - இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆன்மீக, உடல்சார்ந்த அருள்களுக்காக நன்றி கூறிச் செபித்தல்
3. மன்னிப்பு வேண்டல் - நாம் செய்த பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டுதல்
4. வேண்டுதல்கள் - எமது ஆன்மீக உடல் நல தேவைகளுக்காக இறைவனிடம் வேண்டும் செபம்

இறைதந்தையை ஆராதித்து, அவரைப் புகழ்வது எமது கடமையாகும். நாமும் எம்மிடமுள்ள அனைத்தும் இறைமகிமையை வெளிப்படுத்துவதனால் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும்.

அதே போன்று இறை தந்தையால் எமக்கு அளிக்கப்பட்ட படைப்புக்கள், பெற்றோர் போன்ற அனைத்துக்காகவும் நன்றியுடையோராய் வாழ்வது செய்நன்றி மறவாத செயலாகும். நாம் எப்பொழுதும் தவறு செய்கின்றோம் இது இறைவனை மனம் நோகச் செய்கின்றது. இதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று எமக்குத் தேவையான அனைத்தையும் இறை தந்தையிடமே கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். எமது தேவைகளை இறைவன் அறிவார். எனினும் நாம் கேட்கும்போது இறைவன்பால் எமக்குள்ள நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வெளிக்காட்டுகின்றோம்.

நாம் பிறர்க்காகவும் செபிக்க வேண்டும். எனினும் நாம் கேட்கும் அனைத்தும் இறைவனுடைய விருப்பத்துக்கமையவே எமக்குக் கிடைக்கும்படி மன்றாட வேண்டும். எமது வேண்டுதல்களில் நன்மையானவற்றை மட்டுமே இறைவன் எமக்குத் தருகிறார். இச்செபத்தின் பண்புகளை எமது அன்றாட வாழ்வில் பயன்படுத்த வேண்டும்.

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள செபப் புத்தகம் திருப்பாடல் ஆகும். அதில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள செப வகைகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சில உதாரணங்களை இங்கே காணலாம். நாம் அவற்றைப் பின்பற்றி இறை தந்தையை நோக்கி எப்போதும் செபிக்கக் கற்றுக்கொள்வோம்.

**i.** *புகழ்ச்சிச் பாடல் (திருப்பாடல் 150)*

*''தூயகத்தில் இறைவனைப் போற்றுங்கள்!*
*வலிமை மிகு விண்விரிவில் அவரைப் போற்றுங்கள்!*
*அவர் தம் வல்ல செயல்களுக்காய் அவரைப் போற்றுங்கள்!*
*அவர்தம் எல்லையிலா மாண்பினைக் குறித்து அவரை போற்றுங்கள்!*
*எக்காளம் முழங்கியே அவரைப் போற்றுங்கள்!*
*வீணையுடன் யாழிசைத்து அவரைப் போற்றுங்கள்!*

**ii.** *நன்றி கூறுதல் - (திருப்பாடல் 92)*

*''ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று !*
*உன்னதரே! உமது பெயரைப் புகழ்ந்து பாடுவது நன்று*
*காலையில் உமது பேரன்பையும்*
*இரவில் உமது வாக்குப் பிறழாமையையும்*
*எடுத்துரைப்பது நன்று*

**iii.** *பாவ மன்னிப்புக்காக மன்றாடல் - (திருப்பாடல் 51)*

*''கடவுளே! உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும்!*
*உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத்*
*துடைத்தருளும். என் தீவினை முற்றிலும் நீங்கும் படி*
*என்னைக் கழுவியருளும்! என் பாவம் அற்றுப் போகும்படி*
*என்னைத் தூய்மைபடுத்தியருளும். ஏனெனில் ,என்*
*குற்றங்களை நான் உணர்கின்றேன்! என் பாவம் எப்பொழுதும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனக் கண் முன் நிற்கிறது.
உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்;
உன் பார்வையில் தீயது செய்தேன்......''

iv. **வேண்டுதல் - (திருப்பாடல் 5)**

''ஆண்டவரே, என் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்தளும்;
என் பெருமூச்சைக் கவனித்தருளும்.
என் அரசரே, என் கடவுளே, என் கெஞ்சும் குரலை
உற்றுக்கேளும்;..................
ஆண்டவரே, விடியற்காலையில் என் குரலைக் கேட்டருளும்;
வைகறையில் உமக்காக வழிமேல் விழி வைத்துக்
காத்திருப்பேன்..................

★ திருவிவிலியத்தைப் புரட்டி மேற்கூறப்பட்ட திருப்பாடலை முழுமையாக வாசியுங்கள்

**செயற்பாடு**

1. செப வகைகள் நான்கினதும் பெயர்களை எழுதுக.
2. கீழ்க்காணும் சந்தர்ப்பங்களுக்கேற்ற செபங்களை இயற்றுங்கள்

   i. முதல் வெள்ளித் திருப்பலிக்குப் பொருத்தமான விசுவாசிகள் மன்றாட்டுகள் 4.

   ii. உமது நண்பன் / நண்பிக்கு எதிராக முறைப்பாடு சொல்லியதற்காக மன்னிப்புக் கேட்கும் செபம்

   iii. உமது பிறந்த தினத்தில் இறைவனுக்கு நன்றி கூறும் செபம்.



***வாழ்க்கைக்கு...........***

*எச்செயலை செய்வதற்கு முன்னும் இறைதந்தையிடம் செபிப்பதை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 தியானம் செய்தல்

தியானம் செய்வதற்கு ஆயத்தமாகுங்கள்

i. கண்களை மூடுவோம்.

ii. எம்மை சூழக் கேட்கும் சத்தங்களுக்கு செவிமடுப்போம்.

iii. எமக்கு மிக அண்மையில் கேட்கும் சத்தங்களுக்கு செவிமடுப்போம்.

iv. இப்போது நாம் மூச்சை உள் வாங்கும் / வெளியே விடும் உணர்வுகளில் கவனத்தைச் செலுத்துவோம்.

v. மூச்சை உள் வாங்கும்போது நற்குணங்களையும் நாம் உள்வாங்குவதை நினைவிற்கொள்வோம்.

vi. மூச்சை வெளியே விடும் போது எம்மிலுள்ள தீய குணங்களும் எம்மிலிருந்து வெளியேறுவதைத் தியானிப்போம்.

vii. எமக்கு உயிரைத் தந்த இறைவனுக்கு இப்போது எமது அன்பை வெளிப்படுத்துவோம்.

viii. எமக்கு கேட்கின்ற குருவிகளின் சத்தம், காற்றின் மென்மையான இரைச்சல் ஆகியவற்றினால் இறைவனின் படைப்பைப்பற்றித் தியானிப்போம்.

ix. இப்படைப்புகளிலே மேன்மையான படைப்பாகிய உங்களைப் பற்றிப் பாடப்படும் இந்தப் பாட்டிற்குச் செவிசாயுங்கள்

இறை தந்தையின் அன்பை எமக்கு சொல்லித் தருகின்ற பெற்றோர்.

அஞ்சாதே அஞ்சாதே
நான் என்றும் உன்னோடு
எந்த துன்பம் வந்தாலும்
என் அன்பு உன்னோடு

குன்று அசையலாம் குகைகள் பெயரலாம்
உலகம் முழுவதும் உன்னை வெறுக்கலாம்
என்ன நிலைதான் ஆனாலும்
எந்தன் அன்பு மாறாது
அஞ்சாதே அஞ்சாதே
உன்னை நான் காப்பேன் - 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை குழந்தையை அணைக்க மறப்பாளோ
சின்னத் துன்பமும் நெருங்க விடுவாளோ
அன்னை உன்னை மறந்தாலும்
உன்னை நானோ மறவேனே
அஞ்சாதே அஞ்சாதே
உன்னை நான் காப்பேன்

("இறைவனைப் புகழ்வோம்" - பாடல் எண் 290 )

அன்பான பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு பாதுகாவலருக்கு நீங்கள் பெறுமதி மிக்கவர்கள். வைரத்தையும் மாணிக்கத்தையும் விட நீங்கள் மேலானவர்கள். நீங்கள் எந்நிலையில் இருந்தாலும் அவர்கள் உங்களை அன்பு செய்கின்றனர். இவர்களை உங்களுக்குத் தெரியும். ஆனால் நீங்கள் காணாத ஒருவர் உங்களை அன்பு செய்கிறார். அவர் தான் ஆண்டவர் இறைதந்தையே ஆவார்.

இறைதந்தை எங்களை அன்பு செய்கின்றாரா? அது எப்படி? "அது பற்றி எங்களுக்குத் தெரியாதே?" உங்களின் இதயத்தில் எழுகின்ற அத்தகைய கேள்விகளுக்கு பல பதில்கள் உள்ளன. மரம், செடி, பழங்கள், செல்லப் பிராணிகள் உள்ள அழகிய உலகில் பிள்ளையாக உங்களை படைத்தவரும், உங்களை அதிகம் அன்பு செய்கின்றவர்களை உங்களுக்குத் தந்தவருமான இறைதந்தை எல்லோரையும் விட உங்களை அதிகம் அன்பு செய்கின்றார். இந்த அன்பினாலயே உங்களுக்கு அவர்களைத் தந்தார். உங்களுக்கு கஷ்டங்கள் ஏற்படும் போது உங்களை அறியாமல் உங்களுக்கு உதவி செய்பவர் இந்த அன்புத் தந்தைதான்.

எம்மை அன்பு செய்பவர் மகிழ்ச்சி அடையும் விதத்தில் செயலாற்றுவது எமது கடமையாகும். அது நன்மையுமானது. இறைதந்தை எம்மை அன்பு செய்வதைப் போல நாமும் மற்றவர்களை அன்பு செய்வதன்மூலம் அவரை நாம் மகிழ்ச்சிப்படுத்தலாம். அவ்வாறு செய்யும்போது இறைதந்தை அதிகம் மகிழ்ச்சி அடைவார். எமது பெற்றோரை / பாதுகாவலரை அன்பு செய்து அவர்களுக்கு கீழ் படியும்போதும் இறைதந்தை அதிகம் மகிழ்ச்சியடைகின்றார். அவ்வாறே மற்றவர்களைப் பற்றியும் சிந்தியுங்கள். அவர்களுக்கு உதவி செய்யுங்கள். கைவிடப்பட்டவர்களுக்கும் உதவி செய்யுங்கள் அவர்களுக்காக செபியுங்கள் அவ்வாறாயின் இறைதந்தை மேலும் மகிழ்ச்சியடைவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x மூச்செடுத்த விதம் பற்றி சிந்தியுங்கள்

xi சூழ உள்ள சத்தங்களுக்கு செவிசாயுங்கள்.

xii மெதுவாகக் கண்களைத் திறவுங்கள்.

**செயற்பாடு**

1. உங்களை அன்பு செய்யும் உங்கள் அம்மா, அப்பா பாதுகாவலருக்கு உங்களின் அன்பை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் மூன்றைக் குறிப்பிடுக
2. பெற்றோருக்குக் கீழ்ப்படிய மனமில்லாதபோது உடனே இயேசுவை அழையுங்கள். உங்கள் அழைப்பை சுருக்கமாக எழுதுக.
3. நண்பருடன் சேர்ந்து தவறு செய்திருந்தால் கட்டாயம் பாவ சங்கீர்த்தனம் செய்ய வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.



*வாழ்க்கைக்கு......*

*உங்கள் வாழ்வில் சிறப்பான சந்தர்ப்பங்களில் செபிப்பதுபோல அன்றாட வாழ்வில் தியானம் செய்யுங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සිංහල වර්ණ මාලාව

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ |
| උ | ඌ | ඍ | ඎ | ඏ | ඐ |
| එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
| (අ)ං | (අ)ඃ | | | | |
| ක | ඛ | ග | ඝ | ඞ | ඟ |
| ච | ඡ | ජ | ඣ | ඤ | ඦ |
| ට | ඨ | ඩ | ඪ | ණ | ඬ |
| ත | ථ | ද | ධ | න | ඳ |
| ප | ඵ | බ | භ | ම | ඹ |
| ය | ර | ල | ව | | |
| ශ | ෂ | ස | හ | ළ | ෆ |

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படியுங்கள்.

பாடசாலையின் பெயர் :- ..........................................................................................

| | மாணவர் பெயர் | தரம் | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2016 | ........................ | ........ | ........ |
| 2017 | ........................ | ........ | ........ |
| 2018 | ........................ | ........ | ........ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කතෝලික ධර්මය 6 (දෙමළ)
2016/T/06/34/11,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E.P.D. (SALES DIVISION)
D01
1020036
CATHOLICISM -GR 6 (T)
Rs. 115.00